Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 71 • 18.12.2016



எழுக தமிழ் எதற்கு?



வடிவேலு பாணியில் வவுனியாவில் மோசடி!



இந்த வாரம் சுன்னாகம்!



தனது காலில் சுட்ட பாப்பா!

# புதிய அரசியலமைப்பு இதுதான்!



கசிந்தன முழு தகவல்களும்



# "ஜனசக்தி இன்ஷூரன்ஸ் தாமதமின்றி வழங்கிய காப்புறுதி நஷ்டஈட்டுத் தொகை நாம் முகம்கொடுக்க நேரிட்ட இருளிலிருந்து எம்மை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது"

1994 ஆண்டில், அதாவது இலங்கையில் தேநீர் பிரியர்கள் மத்தியில் தேயிலை பை பெரிதாக பாவனையில் இல்லாத காலகட்டத்தில், தேயிலை பை லேபிள் உற்பத்தியில் விசேடத் துணிவுடன் முதலீடொன்றை மேற்கொண்டு நாம் Flexiprint (Pvt) Limited நிறுவனத்தினை தாபித்து, தேயிலை பை தொழிற்துறையின் முன்னேற்றப் பாதைக்கு முக்கியப் பங்களிப்பை வழங்கினோம். தற்பொழுது துரித வளர்ச்சி அடைந்துள்ள தேயிலை பை தொழிற்துறை, தேநீர் பிரியர்களின் பல்வேறு ரசனை மற்றும் சுவைக்கேற்ப அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருவதோடு சிறந்த வளர்ச்சியை அடைந்து வருகின்றது. சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனம், இன்று 225 ஊழியர்களை கொண்டுள்ளதோடு தென்கிழக்கு ஆசியாவின் பாரிய தேயிலை பை லேபிள் உற்பத்தி நிறுவனமாக உள்ளது.

உலகப் பிரசித்தி பெற்ற எமது வர்த்தக வாடிக்கையாளர்களுக்கு இரண்டு தசாப்த காலமாக உயர் தர உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதுடன் அழியாத கீர்த்தி நாமத்தை பேணுவதற்குத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றோம். எமது உற்பத்திகளில் பெருமளவு ஐரோப்பா, மத்திய கிழக்கு, இந்திய துணைக்கண்டம் ஆபிரிக்கா மற்றும் நியுசிலாந்து உட்பட பல்வேறு கண்டங்கள் மற்றும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.






"ஜனசக்தி இன்ஷூரன்ஸ் நிறுவனமானது ஒரு படி முன்னே சென்று, இதனை தேசத்திற்கு ஆற்றும் பங்காக கருதி, எமது நிறுவனத்திற்கு விரைந்து உதவியது."

நிறுவன வரலாற்றில் முதற்தடவையாக, எமது வர்த்தக நடவடிக்கைகளை முற்றாக முடக்கும் பாரியதொரு அனர்த்தத்துக்கு நாம் முகம் கொடுக்க நேரிட்டது. கடந்த மே மாதம் 15ம் திகதி முதல் பெய்த கடும் மழையால் களனி கங்கை பெருக்கெடுத்ததன் விளைவாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணத்தினால் கொட்டிகாவத்தையில் அமைந்துள்ள எமது பிரதான களஞ்சியசாலை வளாகம் பாரியளவில் பாதிப்புக்குட்பட்டிருந்தமையே இதற்குக் காரணம். இதனால், ஒரு வாரத்திற்கு மேல் நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான கையிருப்புக்கள் இல்லாமல் அழிந்து போய் விட்டன. இதனால் எமது வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பித்து விட்டது.

அனர்த்தத்தின் பின்னர் எமது வர்த்தக நடவடிக்கைகளை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர நாம் பெருமளவில் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளை, எமது இடர் முகாமைத்துவ பங்காளியான ஜனசக்தி இன்ஷூரன்ஸ் நிறுவனம், ஏற்பட்ட இழப்புகளுக்குரிய முழுமையான காப்புறுதி நஷ்டஈட்டுத் தொகையை ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொண்ட உடனடி நடவடிக்கையானது, இவ்வாறான கொடூரமான நிலைமையிலிருந்து எமது நிறுவனம் மீண்டெழுவதற்கு பெரும் சக்தியாக அமைந்தது. **ஜனசக்தி இன்ஷூரன்ஸ் நிறுவனமானது ஒரு படி முன்னே சென்று, இதனை தேசத்திற்கு ஆற்றும் பங்காக கருதி, எமது நிறுவனத்திற்கு விரைந்து உதவியது.**

எந்த ஒரு வர்த்தகத் துறையினரும் இவ்வாறான பாரிய இயற்கை அனர்த்தத்தை அல்லது பாதிப்பை எதிர்பார்க்கமாட்டார்கள். ஜனசக்தியின் திறன் மற்றும் ஆளுமையின் வெளிப்பாட்டின் ஊடாக எம்போன்ற வர்த்தகத்துறைக்கு இயற்கை அனர்த்தத்திலிருந்து முழுமையாக மீண்டுவருவதற்கு முடிந்ததுள்ளதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான இழப்புக்களில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வதற்கும், நிறுவனம் என்ற ரீதியில் சுய ஆற்றலுடன் மீள எழுவதற்கும் பெரும் உதவியாக அமையும்.



திரு. உபேந்திர சதிஸ் அபேவிக்ரம
முகாமைத்துவ பணிப்பாளர்
Flexiprint (Pvt) Ltd

அண்மையில் சீரற்ற காலநிலையின் காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலையின் போது நாட்டின் பல்வேறு பாகங்கள் முற்றிலும் பாதிப்புக்கு உள்ளானதோடு, பொதுமக்கள் பெருந் துயரங்களுக்கு முகங்கொடுத்ததை நாம் நேரில் கண்டோம். இவ்வாறான அனர்த்தங்களின் போது எமது மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முன் வருவது காப்புறுதி நிறுவனமாகிய எமது கடப்பாடாகும்.

*காப்புறுதி நிறுவனமென்ற ரீதியில் நாம் தேசத்தின் நலன் கருதி முன் வருகின்றோம்.*
*அதுவே எமது கடமையாகும்.*

JANASHAKTHI
INSURANCE

Tel: +94 11 2303300 www.janashakthi.com

JANASHAKTHI
ActiveRISK
MANAGEMENT
Inspiring Continuity

Green Grass
Valampuri

THE VALAMPURI
A Small Luxurious Hotel in Jaffna

148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com







# 'டீல்' அமைச்சர்கள்!



கடந்த காலத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள்மீது நடவடிக்கைஎடுப்பதில் அரசு தயக்கம் காட்டுகிறது என்ற விமர்சனம் பகிரங்கமாக எழத் தொடங்கியுள்ளது. ஆட்சி மாற்றத்திற்கு உறுதுணையாக இருந்த வர்களே பகிரங்கமாக பேசும் விடயமாகி விட்டது. இந்த விடயம் அரச உயர்மட்டத் தினர் காதுகளிற்கு சென்றதையடுத்து, அதிரடி நடவடிக்கைக்கு தயாராவதாக தெரிகிறது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்றிலும் ஈடுபட்டுள்ளனர். கடந்தகால ஊழல் பெருச்சாளிகள் மீதான விசா ரணைக்குபங்கம்ஏற்படுத்தும்விதமான அழுத்தம் கொடுப்பவர்கள் பற்றிய பட்டியலொன்றும் தயார்செய்யப்பட்டுள்ளது. பட்டியல்படுத்தப் பட்டவர்கள் விரைவில் அமைச்சரவையிலிருந்து உருட்டிவிடப்பட வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிகிறது. சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன ஆகியோர் மீது ஜனாதிபதி, பிரதமருக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத் துள்ளது. சாகலவின் மீது அமைச்சர் மலிக் சமரவிக்கிரம கடுமையான குற்றச்சாட்டுக்களை வைத்துள்ளார். கோத்தபாய ராஜபக்சவையும் சேர் என்றே சாகல அழைப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அடுத்த வருட ஆரம்பத்தில் அமைச்சரவை மாற்றம் நடக்குமென எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்த மூவரின் அமைச்சு பதவியில் மாற்றம் நிகழுமென கூறப்படுகிறது. இதேவேளை, அமைச்சர் விஜயதாசா ராஜபக்சவிற்கும் புதிதாக உருவாக்கப்பட்ட பீரிஸ் தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் நெருக்க மான தொடர்பைபேணுவதுடன், அந்தகட்சியில் இணைவதற்கான சாத்தியங்கள் உள்ளதாக புலனாய்வுபிரிவு ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# சுற்றுலாவிற்கு மட்டும்!

யாழ்ப்பாணத்தின் மாதகல் பகுதியில் அமைந்துள்ள சம்பில் துறைப் பிரதேசத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் பெருமளவிலனான நிலங்கள் இருக்கின் றன. இந்தப் பகுதியில் பெரியளவிலான விகாரையொன்று ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. கடல்வழியாக அந்தப் பகுதிக்கு சங்கமித்தை வந்ததாக, சுற்றுலாவரும் சிங்கள மக்களுக்கு கடற்படையாலும் பௌத்தபிக்குகளாலும் கூறப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தற்போது அந்த விகாரை புனரமைப்பு வேலைகளும் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது இப்பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள் ளனர்.

அதனை அண்மித்த பகுதியில் தனியாருக்கு சொந்த மான நிலப்பரப்பில் கடற்படையினரால் மிகப் பிராமாண்டமான ஹோட்டலொன்றும் அமைக்கப்பட்டுள் ளமையும் குறிப்பிடத்தக்கது. விகாரை உள்ள பிரதேசத்தில் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபடவும் மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.இதனால் மீனவ குடும்பங்களும் பாதிகப்படுள்ளது.

# தட்டிவிடப்படும் தவராசா!

ஈ.பி.டி.பி அமைப்பிற்குள் எழுந் துள்ள உட்பூசல் உச்சத்தை எட்டியுள்ளதாக தெரிகிறது. கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் வடக்கு எதிர்கட்சி தலைவர் தவராசாவிற்கும் இடையிலான மோதலின் உச்சக்கட்டத்தில், தவராசாவை கட்சியை விட்டே நீக்கும் முடிவிற்கு ஈ.பி.டி.பி வந்துள்ளதாக நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத் துள்ளது.

ஈ.பி.டி.பி அமைப்பிற்குள் ஏற்பட்ட உட்கட்சி குழப்பம் அண்மையில் பகிரங்கமாக வெடித்து கிளம்பியது. தவராசா வகிக்கும் வடக்கு எதிர் கட்சி தலைவர் பதவியிலிருந்து அவரை விலக்கி விட்டு, கிளிநொச்சியை சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் தவநாதனிற்கு எதிர்கட்சி தலைவர் பதவியை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் மகிந்த அமரவீர விடம் ஈ.பி.டி.பி கோரிக்கை வைத்திருந்தது. எனினும், வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானவர்களின் ஆதரவு தவராசாசவிற்கு இருப்பதால் அவரை பதவியிலிருந்து விலக்க முடியாதென வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் அறிவித்தார். தவராசாவை எதிர்கட்சி தலைவர் பதவியிலிருந்து அகற்றும் முடிவுடன் இருக்கும் ஈ.பி.டி.பி எடுத்துள்ள அதிரடி முடிவு தவராசாவை கட்சியிலிருந்து நீக்குவது.

கடந்த சில வாரங்களின் முன் கட்சியின் உயர்மட்ட கலந்துரையாடலில், தவராசாவை கட்சியை விட்டு நீக்குவதென முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அடுத்துவரும் சில நாட்களில் இந்த தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்க ஈ.பி.டி.பி தீர்மானித்துள்ளது.





# உள்ளேயிருந்தது யார்?

நாட்டில் தற்போது பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் இல்லாததால் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களின் வாகனத் தொடரணியில் ஒளி எழுப்ப வேண்டிய அவசியமில்லையென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் குறிப்பிட்டிருந்தார். வாகனங்களின் பிரதான ஒளிவிளக்குகளை ஒளிரச்செய்தபடி போக்குவரத்து ஒழுங்குகளை பின்பற்றாமல் தொடரணிகள் செல்வதால் மக்கள் சிரமங்களை சந்திப்பதாக ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் கூற்று வெளியாகிய சில நாட்களிலேயே, சர்ச்சைக்குரிய சம்பவமொன்று நடந்து அது தொடர்பான புகைப்படம் ஒன்று இணையத்தளங்களில் பரவ ஆரம்பித்துள்ளது. பிரமுகர் ஒருவரின் வாகனத் தொடரணி போக்குவரத்து விதிமுறைகளை மீறியபடி பயணம் செய்யும் புகைப்படமே இது.

காலி திக்வெல்ல வீதியில் கடந்த 13ம் திகதி இந்த சம்பவம் நடந்துள்ளது. வாகனங்கள் முந்திச்செல்வதை தடை செய்யும் இரண்டை வெள்ளைக்கோடுகளை பொருட்படுத்தாமல், வீதியின் மறுபக்கத்தால் வாகன தொடரணி பயணம் செய்கிறது.

இந்த வாகன தொடரணி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினுடையது என ஒரு தகவல் வெளியாகியுள்ளபோதும், அதை சுயாதீனமாக உறுதிசெய்ய முடியவில்லை.




# திருவாதிரைக்கு கப்பலில் செல்லலாம்?

திருவாதிரை விழாவிற்காக யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்தின் காரைக்காலிற்கு கப்பல் சேவை மேற்கொள்ள இலங்கை, இந்திய அரசுகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியிட்டுள்ளார் சிவசேனை அமைப்பின் இணை தலைவர்களில் ஒருவரான மறவன்புலவு க.சச்சிதானந்தம். வெளிவிவகார அமைச்சில் இருந்து தொலைபேசியில் தம்முடன் கலந்துரையாடல் நடத்திய, இந்த தகவலை தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் முகநூலில் பதிவொன்றை வைத்துள்ளார். அதில் "இலங்கை அரசு நடத்திய நாவலர் விழா 3ம்நாள் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினேன். வடமாகாண ஆளுனரும் அதில் கலந்து கொண்டார்.

பௌத்தர்கள் வழிபாட்டிற்கு காயா செல்ல அரசு உதவுகிறது. இஸ்லாமியர்கள் மக்கா செல்லவும், கிறிஸ்தவர்கள் எருசலேம் செல்லவும் உதவுகிறது. அதுபோல, இந்துக்கள் திருவாதிரைக்கு சிதம்பரம் செல்ல அரசு உதவ வேண்டுமென்றேன்.

டிசம்பர் 27 தொடக்கம் ஜனவரி 13 வரை காங்கேசன்துறையிலிருந்து கடலூருக்கு அல்லது நாகபட்டினத்துக்கு கப்பல் சேவை ஏற்பாடு செய்யுமாறு மறுநாள் ஆளுனருக்கு கடிதமொன்றை சமர்ப்பித்தேன். இந்த கடிதத்தை ஆளுனர் வெளிநாட்டமைச்சர், கலாசார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர்களிற்கு அனுப்பினார்.

இதை தொடர்ந்து கடந்த 14ம் திகதி வெளிநாட்டமைச்சில் இருந்து என்னை தொலைபேசியில் அழைத்து தமிழில் உரையாடினார்கள். நாகபட்டினம், கடலூருக்கு கப்பல் விட இந்திய அரசு சம்மதிக்க வில்லை, காரைக்காலிற்கு கப்பல் விட ஒப்புக்கொள்கிறது. அது ஏற்றதா என விசாரித்தார்கள். கப்பலில் பயணிப்பவர்கள் பணம் செலுத்துவார்களா, அடுத்த வருடம் ஆரம்பிக்கலாமா என கேட்டார்கள். இந்த வருடமே ஆரம்பிக்குமாறு கேட்டேன். ஆவண செய்வதாக சொல்லியுள்ளார்கள்" என குறிப்பிட்டுள்ளார்.






▶ கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பொறியியலாளர் ஷிப்லி பாறூக்கினால் காத்தான்குடி மானாருல் ஹுதா பள்ளிவாயலுக்கான ஒலி பெருக்கி சாதனங்களை வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் காத்தான்குடி முன்னாள் நகர முதல்வர் மர்சூக் அஹமட் லெப்பை, காத்தான்குடி இளைஞர் காங்கிரஸின் அமைபாளர் இல்மி அஹமட் லெப்பை, பாவலர் சாந்தி முஹைதீன் ஹாஜியார், மானாருல் ஹுதா பள்ளிவாயலின் நிருவாகிகள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் பிரதேச மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் காணாமல் ஆக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்த நிலையில் கிழக்கு பல்கலையின் விவசாயப் பீடத்தினால் நினைவு அஞ்சலி நிகழ்வு கிழக்கு பல்கலை கழக விவசாயப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பி.சிவராசா ஏற்பாட்டில் நடைபெற்றது. பிரதி உபவேந்தர் கலாநிதி ஏ.கருணாகரன் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். ▶







▶ முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு பகுதியில் சத்தமில்லாமல் நடக்கும் சிங்கள குடியேற்ற முயற்சிகளை ஒளி வடிவில் ஆவணப்படுத்தியுள்ளது யாழ் ஊடகஅமையம். இருளுள் இதயபூமி என்ற பெயரில் ஒளிஆவணமொன்றை தயாரித்து மக்கள் பிரதிநிதிகளிடம் கையளித்துள்ளது.

வன்முறையற்ற மகிழ்வான குடும்பம் எனும் தொனிப்பொருளில் குடும்பத்தில் சமத்துவம், சமாதானம் பேணி சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழித்திடும் 16 நாள் ஜசாக்கின் செயற்திட்டம் அண்மையில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. ▶










▶ வவுனியா உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், வவுனியா தினச்சந்தையில் மறைந்த தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அஞ்சலி நிகழ்வு நடந்துள்ளது. வடமாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. ரீ.கே. இராஜலிங்கம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கச் செயலாளர், உறுப்பினர்கள பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# திரைவிலகும் நேரம்

இலங்கை அரசியலில் புதிய காட்சியொன்று அரங்கேற ஆரம்பிக்கிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பாக செயற்பாடுகளின் இறுதிக்கட்ட காட்சிகள் இனி அரங்கேறப்போகின்றன.

ஆட்சி மாற்றம் உருவானதிலிருந்து தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள்ளிருந்த அதிருப்தியாளர்கள், தமிழ்தேசிய மக்கள் முன்னணியினர் போன்றவர்கள் முன்வைத்த பிரதான குற்றச்சாட்டு பூடகமாக செயற்படுகிறார்கள் என்பது. அரசியலமைப்பு உருவாக்கத்தில் கூட்டமைப்பிற்குள் உரையாடல் நடக்கவில்லை, மக்களிற்கு விடயங்கள் சொல்லப்படவில்லையென பகிரங்கமாக குற்றம்சுமத்தப்பட்டது.

அரசியலமைப்பு உருவாக்க பணிகள் இரகசியமாக நடக்கிறது, மக்களின் உரிமைகளை அடகு வைக்க முடியாது, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம் என்ற பேச்சின் ஒரு அமைப்பு வடிவமாகவே தமிழ் மக்கள் பேரவை உருவானது. பின்னர் யாழில் எழுக தமிழ் நடந்தது. எழுக தமிழின் கோசங்கள் வேறாக இருந்தாலும், அதன் உள்அரசியல் அரசியலமைப்பு உருவாக்கத்தில் சம்பந்தப்பட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பின் தரப்புக்களை சவாலுக்குட்படுத்துவதே.

இப்பொழுது கிழக்கிலும் எழுக தமிழ் ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த சமயத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பான தகவல்கள் வெளிவர ஆரம்பிக்கின்றன. இந்த நீண்ட மௌனக்காலகட்டத்தை தீபமும் போதியளவு விமர்சனத்திற்குட்படுத்தியுள்ளது. அரசியலமைப்பு உருவாக்க பணிகளை பகிரங்கமாக மேற்கொள்ள முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் தமிழ்தேசிய கூட்டமைப்பாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி வந்தோம். எல்லாவற்றையும் விட, இந்த அரசியலமைப்பின் நன்மையையே, தீமையையோ அனுபவிக்கப்போகும் தமிழ்மக்களிற்கு உள்ளடக்கம் வெளித்தெரிய வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.

அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான வழிநடத்தல் குழுவின் அறிக்கை இந்த மாதம் வெளியாகுமென கூறப்பட்டு, பிற்போடப்பட்டுள்ளது. எனினும், உத்தேச அரசியலமைப்பின் உள்ளடக்க வரைவு தொடர்பான தகவல்களை தீபம் பெற்று இந்த இதழில் வெளியிட்டுள்ளது.

எமக்கு கிடைத்த தகவல்களின்படி அரசியலமைப்பின் உள்ளடக்கம் தொடர்பாக தமிழ்தேசிய கூட்டமைப்பு மக்களுடன் பேச தயாராகியுள்ளது. "உங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய நாம், இதனை பெற்றுத்தந்துள்ளோம்" என அரசியலமைப்பின் வரைபு உள்ளடக்கத்துடன் மக்களை சந்திக்க தயாராகிறார்கள். மறுவளமாக, இதுவரை அரசியலமைப்பு தொடர்பாக வீறாப்பாக பேசி வந்த தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் மௌனமாக தொடங்குகின்றன. தற்போதைய வரைபுடன் சிங்கள மக்களை சந்திப்பதில் அவை தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. இது நல்ல அறிகுறியல்ல.

தமிழர்கள் மத்தியில் பேசக்கூடியதை சிங்களவர்கள் மத்தியில் பேச முடியாமலும், சிங்களவர் மத்தியில் பேச முடிவதை தமிழர் மத்தியில் பேச முடியாமலும் இருக்கும்வரையில் நிரந்தர அரசியல் தீர்வுக்கான நேர்வழிப்பாதை சிரமமாகத்தான் இருக்கப்போகிறது.

அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு சமாந்தரமாக செய்ய வேண்டிய பணிகளிலொன்று, மக்களை அதற்காக தயார்ப்படுத்துவது. ஆனால் இலங்கைத்தீவில் அது முழுமையாக நடக்கவில்லை. அரசியல் தீர்வு முயற்சிகளை எதிர்ப்பவர்கள்தான் மக்களை தயார்செய்வதைதான் நாம் காண முடிகிறது. இது அரசியல் தீர்வு முயற்சிக்கு நல்ல அறிகுறியல்ல. வடக்கிலோ தெற்கிலோ இனவாதம்பேசி, அரசியல் தீர்வு முயற்சிகளை குழப்ப முயல்பவர்களை சட்டத்தின் துணையுடன் எதிர்கொள்ள வேண்டும். அதற்கு புதிய இனவாத எதிர்ப்பு சட்டமூலங்கள் அவசியம்.

இனங்களிற்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி, ஒன்றுபட்ட இலங்கையை கட்டியெழுப்ப வேண்டுமெனில் பயங்கரவாத தடைச்சட்டத்தை வடிவமாற்ற வேண்டிய அவசியமே கிடையாது. இனவாத பேச்சு, நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பொறிமுறையே அவசியம்.

இப்போது உருவாக்கப்படும் அரசியலமைப்பில் தமிழர்கள் முழு நிறைவடைய முடியாது. தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு, வடக்கு கிழக்கு தமிழர்களின் பூர்வீக நிலமாக அங்கீகரிக்கப்படவில்லை. இனப்பிரச்சனைக்கான தீர்வு ஏற்பாடுகள் தமிழர்களிற்கான விசேட ஏற்பாடுகள் கிடையாது. இந்தியஇலங்கை உடன்படிக்கை இனப்பிரச்சனை தீர்விற்கான சிறந்த அடித்தளமென்போரும் உள்ளனர். ஆனால், அது தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வை விசேடமாக அணுகாமல், முழு இலங்கைக்குமான மாகாணசபை நிர்வாகத்தை கொண்டுவந்தது.

அதேபோன்ற ஒரு நிலவரம்தான் இப்போது. அதற்கே தென்னிலங்கை பிரதான கட்சிகள் இவ்வளவு தயங்குகிறார்கள். இந்த தயக்கத்தை தென்னிலங்கை கடக்க வேண்டும். அவர்கள் எவ்வளவு வேகமாகவும், சாதுரியமாகவும் கடக்கிறார்களோ அவ்வளவிற்கு தமிழர் பிரச்சனை இலகுவாக தீர்க்கப்படும்.

எந்தவகையான அரசியலமைப்பை உருவாக்குகிறோம் என்று தமிழ்தேசிய கூட்டமைப்பு பேச ஆரம்பிக்கட்டும். அவர்கள் பேச தயாராவதை தமிழர்கள் குழப்பமின்றி வரவேற்க வேண்டும். அவர்கள் பேசுவதுகூட தென்னிலங்கை தரப்புக்களை தயக்கம் களைந்து துணிந்து களமிறங்க உந்துசக்தியாகலாம்.

**தீபம்**

197, அரசடிவீதி, யாழ்ப்பாணம்

ஆசிரியர்பீடம்: 0768255562

விளம்பரம்: 0768255560, 0768255567

விநியோகம் 0768255563

செய்திகளிற்கு: deepamdesk@gmail.com

செய்திகளை அறிந்திட: deepamnews.lk

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.

0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**மாவை சேனாதிராஜா**
**– தலைவர், தமிழரசுக்கட்சி**

ஒற்றையாட்சியின் மூலம் சமஷ்டி பண்புகளை பெற முடியாது. ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ள கூட்டமைப்பும் தயாரில்லை. 13வது திருத்தச்சட்டம் தொடர்பாகவோ, மாகாணசபையின் அதிகாரம் குறித்தோ பேச வேண்டிய தேவை கூட்டமைப்பிற்கு கிடையாது. வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பான எமது நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் ஏற்கனவே கூறிவிட்டோம். கட்சியின் தலைவர் அல்லாத டிலான் பேரேரா போன்றவர்களிற்கு நாம் பதில் சொல்லிக்கொண்டிருக்க தேவையில்லை.




**ஹசன் அலி**
**– ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

கட்சியின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவர் என்ற வகையில் கட்சியின் எதிர்காலம் முக்கியமானதாகும். முகத்துடன் கோபித்துக் கொண்டு மூக்கை வெட்டிக் கொள்ளும் நிலைப்பாட்டில் நானில்லை. எனவே கட்சிக்குள் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு எதிராக ஒருபோதும் செயற்பட மாட்டேன். கட்சியின் பிரச்சிணைகளை தீர்த்துக் கொள்ள முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராகவே உள்ளேன். அதேபோன்று எனக்கு எதிராக இடம்பெற கூடிய விடயங்களை மக்கள் பார்த்துக் கொள்வார்கள்.



**மஹிந்தானந்த அளுத்கமகே**
**– எம்.பி, கூட்டு எதிரணி**

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நாம் அமைத்தபோது, மோசடி நடப்பதாக கூச்சல் போட்டார்கள். எனினும், இப்போது நாளாந்தம் 200 கப்பல்கள் அந்ததுறைமுகத்தினூடாக பயணிக்கின்றன. வருமானம் ஈட்டும் துறைமுகமாக மாறியுள்ளது. பெறுமதி வாய்ந்த இந்த துறைமுகத்தை சீன நிறுவனம் ஒன்றிற்கு விற்றுள்ளார்கள். துறைமுகத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு தெரியாமலே இது நடந்துவிட்டது. இந்த பேச்சுக்கள் ஹொங்ஹொங்கில் நடந்துள்ளது. 100 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடியாக பரிமாற்றம் செய்யப்பட்டும் விட்டது.



**ஜீ.எல்.பீரிஸ்**
**– தலைவர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி**

புதிய அரசியலமைப்பு சட்டத்தை கொண்டுவர முடியாதென்பதை அரசாங்கம் நன்றாக தெரிந்து வைத்துள்ளது. அதனை மறைப்பதற்காகத்தான் அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் என்ற சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கிறார்கள். இது ஆபத்தான சட்டம். இதனை யாரும் ஆராயவில்லை. இந்த அமைச்சின் கீழ் பல அமைச்சுக்களை கொண்டு வருவார்கள். மீண்டும் அமைச்சர் உள்ளிட்ட சில அமைச்சர்கள் பதவியையும் இழக்கலாம். சுதந்திரக்கட்சி, ஜனாதிபதியின் அதிகாரங்கள் இல்லாமல் போகக்கூடும்.



**பொ.ஐங்கரநேசன்**
**-- விவசாய அமைச்சர், வடமாகாணசபை**


மாகாணசபையின் அடையாளமாக உள்ள மாகாண மரம், பூ, பறவை, விலங்கு ஆகியன மாகாண சபையை நாம் பொறுப்பேற்க முன் தீர்மானிக்கப்பட்டு விட்டது. மாகாண மரமாக மருதமரம், மாகாண பறவையாக புழுனி, மாகாண விலங்காக ஆண் மான் ஆகியன தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவை எமது மாகாணத்திற்கு பொருத்தமற்றவையாக உள்ளது. எனவே, இவற்றை மீள்பரிசீலனை செய்து மாற்றியமைக்க சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## எண்ணிக்கை — இலங்கை - நவம்பர்

| | |
|---|---|
| 39 | மனிதப்படுகொலை |
| 64 | கொள்ளை |
| 153 | வீடு உடைத்தல் |
| 198 | பாலியல் அத்துமீறல் |

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

editor@deepam.lk




# மலசலகூடத்தை காணோம்!

## வடிவேலு பாணியில் வவுனியாவில் மோசடி!

வன்னிமது

வடிவேலுவின் பிரபல நகைச்சுவையொன்றுள்ளது. பொலிஸ்காரர் ஒருவரை அழைத்து சென்று இங்கிருந்த கிணற்றை காணவில்லையென முறைப்பாடு செய்வார். இப்படியொரு அதகளத்தை கேள்வியேபட்டிருக்காத பொலிஸ்காரர் அன்றுடன் பொலிஸ்வேலையையே உதறி விட்டு வீட்டுக்கு சென்றுவிடுவார்.

இப்படியொரு தலைசுற்றல் சம்பவம் வவுனியாவில் நடந்துள்ளது.

வவுனியாவில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் பெரும் முறைகேடு நடந்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. வடிவேலு காட்டிய கிணற்றைப் போல, வவுனியாவில் ஒரு மலசலகூடம் உள்ளதாம். அதைவிட, கட்டிட புனரமைப்பு உள்ளிட்ட பல பணிகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாக கணக்காய்வு திணைக்களத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலைய புனரமைப்பு உள்ளிட்ட பணிகளிற்காக ஒதுக்கப்பட்ட நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளதென்கிறது கணக்காய்வு திணைக்கள தகவல்கள். செய்யாத வேலைகளை செய்ததாக வடிவேலு பாணியில் கணக்கு முடிக்கப்பட்டுள்ளதாம்!

வவுனியா தெற்கு பாடசாலை வேலைகள் பொறியியலாளர் இந்த மோசடிகள் தொடர்பாக கண்டறிந்து வலயக்கல்வி பணிப்பாளருக்கு 09.11.2016 அன்று கடிதம் எழுதியுள்ளார். அந்தக்கடிதம் ஊழல், மோசடியை அம்பலப்படுத்தியுள்ளது. ஒப்பந்த வேலைகள் செய்யப்படாதபோதும், செய்ததாக கணக்கு காட்டப்பட்டு பணம் பெறப்பட்டுள்ளது. அப்படி பெறப்பட்ட பணம் 3,72,779 ரூபா!

இந்தப்பணத்தை பெற்றுள்ளபோதும் அதற்கான பணிகள் நடக்கவில்லையென்கிறார்கள். செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தின் ஆசிரிய மத்திய நிலைய புனரமைப்பு, மலசலகூடம் அமைத்தல், தளபாட திருத்தம், நடமாடும் சேவைகளுக்கான திருத்த வேலைகள் உள்ளிட்ட ஐந்து வேலைத்திட்டங்களிற்காக 16,00,032 ரூபா நிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டது.

இந்த நிதியில் 60X30 அடி விஸ்தீரணமான ஆசிரியர் மத்தியநிலைய புனரமைப்பு வேலைகளிலேயே மோசடி நடந்துள்ளது. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஊடாகவே இந்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தரமற்ற மின்விசிறி, பழைய கூரை, மரம் என்பவற்றை பாவித்து மோசடி நடந்துள்ளதென்றும், இதன் மூலம் 3,72,779 ரூபா மோசடி செய்யப்பட்டிருப்பதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, இந்த ஐந்து வேலைத்திட்டங்களிற்கும் கூலியாக நாளொந்தம் 10,000 ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாக கணக்கு காண்பிக்கப்பட்டுள்ளது. இது அதிகமான தொகையென்று கூறி, பாடசாலை அதிபரிடம் கணக்காய்வு திணைக்களத்தினர் விளக்கம் கோரியுள்ளனர். இதற்கு அதிபர் விளக்கம் அளிப்பதைவிட, குழுவொன்றை அமைத்து ஊழல் நடந்ததா என்பதை கண்டறிவதே சிறந்ததென வலயக்கல்விப்பணிப்பாளர் முடிவு செய்துள்ளார். க.பொ.த சாதாரணதர பரீட்சைகள் முடிந்ததும் அந்த குழு அமைக்கப்படவுள்ளது.

இந்த மோசடிகளில் சம்பந்தப்பட்டவர்கள் என பொறுப்பான அதிகாரிகளாக இருந்த மூவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதில் இருவர் ஓய்வுபெற்றுவிட்டனர்.

அதிபருக்கு எதிராக இன்னொரு சர்ச்சையும் வெடித்துள்ளது. வேறொரு நிதி ஒதுக்கீட்டில் பாடசாலையில் மலசலகூடம் அமைத்ததில் இன்னொரு சர்ச்சையும் உருவாகியுள்ளது. 27.02.2016 இல் தொடக்கம் 10.03.2016 வரை மலசலகூட அமைத்தல் மற்றும் திருத்த வேலைகளிற்காக வவுனியா துடரிக்குளத்தை சேர்ந்த ஒருவருக்கு 157,000.00 ரூபாவிற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலை நடைபெற்றுள்ளது. இதற்கான முற்பணமாக 59,000.00 ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளது. வேலையும் பூரணமாக முடிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் குறித்த ஒப்பந்தக்காரர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டதாகவும், சிகிச்சையை முடித்துவிட்டு சில நாட்கள் கழித்து அதிபரிடம் சென்று மிகுதி பணமான 98,000.00 ரூபாயை கேட்ட போது, ஒப்பந்தக்காரர் வர தாமதமாகிமையால் திருப்பி அனுப்பிவிட்டதாக கூறியுள்ளார்.

ஒப்பந்தம்செய்யப்பட்டுபூரணமாகவேலை செய்து முடிக்கப்பட்ட வேலைகளிற்கான நிதியை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய ஒப்பந்தக்காரருக்கு வழங்காமல் திருப்பியனுப்பியதாக கூறியிருப்பது முறையானதா என்ற கேள்வி எழுந்துள்ளது.


இது தொடர்பாக ஒப்பந்தக்காரரால் வலயக்கல்விப்பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக முறையிட்டுள்ளதுடன் செட்டிக்குளம் பிரதேச செயலாளர், மனத உரிமை ஆணைக்குழு ஆகியவற்றில் முறைப்பாடுபதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடமாகாண ஆளுனர் செயலகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு அறியத்தருமாறு கேட்கப்பட்டுள்ளது.


**ஒப்பந்த வேலைகள் செய்யப்படாதபோதும், செய்ததாக கணக்கு காட்டப்பட்டு பணம் பெறப்பட்டுள்ளது. அப்படி பெறப்பட்ட பணம் 3,72,779 ரூபா!**


ஆசிரியர் மத்திய நிலைய புனரமைப்பில் மோசடி மற்றும் இப் ஒப்பந்த வேலைத்திட்டத்திற்கான பணம் வழங்கப்படாமை தொடர்பாக வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் இராதகிருஸ்ணனை தொடர்பு கொண்டபோது, அவர் எதையும் பேச மறுத்துவிட்டார். ஆசிரியர் மத்திய நிலைய மோசடி தொடர்பான அலுவலக ஆவணத்தை கசியவிட்ட நபரை தேடுவதாகவும் கூறினார்.

வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலய அதிபர் தர்மரட்ணத்தை தொடர்பு கொண்ட போது தமது தரப்பு விளக்கத்தை அளித்தார். 'இது தொடர்பாக என்னிடம் யாருமே விளக்கம் கேட்கவில்லை. விளக்கம் கேட்கும் பட்சத்தில் அதற்குரிய விளக்கங்களை அளிக்கத்தயார்' என்றார்.

மோசடி செய்யப்பட்ட நிதியை மீளப்பெற நடவடிக்கை எடுத்துள்ளதாக பாடசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் கூறினார்கள் ஆனால் அது எவ்வளவு சாத்தியமானதென்பது அடுத்த கேள்வி. இவையெல்லாவற்றையும் விட, இந்த மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் சரியானமுறையில் அடையாளம் காணப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்களா என்பதே பெரிய கேள்வி!


GOVERNOR'S SECRETARIAT
NORTHERN PROVINCE




HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

# எழுக தமிழ் எதற்கு?

நம்மாழ்வார்

தமிழ்மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் வரும் ஜனவரி மாதம் மட்டக்களப்பில் எழுக தமிழ் பேரணி நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமான பேரணியொன்றை நடத்திய உற்சாகத்துடன் கிழக்கில் பேரணி நடத்துவதற்கான ஏற்பாடுகளில் எழுகதமிழ் ஏற்பாட்டுகுழு தீவிரமாக இறங்கியுள்ளது.

இறுதிக்கட்ட தகவல்களின்படி, எழுகதமிழ் ஏற்பாடுகளிற்காக மட்டக்களப்பு நகரில் வீடு ஒன்றை வாடகைக்கு பெற்றுள்ளனர். யாழில் நடந்த எழுகதமிழ் பேரணிக்காக பத்து இலட்சம் ரூபாவிற்கு சற்றுமுன்பின்னான தொகை செலவாகிய அடிப்படையில், மட்டக்களப்பு எழுக தமிழ் ஏற்பாடுகளிற்காக அண்ணளவாக பத்து இலட்சம் ரூபா செலவாகலாமென ஏற்பாட்டுகுழு எதிர் பார்க்கிறது. இதற்கான நிதியின் பெரும்பகுதி புலம்பெயர் தரப்புக்களிலிருந்து அனுப்பப்பட்டு விட்டதாகவும் தெரிகிறது.

ஆகவே, மட்டக்களப்பில் எழுக தமிழை ஒருங்கிணைப்பவர்களிற்கு நிதி அழுத்தம் இருக்காது என தெரிகிறது. ஆனால், யாழ்ப்பாணத்தை போன்ற வெற்றிகரமான பேரணியொன்றை நடத்த முடியுமா என்ற பதற்றம் ஏற்பாட்டாளர்களிடம் இருப்பதாக தெரிகிறது.

தமிழ் மக்கள் பேரவை மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், பொதுஅமைப்புக்கள் கூட்டிணைந்து செய்த முதலாவது பொது நிகழ்வு மட்டக்களப்பில்தான் நடத்தப்பட்டது. அது முத்தமிழ் விழா. அந்த நிகழ்வில் ஒப்பீட்டளவில் குறைவான மக்கள்தான் கலந்துகொண்டனர். முத்தமிழ் விழா சமயத்தில் மட்டக்களப்பின் பிரபல்ய ஆலயமொன்றின் தீர்த்தோற்சவம் நடந்ததும் ஒரு காரணமென்கிறார்கள்.

முத்தமிழ் விழாவிற்கு சுமார் 25 இலட்சம் ரூபா செலவிடப்பட்டது. இந்த பணமும் புலம்பெயர் அமைப்புக்கள், செயற் பட்டாளர்கள், ஆதரவாளர்களிடமிருந்து பெறப்பட்டதுதான். ஆட்கள் குறைவாக கலந்துகொண்ட ஒரு கலை விழாவிற்கு எதற்கு இத்தனை பணம்? இந்த கேள்வி ஏற்பாட்டுகுழுவிடமும் எழுந்த போதுதான், பணமோசடி நடந்திருப்பது வெளிச்சத்திற்கு வந்தது. அவன் சத்தியதாஸ் பெற்றுக்கொண்ட பணத்திற்கு பொறுப்புகூறாமல் தொடர்பு களை துண்டித்துக் கொண்டுள்ளார்.

இந்த மோசடி தமிழ் மக்கள் பேரவையை பலவீனப்படுத்தவில்லை. செயற்பாட்டி யக்கமொன்றின் ஆரம்பகட்டத்தில் பெரும் பணமோசடி நடந்தால் அந்த இயக்கம் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திண்டாடிவிடும். இதற்கு உதாரணம் தமிழீழ விடுதலை இயக்கங்கள். இதனால்தான் அவர்கள் வேறுவழியின்றி வங்கிக்கொள்ளைகளில் ஈடுபட்டனர். அந்த கொள்ளைக்கு ஒரு தத்துவார்த்த விளக்கம் வேறு சொல்லி "பணம் கையகப்படுத்தல்" என்ற அர்த்தத்தையும் உருவாக்கினார்கள்.

ஆனால் இப்படியான நெருக்குவாரமொன்றும் தமிழ் மக்கள் பேரவைக்கு, அல்லது எழுக தமிழ் ஏற்பாட்டு குழுவிற்கு நிகழவில்லை. காரணம் அவர்கள் புலம் பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் தத்துப்பிள்ளைகளாக இருப்பது'

மக்களின் உரிமையை முன்னிறுத்திய செயற்பாட்டு இயக்கமொன்று' இன்னொருவரின் தத்துப்பிள்ளையாக இருப்பது தத்துவார்த்தரீதியில் ஆபத்தானது. ஈழத் தமிழர்களின் கடந்த 35 வருட ஆயுதப் போராட்டத்திலேயே இதற்கு நிறைய உதாரணங்கள் உள்ளது. இந்திய அரசும், உளவுஅமைப்பும் தமிழ் ஆயுதக்குழுக்களை கையாண்டு, சகோதர யுத்தத்தை ஏற்படுத்தி, அதனாலேயே ஆயுதப்போராட்டகளைசாரத்தில் சீரழிவுகளை ஏற்படுத்தியிருந்தது!

எண்பதுகளில் உருவான ஆயுதப் போராட்ட இயக்கங்கள் எல்லாம் தன்னெழுச் சியானவை. மக்களின் விடுதலையை ஆத்மார்த்தமாக விரும்பிய இளைஞர்கள்தான் அதன் அங்கத்தவர்கள். அந்த இயக்கங்களையே அதன் பராமரிப் பாளர்கள் வழிதவறிய ஆடுகளாக்கினார்கள். இப்பொழுது தமிழ் மக்கள் பேரவையையும் புலம்பெயர் தீவிர அமைப்புக்கள் தத்தெடுத் துள்ளன. இன்னும் விளக்கமாக சொன்னால், தமிழ் மக்கள் பேரவையென்பது ஆயுத இயக்கங்களை போல தன்னெழுச்சியானது அல்ல. அதன் பராமரிப்பாளர்கள் இங்கே பதியம் செய்தது.

தீவிரம் பேசும் புலம்பெயர்ந்த அமைப் புக்கள்தான் தமிழ் மக்கள் பேரவையின் தோற்றம், செயற்பாடுகளின் பின்னணியில் உள்ளவர்கள். முதல்வர் விக்னேஸ்வரனையும் அவர்கள் தத்தெடுக்க விரும்பினார்கள். முதல்வருடன் நெருங்கியும் வந்தார்கள். தமிழரசுக்கட்சி செயற்பாடுகளால் கூட்ட மைப்பிற்குள் எழுந்த அதிருப்தியணிக்கு முதல்வர் தலைமை தாங்குவதை போன்ற தோற்றம்ஏற்பட்டது. தமிழர் உரிமைவிடயங் களில் முதல்வரின் திடீர் உணர்வுபூர்வ மாற்றம் என்பன அந்த புலம்பெயர் அமைப்புக்களின் கிட்டவாக முதல்வரை அடித்து' சென்றது.

ஒரு சமயத்தில், முதல்வர் முழுவதும் அவர்களின் தத்துப்பிள்ளையாகி விடுவார் என்பதை போன்ற சூழ்நிலைதான் இருந்தது. அப்போது முதல்வர் அரசியல்ரீதியாக சில தவறுகளையும் விட்டிருந்தார். இரண் டையும் சேர்த்து பார்த்தால், அப்போது முதல்வர் "முழுமையான அரசியல் வாதி"யாகவில்லையென கொள்ளலாம். எனினும், பின்னர் அவர் சுதாகரித்துக் கொண்டார். இறுதியாக பிரித்தானியாவிற்கு முதல்வர் சென்றது; அதன் பின்னர் அவரது சொல் செயல்களில் உள்ள மாற்றம் அவரது பட்டறிவை காட்டுகிறது. பிரித்தானியாவில் முதல்வரை அழைத்தவர்கள், அவர் பேசியது, அங்கு நடந்து கொண்டதை ரசிக்கவில்லை. அவருடன் தொடர்புகளை குலைத்துவிட்டார்கள் என்கிறார்கள்.

தமிழ் மக்கள் பேரவை ஒரு தன்னெழுச்சியான அமைப்பில்லையென்பதே ஆபத்தானதுதான். வெளியாரின் நிதியுதவியில், வெளியாரின் செயற்பாட்டு நிகழ்ச்சி நிரலில் இயங்கும் ஒரு அமைப்பு ஆரோக்கியமானதல்ல என்பது ஒரு வாதம். அதனை இப்போது ஓரமாக வைத்துவிட்டு, இன்னொரு புள்ளியிலிருந்து நகர்வோம்.

தமிழ் மக்கள் பேரவை உருவான சமயத்தில், அதை காலத்தின் தேவையாக உருவகித்தார்கள். தமிழ்தேசிய கூட்டமைப்பிற்குள் தமிழரசுக்கட்சி ஏகபோகம் செய்ய ஆரம்பித்த சமயம். தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவையான கூட்டமைப்பின் ஒற்றுமை குழிதோண்டி புதைக்கப்படுமோ என்ற அச்சம் எழுந்த சமயம். புதிய அரசு உருவாகி, அரசியலமைப்பு உருவாக்க பணிகள் உத்தியோகபற்றற்ற முறையில் ஆரம்பிக்கப்பட்ட சமயம். அரசியலமைப்பு உருவாக்கம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். மக்களிற்கும் உள்ளடக்கம் தெரிய வேண்டும் உள்ளிட்ட மேற்படி எல்லாவிடயங்களுடனும் சம்பந்தப்பட்டதாக தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. வைத்தியர்கள், சட்டத்தரணிகள், மற்றும்சமூகத்தில் அந்தஸ்து மற்றும் பொருளாதாரத்தில் உயரத்தில் உள்ள சிலரால் இணைந்து உருவாக்கப்பட்டது. கிட்டத்தட்ட அதையொரு சிவில் சமூகமாக கொள்ளலாமென்றார்கள். தமிழ் சமூகத்தை பொறுத்தவரையில் சிவில் சமூகம் என்பது, செயற்படதெரியாதவாய்ப்பந்தல்காரர்களின் கூடாரம் என்பதுதான் அர்த்தம்.

தமிழ் மக்கள் பேரவையும் கிட்டத்தட்ட இதேவிதமாகத்தான் இயங்கியது. ஆனால், தமிழ் மக்கள் பேரவையின் பங்களிப்புடன் எழுக தமிழ் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் பேரவை யுடன் தமிழ்தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் போன்ற அமைப் புக்கள் இணங்கி செயற்பட்டதால், அவர்கள் இதற்கான ஒழுங்கமைப்பை செய்திருந் தார்கள்.

இப்பொழுது மட்டக்களப்பில் நடக்க வுள்ள எழுக தமிழிலும் வெளிப்பங் களிப்புக்களைதான் தமிழ் மக்கள் பேரவை எதிர்பார்க்கிறது.

சில மாதங்களின் முன்னர் தமிழ் மக்கள் பேரவைஒருதீர்த்திட்டத்தைபிரேரித்திருந்தது. அப்படியொரு சம்பவம் நடந்ததையே சாதாரண மக்களில் கணிசமானவர்கள் அறிந்திருக்கவில்லை. தீர்வுத்திட்ட உள்ளடக் கத்தை தெரிந்தவர்கள் இன்னும் குறைந்த வர்கள்.

அரசியலமைப்பு விவகாரங்களில் பொது மக்கள் அதிகமாக விலகியே இருப்பார்கள். அது தமது அறிவுக்கும், சக்திக்கும் அப்பாற்பட்டது, சட்டவிற்பன்னர்களை தலைவராக தெரிவு செய்துள்ளோம், அவர்கள் பார்த்து கொள்வார்கள் என்பதே மக்களின் பெரும்போக்கான எதிர்பார்ப்பு. சமஸ்டி சொல் இருக்கிறதா, ஒற்றையாட்சி சொல் இல்லாமல் போய் விட்டதா என்பதுதான் இன்னும் ஒரு தொகுதியினரின் எதிர்பார்ப்பு. இதைதவிர்த்து, அதீத ஆர்வத்துடன் தேடி அறிபவர்கள் மிகச்சிறிய வீதத்தினரே.

தமிழ்மக்கள் பேரவையின் தீர்வு யோசனையை அறிந்தவர்களும் அந்த வீதத்தினரே. அவர்களிற்கு தற்போது நடக்கும் அரசியலமைப்பு உருவாக்கத்தில் என்ன நடக்கிறது, எது வெளியில் வரும் என்பதை அறிந்துதான் வைத்திருக்கிறார்கள். இதன் அர்த்தம், அரசியலமைப்பு உருவாக்கத்தில் என்ன நடக்கிறதென்பதை வெளியில் சொல்லாமலிருப்பதை ஆதரிப்பதல்ல. தமிழ் மக்கள் பேரவையின் தீர்வு திட்டங் களும் முறையாக' . மக்கள் மயப்படுத்தப்படவில்லையென்பதே.


தனது தீர்வு யோசனைகளை மக்கள் மயப்படுத்த தெரியாவர்கள் என்றால் என்ன அர்த்தம்? இதற்கு ஒரே பதில்தான் செயற்பட தெரியாதவர்கள்.

இப்பொழுது சற்று முன் நகர்ந்து, தத்தெடுக் கப்படுபவர்கள் பற்றி பேசிய பகுதிக்கு செல்வோம். தன்னெழுச்சிபெறாத, செயற்பட தெரியாத எந்த அமைப்பிலும் மக்கள் நம்பிக்கைகொள்ள மாட்டார்கள். தமிழ் மக்கள் பேரவை யாராலோ முன்தள்ளப்பட்டு, அவசரமாக தன்னை வடிவமைத்து கொண்ட அமைப்பா என்ற சந்தேகம் எழுகிறது. அதனால்தான் அவர்களால் செயற்பட முடியாமல் உள்ளது. தன்னியல்பாக, அல்லது மக்களிற்காக எதையும் செய்ய தயாராக இல்லாதவர்கள் எப்படி மக்கள் பிரதிநிதிகளாவது? இப்போதுள்ளவர்களும் அதே வகையானவர்களாக இருக்கி றார்கள்தானே என்ற வாதத்தை யாரும் முன்வைக்கலாம். ஆனால், ஒரேவிதமான இன்னொருவரை மக்கள் எதற்காக ஆதரிக்க வேண்டும்?

யாழில் நடந்த எழுக தமிழை எந்த சந்தேகமும் இல்லாமல் ஆதரித்தவர்கள் பலர். ஆனால், அதனை ஒரு மக்கள் எழுச்சியாக பேரவையால் பேண முடியவில்லை. திடீரென தோன்றி மறையும் குமிழியாக மக்கள் எழுச்சிகள் இருந்தால் அதனால் பலனில்லை. என்ன கோரிக்கைகளை முன்வைத்து எழுக தமிழ் நடத்தப்பட்டதோ, அவை நிறைவேறி விட்டதா? இல்லையே. அந்த நோக்கத்திற்காக எழுக தமிழை தொடர்ந்து என்ன செய்தது பேரவை? விடுமுறைக்கு ஊருக்கு செல்வதை போல மூன்று, நான்கு மாதங்களிற்கு ஒருமுறை எங்காவது பேரணி வைத்தால் எல்லாம் முடிந்து விடுமா? தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாடுகள் ஏன் வெகுஜன ரசனையை பெற்றவையாக மாறவில்லை? இப்படியானவர்கள் ஒரு இனத்தின் தலைவிதியை தீர்மானிப்பார்கள் என நம்புவது அறிவார்ந்ததா?

விடுதலைப்புலிகளிற்கு பின்னால் தமிழர்களிடம் ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு முழுமையாக நிவர்த்தி செய்யவில்லை. அதனால் செய்ய முடியுமா இல்லையா என்பதை சோதிக்க வைக்கப்படும் பரிசோதனைதான் அரசியலமைப்பு உருவாக்கம். இதில் தேறினால் அரசியல் வெற்றிட சர்ச்சை உருவாகாது. தவறினால், நிச்சயம் உருவாகும்.

ஆனால், அப்போது மக்களின் இன்னொரு தேர்வுகளில் ஒன்றாக நிச்சயம் தமிழ் மக்கள் பேரவை இருக்காது.



எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புதிய அரசியலமைப்பு
# மூடிய கதவின் பின்னால் பேசப்பட்டவை என்ன?

தீபம் குழு

புதிய அரசியலமைப்பு வரைபை உருவாக்கும் பணியில் கடந்த பல மாதங்களாக தீவிரமாக ஈடுபட்டிருந்த பிரதான வழிநடத்தல் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் இந்த வருட இறுதியில் சமர்ப்பிக்கப்படுவதாக இருந்தது. எனினும், பின்னர் அது தாமதிக்கப்பட்டு அடுத்த வருடம் ஜனவரி முற்பகுதியில் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் வழிநடத்தல் குழுவின் முதற்கட்ட வரைபு மற்றும் அரசியலமைப்பு உருவாக்கத்தில் நிகழக்கூடிய சாத்தியங்கள் குறித்த உறுதிப்படுத்தப்பட்ட நம்பிக்கையான தகவல்கள் தீபத்திற்கு கிடைத்துள்ளன கிடைத்துள்ள தகவல்படி இந்த அரசியலமைப்பு வரைபில் முன்னேற்றகரமான அம்சங்களை கொண்டதாக தெரிகிறது.

இதனால்த்தான் புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பகிரங்கப் படுத்தப்படுவதற்கு தெற்கு அரசியல் கட்சிகள் தயங்குவதாக தெரிகிறது. தெற்கு இனவாதிகள் சாதாரண சிங்கள மக்களை உசுப்பேற்றி சூழலை சிக்கலாக்கலாமென்ற அச்சம் பிரதான கட்சிகளிடம் உள்ளது. 13வது திருத்த சட்டத்தை விடவும் முன்னேற்ற கரமான அம்சங்களை கொண்டிருந்தபோதும், வார்த்தைகள் (உ+ம் ஒற்றையாட்சி, சமஷ்டி, பௌத்தமத முன்னுரிமை) அதனை குழப்பி விடாமல் இருக்க வேண்டும் என்ற அவதானம் வழிநடத்தல் குழுவிடம் இருந்துள்ளது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் ஏப்ரல் மாதம் 05ம் திகதி வழிநடத்தல்குழு உருவாக்கப்பட்டது. 07 உபதலைவர்கள், 21 உறுப்பினர்களை கொண்டதாக இந்தகுழு அமைந்துள்ளது. அதன் பின் இன்றுவரை அந்த குழு தொடர்ச்சியாக சந்திப்புக்கள், கலந்துரையாடல்களை மேற்கொண்டு உத்தேச வரைபொன்றை உருவாக்கியுள்ளது. ஐந்து தமிழ் உறுப்பினர்களை கொண்ட இந்த குழுவில் இதில் முழு ஈடுபாட்டுடன் பங்களித்தவர்கள் மிகச்சிலரே. ஜயம்பதி விக்கிரமரட்ன, எம்.ஏ.சுமந்திரன், ரணில் விக்கிரமசிங்க, டிலான் பெரேரா போன்றவர்களே முக்கியமானவர்கள்.

**வழிநடத்தல்குழுவின் அமர்வுகளின் ஆரம்பத்திலேயே, தான் ஒற்றையாட்சிக்கு எதிரானவன் என்பதை ரணில் விக்கிரமசிங்க தெளிவாக கூறிவிட்டார். ஒற்றையாட்சிமுறை மாற்றப்பட வேண்டுமென்பதில் அவர் உறுதியை வெளிப்படுத்தியுள்ளார்.**

அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்த கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாதென்பதே வழிநடத்தல் குழுவிலுள்ள கணிசமான உறுப்பினர்களின் அபிப்பிராயமாக இருந்தது. மக்கள் தவறாக அபிப்பிராயம் கொள்ளக்கூடிய விதத்திலமைந்த விளக்கசொற்களை நீக்கி, வேறு சொற்களை இணைப்பதில் குழுவினர் அதிக அக்கறையெடுத்துள்ளனர்.

இதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் நடந்துள்ளது. அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் வழிநடத்தல் குழு உறுப்பினர். ஆரம்பத்தில் 2,3 குழுக்கூட்டங்களில் அவர் கலந்துகொண்டுவிட்டு பின்னர் கலந்து கொள்ளவில்லை. பெரும்பாலான கூட்டங்கள் முடிந்து அனைவரும் இணக்கப்பாடுகளை எட்டிய சமயத்தில் இறுதிக்கட்ட கூட்டத்திற்கு வந்துள்ளார். அந்த சமயத்தில் இலங்கைக்கு எந்தவகையான ஆட்சிமுறை அமைய வேண்டுமென்பதில் உடன்பாடு எட்டப்பட்டு, நான்கு பரிந்துரைகள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தன. அதில் ஒற்றையாட்சியென்ற பதம் இருக்கவில்லை. சம்பிக்க ரணவக்க இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒற்றையாட்சியென்ற பதம் இருக்க வேண்டுமென்றார். ஒற்றையாட்சி பரிந்துரைக்கப்பட்டால் சமஸ்டியென்பதை தாம் பரிந்துரைப்பதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின் சுமந்திரன் கூறியுள்ளார். சம்பிக்கவின் நடவடிக்கை குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாக குழுவிலுள்ள ஏனைய உறுப்பினர்கள் பகிரங்க விமர்சனம் செய்தனர். ஒற்றையாட்சி, சமஸ்டியென்ற வார்த்தை குழப்பங்கள் ஏற்படாமல் இருக்க பலமாதங்களாக உட்கார்ந்து தாங்கள் வேலைசெய்வதை சம்பிக்க குழப்புவதாக டிலான்பெரேரா கடும் விசனம் தெரிவித்தார். தமிழர்கள் சார்பில் முன்மொழியப்பட்ட சமஸ்டியும் பரிந்துரைகளில் ஒன்றாக இடம்பெறுவதில் தமக்கு ஆட்சேபனையில்லையென்றவர், ஒற்றையாட்சி என்ற பதத்தை நீக்குவது பற்றி சிந்திப்பதற்கு அவகாசம் தேவையென கேட்டுக்கொண்டுள்ளார்.

வழிநடத்தல் குழுவின் பரிந்துரைகளில் மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன. தேர்தல்முறை மாற்றம், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு, இனப்பிரச்சனை தீர்வு என்பனவே அவை. தேர்தல்முறை மாற்றத்தில் பிரதான கட்சிகளிடையே உடன்பாடு எட்டப்படும் நிலையில் உள்ளது.

ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கம் தொடர்பான பரிந்துரைகளும் வழிநடத்தல்குழுவின் அறிக்கையில் உள்ளது. பிரதமரை தேர்வு செய்வதற்கு நான்கு சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன. வெஸ்ற்மினிஸ்ரர் முறை, கட்சிகள் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தி போட்டியிடுவது, தேர்தலின் பின்னர் பிரதமரை தேர்வுசெய்வது உள்ளிட்டவை அதில் உள்ளன.

செனட்டை ஒத்ததாக இரண்டாவது சபையொன்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணங்களில் இருந்தும் 5 பேர், கட்சிசார்பின்றி 10 பேர் என 55 பேரை கொண்ட இரண்டாவதுசபை அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சனை தீர்வை நோக்கமாக கொண்ட அதிகார பரவலாக்கல் உத்தேச வரைபில் ஓரளவு திருப்தியான வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. 13வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த காணி, பொலிஸ் அதிகாரங்களை உத்தேச வரைபிலும் வழங்கப்பட்டுள்ளது. அதுதவிர கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளும் மாகாணசபைகளிற்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், கடல் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

அதிகாரப்பரவலாக்கத்தின் மூலம் மாகாணங்களின் அதிகாரம் அதிகரிக்கப்பட வுள்ளது. மாகாணங்களிற்கு வழங்கப்படும் அதிகாரங்களை மத்திய அரசு திரும்ப பெறவோ, மாகாணசபைகளை ஜனாதிபதி கலைக்கவோ முடியாத விதமான ஏற்பாடுகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தவிரவும், தற்போது நடைமுறையிலுள்ளதைபோல மாகாண நிர்வாகத்தில் மத்திய அரசின் நிர்வாகம் குறுக்கிடாத விதமான ஏற்பாடுகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

வழிநடத்தல்குழுவின் அறிக்கை வெளியாவது பின்தள்ளப்பட்டு கொண்டு செல்வது, அறிக்கையை பகிரங்கப்படுத்த பிரதான கட்சிகள் இரண்டும் தயங்குவது ஆகியவற்றிற்கு காரணமாக உள்ளது இரண்டு விடயம். ஒன்று ஆட்சிமுறை. மற்றையது பௌத்தமத முன்னுரிமை.

வழிநடத்தல்குழுவின் அமர்வுகளின் ஆரம்பத்திலேயே, தான் ஒற்றையாட்சிக்கு எதிரானவன் என்பதை ரணில் விக்கிரமசிங்க தெளிவாக கூறிவிட்டார். ஒற்றையாட்சிமுறை மாற்றப்பட வேண்டுமென்பதில் அவர் உறுதியை வெளிப்படுத்தியுள்ளார். ஒற்றையாட்சிமுறை நீடித்தால்தான் நாடு பிளவுபடும் வாய்ப்புள்ளதை கூறி, மற்றஇனங்களின் உரிமைகளை அங்கீகரித்து சமஸ்டியை ஒத்த கூட்டரசாக இருந்தால் பிரிவினை வாய்ப்பில்லையென்பதை கூறியுள்ளார். இதன்போது கடந்தகால சம்பவமொன்றை நினைவூட்டியுள்ளார். 1981இல் மாவட்டசபை அறிமுகமாகி, சிக்கல்கள் எழுந்ததன்பின்னர் எதிர்கட்சி தலைவராக இருந்த அமிர்தலிங்கம் "தான் தனிநாட்டுக்கு ஆதரவாக நாடு முழுதும் பிரசாரம் செய்யப் போகிறேன்" என்றுள்ளார். இதன்பின்னர் அப்போதைய ஆட்சியாளர்கள் சட்டமாஅதிபரிடம் இதுபற்றி ஆலோசனை நடத்தி, பிரிவினைக்கெதிரான ஆறாவது சட்ட திருத்தத்தை அமுல்படுத்தினார்கள். ஒற்றையாட்சியை கைவிட்டால் இப்படியான குழப்பங்கள் ஏற்படாது என ரணில் கூறியிருக்கிறார்.

ஜனாதிபதி மைத்திரியும் இதுவரை ஒற்றையாட்சி தொடர்பாக சாதகமான எந்த கருத்தையும் முன்வைக்கவில்லை. அவரும் ஒற்றையாட்சியை கைவிட தயாராக உள்ளார் எனப்படுகிறது.

எனினும், வழிநடத்தல் குழுவில் உள்ள தினேஷ் குணவர்த்தன உள்ளிட்டவர்கள் ஒற்றையாட்சிமுறை நீக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். சமஷ்டிக்கு எதிரான கருத்துக்கள் தென்னிலங்கையில் தீவிரம் பெற்றுவரும் நிலையில், சமஷ்டி என்றல்லை ஒற்றையாட்சிக்கு பதிலாக வேறெந்த வசனம் பாவிக்கப்பட்டாலும் சிக்கலான நிலவரம் ஏற்படலாமென்ற அச்சம் பிரதானகட்சிகளிடம் எழுந்துள்ளது.

இதனால் சமஷ்டி கட்டமைப்பை ஏற்படுத்தி சம்பிரதாயத்திற்கு ஒற்றையாட்சி முறை என்று அழைக்கலாமா என்பதை பரிசீலிக்குமாறு தமிழ்தேசிய கூட்டமைப்பை பிரதான கட்சிகள் கேட்க ஆரம்பித்துள்ளன. ஆனால், ஒற்றையாட்சி பதத்தை ஏற்றுக் கொண்டால் தமிழ் தேசிய கூட்டமைப்பு



நன்றி: அவந்த ஆட்டிகல கார்ட்டூன்

நெருக்கடியை சந்திக்க வேண்டியிருக்கும். இதுவரை ஒற்றையாட்சிக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே தமிழ்தேசிய கூட்டமைப்பு உள்ளது.

இதற்குள் இன்னொரு சுவாரஸ்ய சம்பவமும் நடந்துள்ளது. Unitary என்ற ஆங்கில வார்த்தையை தமிழில் ஒற்றையாட்சி என்றும், சிங்களத்தில் ஏக்க ராஜிய என்றும் குறிப்பிட்டனர். ஆனால் ஏக்க ராஜிய என்ற சிங்கள வார்த்தையின் சரியான அர்த்தம் ஒற்றையாட்சியல்ல, ஒருமித்த அரசு என்பதே சரியென்கிறார்கள் சிங்களமொழி அறிஞர்கள். இதனை சுட்டிக்காட்டி, சிங்களத்தில் ஏக்க ராஜிய என்பதையே தொடரலாமென்பது வழிநடத்தல்குழுவில் பரவலான அபிப்பிராயம். எனினும், இந்த விடயத்தில் இறுதி முடிவு எட்டப்படவில்லையென்பதே இப்போதைய நிலவரம்.


அதுபோல பௌத்தமதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் விவகாரத்திலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. சிபாரிசின்படி, இலங்கை பௌத்தத்தை முன்னுரிமை மதமாக கொண்ட நாடு என்ற பிரதான விளக்கத்தின் கீழ், ஏனைய மதங்களும் சமஅந்தஸ்துடையவை என்ற உபவிளக்கமும் இடப்பட்டுள்ளது. எனினும், சுமந்திரன் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுமென்ற குறிப்பே, ஏனைய மதங்கள் அதற்கு இணையான அந்தஸ்தை பெறவில்லை, அது மத சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வாசகம் என குறிப்பிட்டுள்ளார்.

மல்வத்தபீடாதிபதி வழிநடத்தல் குழுவிற்கு அனுப்பிய கடிதத்தில் மூன்று விடயங்களை குறிப்பிட்டுள்ளார். முதலாவது பௌத்தத்திற்கு முன்னுரிமை, இரண்டு, ஒற்றையாட்சிமுறை. மூன்று, மேலே சொன்ன இரண்டு விடயங்களினடிப்படையிலும் இலங்கையிலுள்ள ஏனைய இனத்தவரின் கௌரவம், உரிமை, மதசுதந்திரம் பாதிக்கப்பட, அவர்களின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்பட அனுமதிக்ககூடாது.

பீடாதிபதியின் மூன்றாவது பரிந்துரையை வழிநடத்தல்குழுவின் அறிக்கையில் இணைக்கலாமா என்றும் ஆராயப்பட்டு வருகிறது. இதற்குள் ரணில் விக்கிரமசிங்க புதியதொரு யோசனையை முன்மொழிந்துள்ளார். பௌத்தமதத்திற்கு முன்னுரிமை என குறிப்பிடாமல் தேரவாத பௌத்தமதத்திற்கு முன்னுரிமை என குறிப்பிடலாம், உருவ வழிபாட்டை நிராகரிக்கும் தேரவாத பௌத்தத்தை கடைப்பிடிப்பவர்கள் வெகுகுறைவு என்பதுடன், பௌத்தத்தை முன்னிறுத்திய குழப்ப நடவடிக்கைகளை கட்டுப்படுத்தலாம் என்பதுடன், இதனை யாரும் எதிர்க்க முடியாதென்றும் யோசனை வைத்துள்ளார்.

இதற்குள், பௌத்தமதத்திற்கு முன்னுரிமை என்பதற்கு பதிலாக பௌத்தம் பிரதான மதம் என்பதை சேர்க்கலாமா என்ற ஆலோசனையும் உள்ளது. எவ்வாறாயினும், இந்த விடயத்தில் வழிநடத்தல்குழு பத்து சிபாரிசுகளை முன்வைத்துள்ளது.

*(அடுத்தவாரமும் வரும்)*



▶ இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ் போரினால் தந்தையை இழந்த அல்லது காணாமல் போக செய்யப்பட்ட யுத்த பாதிப்புக்குள்ளான கிளிநொச்சி சோலை நிலா கிராமத்தை சேர்ந்த 2 குடும்பங்களுக்கும், முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியை சேரந்த 3 குடும்பங்களுக்கும், பிள்ளைகள் பாடசாலைகளுக்கு செல்வதற்காகவும், அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்வதற்குமாக துவிச்சக்கர வண்டிகள் வழங்கபட்டன

# தமிழர்களிற்கு ஒரு குட்டி கதை

**அபிராம்**

மிக அண்மையில் ரசித்த ஓர் குட்டி கதையை இங்கு யாவருடனும் பாகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பெரிய தொழிற்சாலையில், ஒருவர் வண்டி மீது, ஓர் சிறிய பெட்டியை வைத்து தள்ளி வருவதை தொழிற்சாலையின் காவலாளி கவனித்தார். உடனே அவ்வண்டியை தள்ளி வருபவரிடம், இப் பெட்டியினுள் என்ன உள்ளது என விசாரித்தார். வண்டிலை தள்ளி வந்தவர், 'அதில் அரிந்த மரத்தூள் உள்ளது' என பதில் கூறுகிறார். காவலாளி இதை என்ன செய்ய போகிறாய் என விசாரித்த பொழுது, 'இவற்றை நான் குப்பையில் போடப் போகிறேன்' என்றார். காவலாளி அவரை செல்ல அனுமதித்தார்.

இப்படியாக ஐந்து ஆறு நாட்களாக நடைபெறுகிறது. ஆறாவது நாள் காவலாளி, வண்டியை தள்ளிவருபவரை நிறுத்தி, இன்று இந்த பெட்டிக்குள் என்ன உள்ளது என விசாரித்தார். வண்டிலை தள்ளி வந்தவர் வழமைபோல், 'அதில் அரிந்த மரத்தூள் உள்ளது' என பதில் கூறுகிறார்.

காவலாளி கூறுகிறார், உண்மையை பேசுவதனால், 'எனக்கு நீ எதையோ தினமும் திருடுவதாக மனதில் தோன்றுகிறது. உண்மையை சொல், நான் உனது வேலைக்கு பங்கம் விளைவிக்க மாட்டேன்' என கூறினார். அப்பொழுது வண்டிலை தள்ளி வந்தவர், 'நீங்கள் எண்ணுவது சரி, நான் தினமும் திருடுகிறேன்' என பதில் கூறுகிறார். காவலாளி, 'அப்படியானால், நீ என்னத்தை திருடுகிறாய் என்பதை எனக்கு சொல்' என மிகவும் தாள்மையாக வேண்டினார். வண்டிலை தள்ளி வந்தவர், 'நான் தினமும் ஒவ்வொரு வண்டிலாக திருடுகிறேன்'



என்றார். காவலாளி திகைத்து நின்றார்.

காரணம், தினமும் காவலாளியின் பார்வை வண்டியின் மேல் உள்ள சிறிய பெட்டியிலேயே இருந்தது. அவர் அவ் பெரிய வண்டிலை பற்றி சிந்திக்க தவறிவிட்டார்.

இதே போன்று 'தான் இன்று தாயகத்திலும், புலம் பெயர் தேசங்களிலும் உள்ள நம்மவர்களின் செயற்பாடுகளும் உள்ளன. எந்தக்கட்சி பெரியது, மாகாண சபையில் எந்தக்கட்சிக்கு எந்தப்பொறுப்பு, கட்சியிலிருந்து ஒருவரை எப்படி ஓரங்கட்டலாம், மாவீரர் தினத்தில் யார் விளக்கேற்றினார், யார் பெரிய தீபம் வைத்திருந்தார், போட்டி அரசியல்வாதியை எப்படி கவிழ்க்கலாம், விரும்பாத அரசியல்வாதியை எப்படி கழுவி ஊற்றலாமென்றுதான் இரவு பகலாக சிந்திக்கின்றனர். இதில் சாதாரண மக்கள், பெரிய அரசியல்வாதிகள் என்று வித்தியாசமில்லை.

இதுதான் தமிழர்களின் அரசியல் பாரம்பரியமெனில் விரைவில் முழு வடக்கு கிழக்கும் பௌத்தமயமாகும். வடக்கு கிழக்கில் தென்னிலங்கை தேசியகட்சிகள் பாராளுமன்ற அங்கத்துவத்தை பெருக்கிக் கொண்டுவிடும். நாம் அப்போதும் நம்மவர்களை கவிழ்ப்பதிலேயே குறியாக இருப்போம்.






# மிகையில் கோர்பச்சோவ்: பேரரசை இழந்த மனிதர்

மேற்குலகம் ரஷ்யாவின் கோபத்தை தூண்டியிருப்பதாக குற்றஞ்சாட்டியிருக்கும் முன்னாள் சோவியத் தலைவர் மிகையில் கோர்பச்சோவ், 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் "துரோகத்தால்" சின்னா பின்னமாகியது என்று தெரிவித்திருக்கிறார்.

சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியடைந்து 25 ஆண்டுகளுக்கு பிறகு மிகையில் கோர்பச்சோவ் மிகவும் அரிதான பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார். இப்போது 85 வயதாகியிருக்கும் மிகையில் கோர்பச்சோவ் உடல் சுகவீன பிரச்சனைகளோடு வாழ்ந்து வருகிறார். ஆனால், அவருடைய நகைச்சுவை புணர்வு அழிக்க முடியாத ஒன்றாக உள்ளது.

பேட்டி கண்டவரை சந்தித்தபோது, அவருடைய ஊன்றுகோலை காட்டி, "பாருங்கள். இப்போது நடப்பதற்கு மூன்று கால்கள் தேவைப்படுகின்றன" என்று நகைச்சுவையாக சுட்டி காட்டினார்.

உலகமே மாறிய அதாவது சோவியத் வல்லரசு வீழ்ச்சியடைந்த நாளான அந்த தருணத்தை பற்றி பேசுவதற்கு மிகையில் கோர்பச்சோவ் ஒப்பு கொண்டார்.

"சோவியத் ஒன்றியத்திற்கு என்ன நடத்தது என்பது என்னுடைய நாடகம்" என்று கூறிய அவர், "சோவியத் ஒன்றியத்தில் வாழ்ந்த அனைவருக்கும் கூட அது ஒரு பரபரப்பான நாடகம் " என்றார் கோர்பச்சோவ்.

1991 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் நாள் ரஷ்ய தொலைக்காட்சியின் மாலை செய்திகள் அதிர்ச்சியளித்த அறிவிப்போடு தொடங்கின: "மாலை வணக்கம். செய்திகள். சோவியத் ஒன்றியம் இனி இல்லை...." என்பது தான் அந்த அறிவிப்பாக இருந்தது.

அதற்கு சில நாட்களுக்கு முன்னதாகத்தான், ரஷ்யா, பெலாரஸ் மற்றும் உக்ரேன் தலைவர்கள் சோவியத் ஒன்றியத்தை கலைத்துவிட்டு தனிப்பட்ட நாடுகளின் கொமன்வெல்த்தை உருவாக்க சந்தித்தனர்.

தற்போது, மற்ற 8 சோவியத் ஒன்றியத்துக் குட்பட்ட குடியரசுகள் அதில் இணைய முடிவு செய்தன.

இந்தக் குடியரசு நாடுகளை ஒன்றாக இணைந்து வைத்திருக்க போராடிக்கொண்டிருந்த சோவியத் ஒன்றியத் தலைவர் மிகையில் கோர்பச்சோவை அந்த குடியரசுகள் ஒன்றாக இணைந்து மீறின.

"எங்கள் முதுகுக்குப் பின்னால் துரோகம் இழைக்கப்பட்டிருந்தது. ஒரு சிகரெட்டை பற்ற வைக்க அவர்கள் வீட்டையே கொளுத்தி கொண்டிருந்தனர். அந்த முயற்சி அதிகாரத்தை பெறுவதற்காக மட்டுமே.

ஜனநாயக வழிமுறைகள் மூலம் அவர்களால் அதனை பெற முடியவில்லை. எனவே அவர்கள் ஒரு குற்றமிழைத்தனர். அதுவொரு ஆட்சி கவிழ்ப்பு" என்று மிகையில் கோர்பச்சோவ் கூறினார்

1991 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதி, கோர்பச்சோவ் சோவியத் ஒன்றியத்தின் அதிபர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாக அறிவித்தார். கிரம்ளினில் கடைசியாக சோவியத் ஒன்றிய கொடி கீழிறங்கியது.

"நாங்கள் ஓர் உள்நாட்டு போர் தொடங்கும் நிலையில் இருந்தோம். நான் அதனை தவிர்க்க எண்ணினேன்" என்று கோர்பச்சோவ் நினைவு கூர்ந்தார்.

"அணு ஆயுதங்கள் உள்பட அதிக ஆயுதங்கள் உடைய எங்களை போன்ற ஒரு நாட்டில், சமூகத்தில் பிளவு மற்றும் நாட்டில் போராட்டம் என்பது பல மக்களின் இறப்புக்கு வழிகோலியிருக்கும். பேரழிவை உருவாக்கியிருக்கும். அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருப்பதற்காக, அது நடப்பதை நான் அனுமதிக்க முடியாது. அதிகாரத்தில் இருந்து இறங்கியது என்றுடைய வெற்றி" என்று கோர்பச்சோவ் கூறினார்.

தான் மேற்கொண்ட கட்டமைப்பு சீர்திருத்தத்தால் ரஷ்ய சமூகம் சுதந்திரம் அடைந்திருக்கிறது என்று தன்னுடைய ராஜினாமா உரையில் கோர்பச்சோவ் உரிமை கொண்டாடினார்.

25 ஆண்டுகள் கடந்து விட்டன. இன்றைய ரஷ்யாவில் இந்த சுதந்திரத்திற்கு அச்சுறுதல் ஏற்பட்டுள்ளதா? என்று கேட்ட போது "இந்த வழிமுறை முடியவில்லை. இது பற்றி வெளிப்படையாக நாம் பேச வேண்டும். சுதந்திரம் என்றால் கோபப்படும் மக்கள் சிலரும் உள்ளனர். அவர்கள் இந்த சுதந்திரத்தை விரும்புவதில்லை" என்று அவர் பதிலளித்தார்.

நீங்கள் விளாடிமிர் புத்தினை குறிப்பிடுகிறீர்களா? என்று செய்தியாளர் அவரிடம் கேட்டார்.

"நான் யாரை குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் தான் ஊகிக்க வேண்டும். இந்த கேள்விக்கு நீங்களே பதில் சொல்ல விட்டு விடுகிறேன்" என்று பதில் வந்தது.

விளாமிர் புத்தினை பற்றி நேரடியாக விமர்சிப்பதை கோர்பச்சோவ் தவிர்த்தார். ஆனால், அவரும், விளாடிமிர் புத்தினும் வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருப்பது குறித்து அவர் சூசகமாகக் கோடிட்டுக் காட்டினார்.

"புதின் உங்களுடைய அறிவுரையை எப்போதாவது கேட்பதுண்டா?" என்று நான் அவரை கேட்டேன்.

"அவருக்கு அனைத்தும் ஏற்கெனவே தெரியும்" என்று பதிலளித்த கோர்பச்சோவ், "ஒவ்வொருவரும் தங்களுடைய தனிப்பட்ட முறைப்படி காரியங்களை நிறைவேற்றுகிறர்கள்அதுதான் வாழ்க்கை என்கிறார்.

முன்னாள் சோவியத் அதிபர் கோர்பச்சோவ், நவீன ரஷ்யாவை கடுமையாக விமர்சித்தார். "அதிகாரிகள், நாட்டின் செல்வங்களை திருடி பெருநிறுவனங்களை உருவாக்க தொடங்கினர்" என்று கோர்பச்சோவ் கூறினார்.

அதிபர் புதினின் மிகவும் நெருங்கிய தோழர்களில் ஒருவரான ரோஸ்நெப்ட் எண்ணெய் நிறுவனத்தின் தலைவரான இகோர் செச்சின், நாட்டின் விவகாரங்களில் தலையிட முயல்வதாக கோர்பச்சோவ் விமர்சனம் செய்கிறார்.

"ரஷ்யாவை ஆத்திரமூட்டுவதாக" குற்றஞ் சாட்டி மேற்குலகையும் கோர்பச்சோவ் தாக்குகிறார்.

"புதினுக்கு கெட்டப்பெயரை உருவாக்கி அவரை வெளியேற்ற வேண்டும் என்பது மேற்குலக ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரை. அதில் நீங்களும் அடங்குகிறீர்கள். உடல் ரீதியாக அல்ல. அவர் வெளியேறுவதை உறுதிசெய்து கொள்வது. ஆனால், இதன் விளைவாக புதினின் பிரபலம் இங்கு 86 சதவீதமாக உள்ளது. விரைவில் இது 120 சதவீதமாக மாறும்" என்று அவரிடம் இருந்து பதில் வருகிறது.

அமெரிக்க அதிபர் ரோனால்ட் ரீகனோடு மிகையில் கோர்பச்சோவ் காட்டிய நல்ல உறவு தான் பனிப்போரை முடிவுக்கு கொண்டு வர வழிகாட்டியது,

எனவே, வெள்ளை மாளிகைக்கு வரயிருக்கும் புதிய அதிபரை பற்றி மிகையில் கார்ப்சோவ் என்ன நினைக்கிறார்? அவர் எப்போதாவது டொனால்ட் டிரம்பை பார்த்தது உண்டா?

"நான் அவர் கட்டியெழுப்பிய உயரமான கட்டடங்களை பாத்திருக்கிறேன். அவரை தனிப்பட்டமுறையில்சந்திக்கஎனக்குவாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால், அவருடைய பார்வைகளையும், கொள்கைகளையும் பற்றி தீர்ப்பளிக்க முடியாது" என்று கோர்பச்சோவ் கூறினார்.

"ஆனால், அதுவொரு சுவாரஸ்யமான தருணம். ரஷ்யாவில் நான் உள்பட ஜனநாயக கட்சிதான் அமெரிக்காவில் வெற்றிபெறும் என்று அனைவரும் எண்ணினோம். என்றாலும் நான் அதனை வெளியில் சொல்லவில்லை" என்கிறார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கியவர் என்றும், ஜெர்மனி ஒன்றிணைய அனுமதித்தவர் என்றும் கோர்பச்சோவ் மேற்குலகில் பலர் கதாநாயகனாக பார்க்கின் றனர்.

ஆனால், தாயகத்திலுள்ள பலரும் அவரை பேரரசை இழந்த தலைவராக பார்க்கின்றனர்.

"சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்கு நீங்கள் பொறுப்பேற்று கொள்கிறீர்களா?" என்று அவரிடம் கேட்டபோது "நான் என்ன சாதிக்க வேண்டும் என்று ஆரம்பித்தேன். உண்மையில் என்ன செய்தேன் என்று மக்கள் போதுமான அளவு புரிந்து கொள் ளாமல் இருப்பது தான் என்னை மிகவும் எரிச்சலடைய செய்கிறது" என்று மிகையில் கோர்ப்ச்சோவ் கூறுகிறார்.

"நாட்டுக்கும், உலகத்திற்கும் நான் மேற்கொண்ட கட்டமைப்பு சீர்திருத்தமானது, ஒத்துழைப்பிற்கும், அமைதிக்கும் பாதையை திறந்தது, அது முடியும் வரை அதனை என்னால் பார்க்க முடியவில்லை" என்கிறார்.

பேட்டியின் முடிவில், மிகையில் கோர்ப்ச்சோவும் செய்தியாளரும் அவருடைய பியானோவுக்கு அருகில் சென்றனர்.

செய்தியாளர் அதனை இசைக்க சில பிரபல சோவியத் பாடல்களை கோர்ப்ச்சோவ் பாடினார்.



**புதினுக்கு கெட்டப்பெயரை உருவாக்கி அவரை வெளியேற்ற வேண்டும் என்பது மேற்குலக ஊடகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரை. இதன் விளைவாக புதினின் பிரபலம் இங்கு 86 சதவீதமாக உள்ளது. விரைவில் இது 120 சதவீதமாக மாறும்**

இந்த பாடல்கள் மிகவும் கேட்கப்படுபவையாகவும், அவரது இந்த பேட்டிக்கு பிறகு சிறந்த பாரம்பரியமாக மாறியுள்ளன.

கட்டமைப்பு சீர்திருத்தம் மூலம் உலகையே மாற்றிய மனிதன் உணர்ச்சி மிகுந்த மெல்லிய குரலில் பாடுகிறார்.

"கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையே கண்மூடி திறக்கும் தருணமே. அந்த நேரத்தையே நாம் வாழ்க்கை என்கிறோம்" என்று அவர் பாடுகிறார்.

சோவியத் ஒன்றியம் கடந்தது கண்ணை மூடி திறக்கும் குறுகிய தருணம்தான். ரோமை மற்றும் ஓட்டமான் பேரரசுகளை ஒப்பிடும்போது 70 ஆண்டுகள் என்பது எந்த மூலைக்கு?

**நன்றி பிபிசி**

தற்போது முன்னாள் போராளிகளின் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ள விடயம் முன்னாள் போராளிகளின் திடீர் இறப்பும் அதன் பின்னர் அவர்களின் குடும்பத்தின் நிலையும். இவ்வாறான அச்சத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் புனர்வாழ்வின் பின் விடுதலையாகி வவுனியா, புளியங்குளம், பனிக்கநீராவி பகுதியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையும் முன்னாள் போராளியுமான தேவசகாயம் அமலதாஸ் (வயது 46) என்பவர் கடந்த மூன்றாம் திகதி திடீரென இறந்தமையே.

தேவசகாயம் அமலதாஸ் 1992ம்



ஆண்டுப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் துணைப்படையில் தன்னை இணைத்துக்கொண்டிருந்தார். அதன் பின்னர் கடந்த 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இருந்து புதுமாத்தளன் ஊடாக வவுனியாவிற்கு குடும்பத்துடன் இடம்பெயர்ந்து அருணாசலம் முகாமில் தஞ்சமடைந்திருந்தார். இதன்போது இராணுவத்தினரின் அறிவுறுத்தலுக்கு அமைய சரணடைந்திருந்தார்.

அதன் பின்னர் 2011ம் ஆண்டு மருதமடு புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையானார். விடுதலை செய்வதற்கு மூன்று மாதங்களுக்கு முன் 05 வருடத்திற்கு எந்த நோயும் வராது என இராணுவத்தினரால் ஊசி ஒன்று போடப்பட்டதாக குடும்பத்தினர் கூறுகிறார்கள்.

விடுதலையான பின் 1000 ரூபாய் நாட்கூலிக்கு வேலை செய்து வந்தார். அவரும் மனைவி, ஐந்து பிள்ளைகளை கொண்ட குடும்பமும் வசித்து வந்துள்ளனர். அவரது உழைப்பை நம்பியதே குடும்பம்.

03.11.2016 அன்று மதியம் நெல் மூடை ஒன்றினை ஏற்றிக்கொண்டு மச்சான் வீட்டிற்கு சென்று கொடுத்துவிட்டு நெஞ்சு நோகின்றது என கூறி வீடு வந்துள்ளார். வீடு வந்த அமலதாஸ் தன் மகனை அழைத்து வைத்தியசாலைக்கு செல்லுவோம் என்று கூறி விட்டு திடீரென கீழே விழுந்துள்ளார்.

அமலதாஸை வவுனியா புளியங்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்த போதும் அவர் இறந்து போய் இருந்தார். இதன்போது இவரின் மனைவியினால் புனர்வாழ்வின் போது அமலதாஸிற்கு ஊசி போட்ட விபரம் கூறப்பட்டதை அடுத்து, அமலதாஸின் கண், மூளை, பல், நாக்கு போன்ற உறுப்புக்களை பரிசோதனைக்காக எடுத்த பின் உடலை வழங்கியுள்ள போதும் இதுவரை மருத்துவ பரிசோதனை அறிக்கை வழங்கப்படவில்லை. அமலதாஸிற்கு ஊசி போட்டு 05 வருடம் முடிந்த பின்னரே இச்சம்பவம் நடந்துள்ளது.

அமலதாஸே குடும்பத்தை நடாத்திவந்தமையால் தற்போது அவர் இறந்தமையால் மனைவி மற்றும் ஐந்து பிள்ளைகளின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகியுள்ளது. இதுவரை இவர்களுக்கு சமுர்த்தி உதவி கூட கிடைக்கவில்லை. தலைவன் இல்லாமல் வாழ்வாதாரத்திற்காக போராட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



## 'கை கோர்ப்போம்'


தீபம் ஆரம்பித்துள்ள புதிய அத்தியாயம் 'கை கோர்ப்போம்'. இதுவொரு மனிதாபிமான பணியென்பதை விடவும் சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவரும் இணைந்து கொள்ள வேண்டிய அத்தியாவசிய பணி. யுத்தம் தின்ற மக்களிற்கான உதவிகள் முறையாக சென்றடையாத அவலம் நீடித்து வருகிறது. ஒவ்வொருவரும் சின்னதாக விரல் நீட்டினாலே வீழ்ந்து போயுள்ளவர்கள் பற்றிப்பிடித்து நடக்க ஆரம்பித்துவிடுவார்கள். யுத்தம் வீழ்த்திய மனிதர்களை எழுந்து நடக்க வைக்க வேண்டுமென விரும்புவர்களில் ஒருவரா நீங்கள்? நீங்கள் செலவிடும் பணத்தின் ஒரு துளியேனும் நல்ல காரியங்களிற்கு செலவிட விரும்புபவர்களில் ஒருவரா நீங்கள்? உங்களின் ஒரு சதமும் ஓராயிரம் புன்னகையை மலர்விக்க விரும்பினால் தீபத்துடன் கை கோர்த்துக் கொள்ளுங்கள்.

தொடர்பு முகவரி:
'கை கோர்ப்போம்', தீபம் வார இதழ், 197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

# காதல் கல்யாணங்கள் ஏன் விவாகரத்தில் முடிகின்றன?

நமக்கு பிடிக்காத எந்த குணமும் நாம் காதலிக்கும் நபரிடம் இல்லை. அல்லது நாம் எதிர்பார்க்கும் எல்லாமும் நாம் காதலிப்பவரிடம் இருக்கிறது. இவற்றைதான் காதலிக்க காரணம் என்று அநேக பேர் சொல்வார்கள். காதல் என்பது அவரவர் மனம் சம்பந்தப்பட்டது. அதில் காதலிப்பவர், எண்ணத்துக்குகூட மதிப்பு தர தேவையில்லை. ஆனால் கல்யாணம், சூழல், சமூகம், கலாச்சாரம், குடும்பம் என்று பலவற்றுடன் சம்பந்தப்பட்டது. அதில் பிறர் எண்ணங்களுக்கு மதிப்பளித்தே





ஆகவேண்டும்.

'என் விருப்பத்துக்கு ஏற்பதான் நான் உடை அணிவேன், யாருக்கும் அடிபணிய மாட்டேன், தினமும் குடித்துவிட்டு நண்பர்களுடன் ஊர் சுற்றுவேன்' என்றெல்லாம் அடம்பிடிக்ககூடாது. காதலிக்கும்போது எதிர்பாலினத்தை ஈர்க்க, குஷிப்படுத்த எல்லா வித்தையையும் இறக்குவோம். அதற்கு அவர்களை எப்படியாவது அடைந்துவிட வேண்டும் என்ற மன துடிப்பே காரணம். அதை கல்யாணத்துக்கு பிறகும் எதிர்பார்க்கக்கூடாது. 'அன்று எனக்காக என்னவெல்லாம் செய்தாய் இப்போது இப்படி இருக்கிறாயே' என்று கேட்பது மிகவும் தவறு. அது நினைவுகள். அவற்றை எண்ணி பகிழ்ந்திருக்கலாம்.

அதுபோல், தினம் தினம் நடக்க வேண்டும் என்று எண்ணுவது முட்டாள்தனம். இந்த தவறான எண்ணங்கள் தலைதூக்கும்போதே அதைப் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது. சிலர் காதலிக்கும் போது நிறைய பொய்களை சொல்லியிருப்பார்கள். அது திருமணத்துக்கு பிறகு வெளிப்பட்டால் நிச்சயம் தர்மசங்கடம்தான். ஆகையால் நிறைகளைப் பேசுவதற்கு முன், குறைகளைப் பற்றியும் தெள்ளத் தெளிவாக பேசிவிடுவது நல்லது.

நாம் நம் துணைக்காக எவ்வளவு நேரம் செலவிடுக்கிறோம் என்பதைவிட எந்த வகையில் அந்த நேரத்தை செலவிடுகிறோம் என்பதுதான் முக்கியம். இருவருக்கும் பிடித்தமான விஷயங்களைப் பற்றி அதிகம் உரையாடுங்கள். அந்த பிடித்தமான விஷயம் புத்தகம், நாடகம், தொழில்நுட்பம், சினிமா என்று எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். தினமும் குறிப்பிட்ட நேரத்தை அவர்களுக்காக ஒதுக்கி, இன்று என்ன

**சில பெண்கள் "நான் முக்கியமா இல்லை... வேலை முக்கியமா?" என்று சண்டை பிடிப்பார்கள். அவர்கள் யாரும் வேலையில்லாத ஆணோடு நிச்சயம் வாழ மாட்டார்கள்.**

வேலைச் செய்தேன் என்பதில் தொடங்கி மனேஜரிடம் என்ன திட்டு வாங்கினேன் என்பது வரை பகிர்ந்து கொள்ளுங்கள்.

தூங்குவதற்கு முன் கொஞ்ச நேரம் ஒதுக்கி, உரையாடுவதற்காக மட்டுமே செலவிடுங்கள். (அப்போது சண்டைகள் எதுவும் வேண்டாம்) சில பெண்கள் "நான் முக்கியமா இல்லை... வேலை முக்கியமா?" என்று சண்டை பிடிப்பார்கள். அவர்கள் யாரும் வேலையில்லாத ஆணோடு நிச்சயம் வாழ மாட்டார்கள். " நான் உனக்காக, நம் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகதான் வேலை செய்கிறேன்" என்பதை அவர்களுக்கு புரியும்படி எடுத்துசொல்லுங்கள். எவ்வளவு வேலை இருந்தாலும் சரி, எவ்வளவு வயது கடந்திருந்தாலும் சரி, தினமும் தூங்க போவதற்கு முன்பு மனைவிக்கென நேரம் ஒதுக்குவதை குறைத்துவிடாதீர்கள்.

# தொன்மை நகரம் சுன்னாகம்



நிலவன்

யாழ் மாவட்டத்தின் வலிகாமப் பகுதியின் மத்திய நகரமாகப் பரந்திருக்கின்றது சுன்னாக நகரம். தெல்லிப்பழை, காங்கேசன்துறை, அளவெட்டி மக்களின் போக்குவரத்து மத்திய நிலையமாக காணப்படுகிறது சுன்னாகம். வலிகாமம் பிரதேச செயலர் பிரிவில் மல்லாகம், உடுவில், புன்னாலைக்கட்டுவன், கந்தரோடை ஆகிய ஊர்களை எல்லையாகக் கொண்டுள்ளது. 'மயிலணி' என்பதே சுன்னாகத்தின் பழைய பெயர் ஆகும்.

சுன்னாகத்திற்கு வரலாற்றில் முக்கிய இடம் உள்ளது. பல்லாயிரம் வருடங்களாக நீடித்த தீண்டாமைக் கொடுமைக்கெதிராக உருவான போராட்டங்கள் உச்சமடைந்து, 1966 இல் சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாண முற்றவெளியை நோக்கி பெரும் எழுச்சி ஊர்வலம் நடத்தப்பட்டது. வரலாற்றில் 'ஒக்ரோபர் எழுச்சி' என பெயர் பெற்ற எழுச்சி அது. பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடிகளில் முக்கியமானவரான கே.ஏ.சுப்ரமணியம் இதில் முக்கியபாத்திரம் வகித்தார்.

### சுன்னாகச்சந்தை

சுன்னாக நகரின் நடுவில் உள்ளது சந்தைத் தொகுதி. யாழ்ப்பாணத்தின் பழமையான சந்தைகளில் ஒன்று. இன்றும் பழமை மாறாமல் காட்சியளிக்கிறது. திருநெல்வேலி சந்தை முக்கியம் பெறுவதற்கு முன்னர் சுன்னாகம் சந்தைதான் முக்கியம் பெற்றுள்ளது. இன்றும், சுன்னாகம் சந்தை யாழ்ப்பாணத்தில் சில்லறை வர்த்தகம் அதிகம் நடக்கும் சந்தைகளில் ஒன்றாகத்தான் உள்ளது. ஆரம்பத்தில் இருந்தே தேங்காய் விற்பனையில் சுன்னாகம் சந்தை பிரபலம்.



செனட்டர் நாகலிங்கம்

1960களில் புத்தளம், சிலாபத்திலிருந்து நாளாந்தம் குறைந்தது பத்து லொறிகளாவது தேங்காய் ஏற்றியபடி சுன்னாகம் சந்தைக்கு வந்தன. இப்பொழுதும் தேங்காய் விற்பனைக்கு சுன்னாகம் பிரபலம்.

அதுபோல தேசிக்காய்க்கும் சுன்னாகம் பிரபலமாக இருந்தது. அப்போது குருணாகல் மாகோவிலிருந்து தேசிக்காய் சுன்னாகத்திற்கு வந்தது. அதேபோல, வாழைக்குலை வர்த்தகமும் பிரபலம். அளவெட்டி, மல்லாகம், ஏழாலை, உரும்பிராய் பிரதேசங்களில் இருந்து வரும் வாழைக்குலைகளால் சுன்னாகம் சந்தை நிறையும். இரவு 7,8 மணிக்குத்தான் சந்தைக்கு மாண்டுவண்டியில் வாழைக்குலைகள் கொண்டுவரப்படும். அவற்றை இறக்கி, கடைகளில் அடுக்கி, விற்பனை செய்வதென பலருக்கு வேலை இருந்துகொண்டேயிருக்கும். மறுநாள் காலை 5 மணிக்கே வாழைக்குலை, பழம் வியாபாரம் சூடு பிடித்துவிடும். 1960களில் ஒரு வாழைக்குலை 2 ரூபாய்க்கு விற்கப்பட்டதாம்!



சந்தையின் உள்புறம்



சுன்னாகம் சந்தை

### போக்குவரத்து

போக்குவரத்து வசதிகள் எப்போதும் குறைவில்லாமல் நிறைவேறிக் கொண்டேயிருக்கின்றது சுன்னாகத்தில் சுன்னாகம் பஸ் நிலையமானது தெல்லிப்பழை, அளவெட்டி, காங்சேன்துறை போன்ற இடங்களிலிருந்து வரும் பேரூந்துகள் தரித்துச் செல்லும் இடமாக காணப்படுவது இன்னுமொரு சிறப்பு. 1970களில் பட்டண சபைத் தலைவராக இருந்த செனட்டர் நாகலிங்கம் என்பவரின் முயற்சியினாலேயே இந்த பஸ்தரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டது. இப்போது உள்ளதைப் போன்று அந்தக் காலத்தில் சிறிய பஸ்கள் (மினி பஸ்) இருக்கவில்லை எல்லாமே அரச பேரூந்துக்கள் தான். அதே போல் ரயில் பயணங்களும் முன்னைய காலங்களில் அதிகமாய் இருந்தன. 7 ரூபாயுடன் கொழும்பு சென்றிருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளலாம்.

### கல்வி

றோ.க தமிழ் கலவன் பாடசாலை. கந்தையா பாடசாலை, நாகேஸ்வரி வித்தியாலயம், ஸ்கந்தவரோதயா கல்லூரி என்பன சுன்னாகத்தில் இயங்கும் பாடசாலைகளாகும். இதைத் தவிர இங்குள்ள மாணவர்கள் யாழ்ப்பாணத்தினை நோக்கியும், அருகில் உள்ள உடுவில் பெண்கள் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி போன்றவற்றையும் நாடுகிறார்கள். தனியார் கல்வி நிலையங்களுக்கும் இங்கு குறைவில்லை.

அத்தோடு ஒரு பொது நூலகமும் இங்குள்ளது. சுண்ணாகம் பட்டினச் சபையில் 01.10.1964 ஆம் ஆண்டு பட்டின சபைத் தலைவரான செனட்டர் நாகலிங்கத்தின் முயற்சியால் ஆரம்பிக்கப் பட்டது. 1973 இல் இது மீள் கட்டமைப்புச் செய்யப்படுவதற்கு ஊர் மக்கள் பெருமளவில் நிதியுதவி செய்துள்ளனர். இங்கு இணைய வசதிகளும் காணப்படுவதுடன் பிரபலமானவர்களின் கல்வி விரிவுரைகளும் நடைபெறுகின்றன. இன்றும் இந் நூலகத்தை கிட்டத்தட்ட 4,000 பேர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### இலக்கியம்

சுன்னாகத்தில் இன்னொரு பெருமைக்குரிய விடயம் குமாரசாமி புலவரின் பிறப்பிடமாக அது இருப்பதே. தமிழ் பண்டிதராக இருந்த இவர். சைவ சமய மறுமலர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டு உழைத்தார். 1854இல் பிறந்த இவர் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பபுச் செய்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம் வரைக்கும் இவரது புகழ் பரவியிருந்தது. இன்றும் உடுவில் பொதுசன நூலகவளாகத்தில் குமாரசாமிப் புலவரின் சிலையைக் காணலாம்.

### வாகன வசதிகள்

முற் காலங்களில் சைக்கிள் பயணம் ரொம்பவும் குறைவாகவே இருந்தது. நூறில் நான்குபேர் தான் சைக்கிள் வைத்திருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் அரச உத்தியோகம் செய்பவர்களாகவே இருந்தனர். அவர்களிலும் சிலரிடம் கார் இருந்தது. ஏ40, சோமசெற் என்று அழைக்கப்படுகின்ற கார்களும் காணப்பட்டன. ஏனையவர்கள் இந்தக் கார் உரிமையாளருக்கு பணம் செலுத்தி (பஸ்ஸை விட இரண்டு, மூன்று ரூபாய்கள் அதிகம்) யாழ்ப்பாணத்திற்குச் செல்வார்கள். முக்கியமாக பிரபல நடிகர்களின் திரைப் படங்களை காண்பதற்குத் தியேட்டர் செல்லும் ரசிகர்கள் இந்தக் கார்களை நாடுவதுண்டு, ஆனால் இப்போது இங்கே உந்துருளி மற்றும் கார்களின் எண்ணிக்கைசற்று

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



அந்தோனியார் ஆலயம்



கந்தரோடை



பொது நூலகம்

இவரது வேலை பறிபோயிருந்தது. புதிதாக வேலை எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. அப்பா மிதமிஞ்சிக் குடிக்கத் தொடங்கி சதாகாலமும் போதையிலே கிடந்தார். ஒரு இரவில் அவருக்கு மப்பு ஏறிப் போக எங்கள் எல்லோரையும் தன்னருகில் கூட்டிவைத்து எங்கள் எதிர்காலம் பற்றிய தீர்க்க தரிசனத்தை உரைத்தார். “எல்லோரும் என்னை நன்றாகப் பாருங்கள்”, “நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்” அவரால் சரியாக நிற்கக் கூட முடியவில்லை, ஆள் தளும்பிக் கொண்டிருந்தார். தம்பி ரேயில் தொடங்கிய அவர் மகனே நீ ஒரு வைத்தியனாவாய், பமிலா நீ தாயாவாய், இம்மானுவேல் நீ தகப்பனாவாய், என்றவர் சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு என்னைப் பாரத்து நீ விமான ஓட்டியாவாய் மகளே என்றார்.

ஒரு நாள் அப்பா தான் சிறையிலிருந்த காலத்தில் சிற்றன்னை பக்கத்து வீட்டிலிருந்த இளைஞனுடன் உடலுறவு வைத்துக்கொண்டதாகச் சிற்றன்னையைக் குற்றம் சாட்டினார். வீடு முழுவதும் விந்துக்களின் நாற்றமாயிருக்கின்றது எனக் கத்திக் கொண்டே சிற்றன்னையைப் பிடித்து வெளியே இழுத்துக் கொண்டு தோட்டத்தில் வைத்து அடிக்கத் தொடங்கினார். ஒரு வராத்தில் பழைய வேலை அவருக்குத் திரும்பவும் கிடைத்தது. குடிப்பதை அவர் நிறுத்தினார்.

### அம்மாவைத் தேடி

எனக்கு மெதுவாக உடல் தேறி வந்தது. அதுகூட அப்பாவின் மனைவிக்குப் பிடிக்கவில்லைப் போலும். அவர் புயலுக்குப் பின் தோன்றும் கொடூரமான அமைதி போல அலைந்து கொண்டிருந்தார். அப்பாவும் அமைதியாகவே இருந்தார். என்னுடன் சிறிது அன்பாகக் கூடயிருந்தார். அவர் எனது முறிந்த விரல்கள் குணமாகும் வரை காத்திருந்தார் போலும். விரைவிலேயே பாடசாலை விடுமுறை வந்தது. நாள் முழுதும் வீட்டிலிருப்பதை நினைக்கவே பயமாயிருந்தது.

விடுமுறைக்கு முந்தைய நாளில் மகிழ்வும் துக்கமும் கலந்த உணர்வுடன் பாடசாலைக்குச் சென்றேன். எல்லோரும் பாடசாலை மண்டபத்தில் கூடியிருந்தனர். மாணவர்களின் பெற்றோர்களும் அங்கு வந்திருந்தனர். என்னருகில் யாருமில்லை. மாணவர்களின்



# குழந்தைப் போராளி




சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

பெறுபேறுகள் அறிவிக்கப்படத் தொடங்கும் போது என் மனதை அச்சம் படிந்த நம்பிக்கை சூழ்ந்திருந்தது. நான் வகுப்பின் முதன் மாணவியானால் எனக்கும் பரிசு கிடைக்கும். தலைமையாசிரியர் மேடையிலேறி முதலாம் இடங்களைப் பிடித்திருந்த மாணவ மாணவிகளுக்கு நன்றி கூறினார். தராதர அறிக்கை வாசிக்கும் நேரமும் வந்தது. இரண்டு பெயர்கள் அறிவிக்கப்பட்டன. மூன்றாவதாக எனது பெயரும் வாசிக்கப்பட்டது. எனக்குப் பாடப்புத்தகங்கள், வண்ணம் தீட்டும் பென்ஸில்கள் பரிசாகக் கிடைத்தன.

தலைமைசிரியர் விடுமுறையை அறிவித்ததும் நாங்கள் மரபான விளையாட்டொன்றைத் தொடங்கினோம். ஒவ்வொருவரும் ஒரு மரக் கிளையைத் தேடி எடுத்துக்கொண்டோம். எங்களுக்குப் பிரியமில்லாத ஒவ்வொருவருக்காவும் ஒரு சிறிய கிளையை மண்ணில் நாட்ட வேண்டும். அடுத்த பருவ காலத்தை மாணவர்கள் மன்னித்தல் மறத்தலுடன் தொடங்குவதே இந்த விளையாட்டின் நோக்கம். அது முடிவடைந்ததும் எனது தோழிகளுடன் கதைத்துக் கொண்டே வீட்டை நோக்கிச் சென்றேன். வழியில் என்னை இடைமறித்த சோபியா சிற்றன்னையும் அவரது தாயாரும் வீட்டின் முன்னால் தெருவில் கோபத்துடன் எனக்காகக் காத்திருப்பதாகவும் நான் வீட்டிற்கு நேரங் கழித்துச் செல்வதால் அவர்கள் அப்பாவிடம் சொல்லி என்னைத் தண்டிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும் என்னிடம் சொன்னாள்.

சிறிது நேரம் கண்ணீருடன் போராடிய நான் செய்வதறியாது எனது உண்மையானத் தாயைத் தேடிப் பற்றீசியாவின் வீட்டை நோக்கிப் போனேன். வழி முழுவதையும் எனது கண்ணீரால் நனைத்தபடியே நடந்து சென்றேன். பற்றீசியாவும் அவரது இரண்டு மகள்களும் வீட்டின் முன் புறத்தில் நின்றிருந்தனர். என்னைக் கண்டதும்

"நீ இங்கு வந்தது உனது அப்பாவிற்குத் தெரியுமா?" என்பதே பற்றீசியாவின் முதற் கேள்வியாக இருந்தது. இல்லையெனத்

தலையை அசைத்துக்கொண்டே எனது முறிந்த விரல்களை அவருக்குக் காட்டி "என்னை எனது உண்மையான அம்மாவிடம் கூட்டிச் செல்லுங்கள்" எனப் பற்றீசியாவிடம் மன்றாடினேன். பற்றீசியா தலையைக்குனிந்து கொண்டே "இல்லை ...என்னால் முடியாது உனது அப்பாவை நினைத்தால் எனக்கு அச்சமாயிருக்கிறது. நீ உடனடியாக உன் வீட்டுக்குத் திரும்பிப் போய்விடு" என்றார்.

"என்னை அங்கு திருப்பி அனுப்பினால் விசம் குடிப்பேன்" என்று உறுதியான குரலில் சொன்னேன். பற்றீசியாவின் மகள்கள் என்னைத் தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றனர். இரவுணவு முடிந்ததும் பற்றீசியா எனது அம்மாவின் படத்தைக் காட்டினார். நான் தோற்றத்தில் அம்மாவையே உரித்து வைத்திருப்பதாகக் கூறி அம்மாவிடம் எப்படிச் செல்ல வேண்டுமென்று வழியையும் விபரித்தார். **(தொடரும்)**

---

அதிகம்தான் என்பதை சுன்னாகம் சந்தியும், பஸ் நிலையமும் வெளிக்காட்டுகின்றன.

### பொழுதுபோக்கு

சுன்னாகத்தில் இன்னொரு பிரபலமான விடயமாக “நாகம்ஸ்” தியேட்டர் இருந்தது. 1970களில் யாழ்ப்பாணத் தியேட்டர்களுக்கு இணையான வசதிகளுடன் காணப்பட்டது இத் திரையரங்கம். 55 சதம் தான் அங்கே டிக்கெட். சுன்னாகத்தைச் சுற்றியிருந்தவர்களின் சிறந்த பொழுது போக்கு இடமாக இருந்த “நாகம்ஸ்” திரையரங்கம் யாழ்ப்பாணத்தில் திரையரங்கங்களின் அதிகரிப்பினால் 2010களிலிருந்து இயங்காமல் போய்விட்டது. (கடைசியாக இங்கே “நிமிர்ந்து நில்” படம் ஓடியதாகக் கேள்வி)

### கோவில்கள்

இந்துக்கள் அதிகமாக வாழும் சுன்னாகத்தின் கிழக்கே சிவன் கோவிலும் மேற்கே ஐயனார் கோவிலும் காணப்படும் அதே வேளை கிறிஸ்தவர்களுக்கென்று புனித அந்தோனியார் ஆலயம் காணப்படுகிறது. இந்துக் கோவில்களில் வான வேடிக்கைகளுடன் கூடிய திருவிழாக்கள் இடம்பெறுவதுடன் கதாபிரசங்கங்களும் நிகழ்த்தப்படுகின்றன.

இவையெல்லாவற்றையும் விட, சுன்னாகத்திற்கு அருகில் உள்ள கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மை குறிப்பிடப்பட வேண்டியது. யாழ்ப்பாணத்தில் உள்ள. மிகத்தொன்மையான மக்கள் வாழிடம் மட்டுமல்ல, இலங்கையிலேயே மிகத்திட்டமிடப்பட்ட நகர உருவாக்கம் நடந்த முதலாவது இடமாகவும் கந்தரோடையே இருந்துள்ளது. பெருங்கற்காலத்திற்கு உரியதாக கந்தரோடை இருக்கலாமென்பதுடன், அங்கிருந்த


ஒக்ரோபர் எழுச்சியில் கே.ஏ.சுப்ரமணியம்


சிவன்கோவில்

வர்கள் தமிழ்பௌத்தர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும், தற்போது அது சிங்களவர்கள் அதிகமாக வந்து பார்வையிடும் சுற்றுலாதலமாக மாறியுள்ளது.

காண்டீபன் கடை, கந்தசாமி கடை போன்ற கடைகள் தான் இங்கே பிரபலமான அறியக் கூடிய கடைகளாக 1970 களில் இருந்தன. அந்தக் கடைகள் இருந்த இடத்தில் இப்போது வேறு கடைகளையே காணமுடிகிறது. சண்யோ உணவகமே தற்போது இங்கு இளைஞர்களின் பிடித்தமான உணவகமாக மாறியிருக்கின்றது. அத்தோடு சைவ உணவிற்கு நாராயணா ஹோட்டல், அசைவ உணவிற்கு ஓரியன்ட் ஹோட்டல், ஸம்ஸம் ஹோட்டல் போன்றவையும் பிரபலம்.

வங்கி வசதிகளும் இங்கு தாராளமாக காணப்படுகின்றன.

### தொழில்

சுன்னாக மக்கள் ஆரம்பத்தில் விவசாயத்தை முன்னிலைப்படுத்தி செய்து வந்தாலும், நெசவுத் தொழிலையும் ஒரு சாரார் மேற்கொண்டு வந்தனர். சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தின் ஒரு பக்கக் கட்டிடத்தில்தான் நெசவுத் தொழில் நடந்து வந்தது. இங்கே நெசவு செய்யப்படும் புடவைப் பொருட்கள் யாழ்ப்பாணத்தின் உள்ளேயே விற்பனை செய்யப்பட்டது.

முன்னைய காலத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபராயிருந்த ஓரியன்ட் சுப்பிரமணியம் என்பவர் கல்விக்கு மாத்திரம் அல்லாது, நெசவுத் தொழிலுக்கு சிறந்த ஊக்கம் கொடுத்தார். 1945 இல் மகாத்மா காந்தி இந்த நெசவுத் தொழிற்சாலையில் ஒரு கூட்டத்திற்கு வந்தமை பேசப்பட்ட விடயமாக இருந்தது.

### சில பதிவுகள்

சுன்னாகம் என்றதும் அநேகமானோருக்கு ஞாபகம் வருவது கழிவு ஓயில் விவகாரம். சுன்னாகம் மின்நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு, நிலக்கீழ் குடிநீருடன் கலந்துவிட்டதே சுற்றயல் பகுதியில் ஏற்பட்ட பெரும் மானிடஅவலத்திற்கு காரணமெனப்பட்டது. ஆனால் சுன்னாகம் மின்நிலையத்தினர் அதை மறுத்தார்கள்.

ஆனால், மின்நிலைய எண்ணெய் கழிவு நிலத்தின் கீழ் அகற்றப்பட்டதை யாரும் மறுக்கவில்லை. சுன்னாகம் மின்நிலையத்தை சுற்றியுள்ள பிரதேச கிணறுகளில் சூழ்ந்த கழிவுஎண்ணெய் படலம் இப்போது மெல்லமெல்ல அகன்றுவிட்டாலும், இன்னும் அந்த நீர் பருகத்தக்கதல்ல. பருகுபவர்கள் ஏதாவது அசௌகரியத்தை சந்திக்கிறார்கள்.

சுன்னாகம் கழிவு எண்ணெய் விவகாரம் அரசியலில் பெரும் புயலை கிளப்பியது.

### தேவைகள்

சுன்னாகம் நாற்சந்தியின் மேற்கு புறமாக அளவெட்டி செல்லும் பாதையும் கிழக்காக புன்னாலைக்கட்டுவன் செல்லும் பாதையும் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றன. அதிலும் அளவெட்டி செல்லும் பாதை அதிகமானவர்களால் பயன்படுத்தப்படும் பாதையாக இருப்பதால் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.



## வில்லங்க ஒற்றுமை!

த்ரிஷாவிற்கு மார்க்கெட் டல்லாக தொடங்கிய சமயத்தில்தான் திருமண நிச்சயார்த்தம் நடந்தது. வருண் மணியனுடன் நிச்சயதார்த்தம் ஆகி, திடீரென பிரிந்தார்கள். அதன் பின் நடிப்பில் தீவிர கவனம் செலுத்த தொடங்கிய த்ரிஷாவிற்கு கைமேல் பலன். நிறையப்படங்கள் வரிசையாக ஒப்பந்தமாகி, இப்போது பிஸியான நடிகை. இதே கதைதான் அமலாபாலிற்கும் நடந்துள்ளது. இயக்குனர் விஜயை விவாகரத்து செய்ததன் பின்னர் வரிசையாக நிறையப்படங்களில் ஒப்பந்தமாகிறார். இரண்டு நடிகைகளிற்கும் நடந்ததை பார்த்து மற்றைய நடிகைகள் விவாகரத்து கேட்காமல் இருந்தால் சரி என் கோடம்பாக்கத்தில் பேசிக்கொள்கிறார்கள்.

## தனிமைப்படுத்தப்படும் விஷால்?

தென்னிந்திய நடிகர் சங்கம் என்றாலே பெரும் வில்லங்கமாகிவிட்டது. நடிகர் சங்க நிகழ்ச்சிகள என்றாலே ரகளையென்று ஆகிவிட்டது. அண்மையில் நடந்த பொதுக்குழு கூட்டத்தின் பின் நடிகர் சங்கம் அமைதியாக உள்ளது. வழக்கமாக ஏதாவது நிகழ்ச்சியென்றால் நடிகர் சங்க நிர்வாகிகள் நாசர், விஷால், கார்த்தி, கருணாஸ் கூட்டாகவே வருவார்கள். ஆனால் ஜெயலலிதா சமாதிக்கு அஞ்சலி செலுத்த வந்தபோதும், சோவின் இறுதி நிகழ்விலும் விஷால் தனிமையாகவே வந்துள்ளார். இது பல சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. நடிகர் சங்க பிரதானிகளிற்குள் ஏதாவது சச்சரவா என்ற ரீதியிலும் பேச்சு எழுந்துள்ளது.

## நடிப்பை விரும்பும் நடிகை!

குத்து சண்டை வீராங்கனையாக இருந்து இறுதிச்சுற்று படத்தின் மூலம் நடிகையானவர் ரித்திகா சிங். இதில் மாதவனிற்கு ஜோடி. சில மெல்லிய காதல் காட்சிகள் இருந்தாலும், இதிலும் குத்துச்சண்டை வீராங்கனையாகவே நடித்தார். அடுத்து விஜய் சேதுபதியுடன் நடித்த ஆண்டவன் கட்டளையிலும் துணிச்சலாக நிருபர் பாத்திரம். அடுத்து இறுதிச்சுற்று தெலுங்கு ரீமேக். இதை தொடர்ந்து சிவலிங்காவில் ராகவா லாரன்ஸ் ஜோடி. இதுவும் நடிப்பிற்கு முக்கியத்துவமுள்ள படம். கனமான பாத்திரமுள்ள படங்களை மட்டுமே தேடிப்பிடித்து நடிக்கிறார் ரித்திகா. கவர்ச்சியை விரும்பவில்லை. இதனால் பல இயக்குனர்கள் அவரை அணுக தயங்குகிறார்களாம்.

## ரஜினியுடன் கைகோர்க்கும் சிரஞ்சீவி?

2.0 படம் இந்திய அளவில் ஹிட்டாக தேவையான கலவையை உருவாக்குவதில் லைகா நிறுவனம் தீவிரம் காட்டி வருகிறது. தமிழ் ரசிகர்களை குஷிப்படுத்த ரஜினி, இந்திக்கு அக்சய்குமார் என இருவர் உள்ளனர். கவர்ச்சி ஏரியாவை கவர் பண்ண எமி ஜக்சன் இருக்கிறார். ஆனால் தெலுங்கு ஏரியாதான் பலவீனமாக உள்ளது. இதை உணர்ந்த லைகா, தெலுங்கு சூப்பர் ஸ்டாராக இருந்த சிரஞ்சீவியை கௌரவ வேடத்தில் நடிக்க வைக்க முயற்சிக்கிறது. சூப்பர் ஸ்டாராக இருந்த காலத்திலேயே ரஜினியுடன் ராணுவவீரன், மாப்பிள்ளை படங்களில் சேர்ந்து நடித்துள்ளார். இந்தப்படத்திலும் இணைந்தால், இருவரும் இணையும் மூன்றாவது படமாகும்.

## எதிலும் முன்னுதாரண அஜித்!

முன்னணி நடிகர்களின் படங்களில் ஒரே நடிக, நடிகையர்கள் தொடர்ந்து நடிப்பது வழக்கம். காரணம், தனக்கு வேண்டப்பட்டவர்களை நாயகர்களே சிபாரிசு செய்வார்கள். கதாநாயகி, நகைச்சுவை நடிகர், தொழில்நுட்ப கலைஞர்கள் வரை இது நடக்கும். இந்த கலாசாரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒருவர் அஜித்தான். எனக்காகவும் யாரும் சிபாரிசு செய்ய வேண்டாம், நானும் யாருக்கும் சிபாரிசு செய்யமாட்டேன். முயன்றுதான் அவரவருக்கான இடத்தை பிடிக்க வேண்டுமென்பதே அவரது நிலைப்பாடு. எவ்வளவு நெருக்கமானவர்கள் என்றாலும், சிபாரிசு செய்யுமாறு கேட்டால் மறுத்துவிடுகிறார். நடிப்பது மட்டும்தான் எனது வேலை. கதையை தயார் செய்யும் இயக்குனருக்குத்தான் யாரை நடிக்க வைக்க வேண்டும் என்பதும், தயாரிப்பவருக்குத்தான் யாரெல்லாம் தொழில்நுட்ப கலைஞராக இருக்க வேண்டுமென்பதும் தெரியும் என்றுதான் அஜித் சொல்கிறார்.

# டூரிங் டாக்கீஸ்



## ரொக்கின் ரசிகரான ராஜேந்திரன்!

ஜெய் நடித்துவரும் எனக்கு வாய்த்த அடிமைகள் பரபரப்பாக சூட் பண்ணப்பட்டு வருகிறது. ப்ரணிதா நாயகி. காளி வெங்கட் அஜித் ரசிகராக நடித்துள்ளார். ராஜேந்திரன் மல்லுயுத்த வீரர் ரொக் ரசிகராக நடிக்கிறார். ராஜேந்திரன் அடிக்கடி தன்னை ரொக்காக கருதிக்கொள்வாராம். கிராபிக்சில் இந்த காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளதாம். படம் முழுநீள நகைச்சுவை படம். ஜெய், ராஜேந்திரன் இருவரும் நெருங்கிய நண்பர்களாக நடித்துள்ளார்களாம். இதில் சொல்ல வேண்டியது ப்ரணிதா. நல்ல அழகும், திறமையும் இருந்தும் சினிமா உலகம் கண்டுகொள்ளாத இவருக்கு இந்தப்படம் திருப்பத்தை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது.

## மீண்டும் ராஜேந்தர்!

ரி.ராஜேந்தர் இயக்கிய பெரும்பாலான படங்கள் கல்லூரி காதல், குடும்ப உறவை மையமாக கொண்ட படங்கள். ஆனால் அண்மைக்காலமாக அவர் படம் இயக்குவதிலிருந்து ஒதுங்கியிருந்தார். 2007 இல் வீராச்சாமி என்ற படத்தை இறுதியாக இயக்கினார். இதன்பின் நடிப்பில் மட்டும் கவனம் செலுத்தினார். இனி மீண்டும் இயக்குனராக அவதாரம் எடுக்கவுள்ளாராம். அடுத்த வருட தொடங்கத்தில் படமொன்றை இயக்கவுள்ளார். இதுவும் கல்லூரி காதல்கதைதான். இரண்டு முன்னணி நாயகிகளை நடிக்க வைக்கவுள்ளார். நாயகன் சிம்புவா அல்லது வேறு யாருமா என்பது தெரியவில்லை.

## சமந்தா சபதம்!

நடிகைகள் திருமணமானலே கதை முடிந்து விடுகிறது. அக்கா, அண்ணி, அம்மா வேடங்களைதான் சினிமா உலகம் கொடுக்கிறது. இதில் மாற்றத்தை ஏற்படுத்த ஐஸ்வர்யா ராய், வித்யாபாலன், அமலாபால் போன்றவர்களால்தான் முடிகிறது. இந்த பட்டியலில் தானும் நிச்சயம் இடம்பிடிப்பேன் என சபதம் செய்துள்ளார் சமந்தா. திருமணத்தின் பின் கதாநாயகி வேடம் கொடுக்க சினிமா உலகம் தயங்குவது ஏன் என்றே தெரியவில்லை. இந்த நிலை மாற வேண்டும். நாகசைதன்யாவை திருமணம் செய்த பின்னரும் நான் நடிப்பேன். நடிகைகளிற்கு திருமணம் ஒரு தடையாக இருக்க கூடாது. இதை நான் நடைமுறைப்படுத்திக்காட்டுவேன் என்றுள்ளார்.

## ஆளே மாறிய முத்த நடிகை!

நடிகைகள் பலவித சத்திரசிகிச்சைகள் செய்து தங்களை அழகாக்கி கொள்வது சகஜம். ரம்பா தொடை, நயன்தாரா கொழுப்பு நீக்கம், அனுஷ்கா சர்மா மூக்கு என சத்திரசிகிச்சை நடிகைகள் பட்டியல் நீளமானது. உடல் தோற்றம் மாற்றுவதை கடுமையாக சாடியுள்ளார் நடிகை வாணி கபூர். தமிழில் ஆஹா கல்யாணம் படத்தில் நடித்தவர். அண்மையில் இந்தியில் ரன்வீர் சிங்குடன் பெஃபிகர் படத்தில் 25 முத்தக்காட்சி பரபரப்பை ஏற்படுத்தினார். இந்தப்படத்தில் வாணியின் தோற்றம் நிறைய மாறுபட்டிருந்தது. கன்னங்கள் ஒட்டி, உடல் இளைத்து காணப்பட்டார். அவர் கொழுப்பு நீக்க சிகிச்சை செய்துள்ளார் என்ற தகவல் பரவியதையடுத்து அவசரமாக மறுத்துள்ளார். இந்த சிகிச்சைகள் செய்ய அதிக பணம் தேவைப்படும். என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது. அதுதவிர, நான் என் உடலை நேசிக்கிறேன். இயற்கையான தோற்றத்தை மாற்றுவது தவறு என நினைக்கிறேன் என்றுள்ளார்.

நந்தா கந்தசாமி

# நான் பிடல்

## ( Yo Soy Fidel )

சான்டியாகோ டி கூபா என்றே தான் அந்த நகரத்தை கியூப மக்கள் அழைக்கிறார்கள். அது அவர்களின் புரட்சி நகரம். அங்கு தான் Santa Ifigenia Cemetery இல் பிடலின் சாம்பல் "பிடல்" என எழுதப்பட்ட அறையில் வைக்கபட்டது. அந்த இடத்திலேயே தான் அவரது புரட்சி தோழர்களின் சாம்பல்களும் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. சான்டியாகோ டி கியூபாவில் இருந்து பிடலின் இறுதி நிகழ்வில் கலந்து விட்டு கொல்கின் நகருக்கு திரும்பும் வழியில் பழங்கள் மற்றும் மரக்கறிகள் விற்கும் தெருவோர தள்ளுவண்டி பெட்டி கடையில் கூட விற்பனை வரிகட்டுவதற்கான பதிவுப் புத்தகம் வைத்திருக்கிறார்கள், பதிவும் செய்கிறார்கள்.

பிடலின் சாம்பல் கபானாவில் இருந்து முக்கிய நகரங்களுடாக சான்டியாகோ டி கியூபாவை வந்தடையும் வழியெங்கும் சாலையோரங்களில் மக்கள் பெருமளவில் திரண்டிருந்தார்கள் அங்கு சின்னஞ்சிறார்களின் முகங்களில் எல்லாம் 'நான் பிடல்' (Yo Soy Fidel ) என்னும் வாசகம் எழுதப்பட்டிருந்தது அவர்கள் பிடலை அவரகளின் தேசத்தை நேசிக்கிறார்கள்.

சான்டியாகோ டி கியூபாவில் பிடலின் இறுதி நிகழ்வில் ராகுல் பேசும் போது அவரின் குரல் சிறுது உடைந்த கணப்பொழுதில் அங்கு திரண்டிருந்த மக்கள் கூட்டம் "ராகுல், நாம் உம்முடன் இருக்கிறோம்" "ராகுல், நாம் உம்முடன் இருக்கிறோம்" என பேரலை வந்து மோதும் ஒலியென அதிர்ந்தார்கள்.

பிடல் இறுதியாக தொலைக்காட்சி வழியாக தங்கள் முன் தோன்றி கியூபா உங்கள் தேசம் அதனை நேசியுங்கள் என்னை, கியுப புரட்சியை மறந்து விடாதீர்கள் என கேட்டுக் கொண்டதாக நாம் தங்கியிருந்த வீட்டுகாரர் எங்களிடம் சொன்னார். 26 JULIO கொடிகள் எங்கும் பறக்கிறது.

சிலைகளையோ மற்றும் வீதிகளின் பெயர்களையோ தன் பெயரில் வேண்டாம் என பொலிற்ரோவிடம் பிடல் கண்டிப்புடன் கேட்டுக்கொண்டதாகவும் அதனை தாம் மிகுந்த சிரத்தையுடன் கடைப்பிடிக்க போவதாகவும் தனது இறுதி உரையில் ராகுல் சொன்ன பொழுது 'பிடல்' 'பிடல்' என்னும் வாசகம் வானதிரக் கேட்டது. இதுவரையில் 'எனஸ்ரோ' என்னும் பெயரே அதிகமான கியுப மக்களின் பெயராக இருந்திருக்கிறது இனி கியூபாவில் பிறக்கும் ஆண் குழந்தைகள் "பிடல்", எனவே அழைக்கப்பட போகிறார்கள்.




கனடாவிற்கு வந்து இந்த 24 வருடங்களில் விடுமுறையைக் கழிக்க என சாத்திய படாதிருந்த பயணம் திடீரென சாத்தியமானது. ஒரு காலத்தில் அந்த மண் மீது ஒரு தடவையேனும் இறப்பதற்கு முன் கால் பதித்துவிட வேண்டும் என்ற கனவுகளுடன் இருந்த நாட்களை நினைவிற்கு கொண்டு வந்தது. வாழ்வில் முதலில் வாசித்த புரட்சிப் புத்தகம் "வரலாறு என்னை விடுதலை செய்யும்" , "சே" மற்றும் "பிடல்" மீதான பற்றுதல், இலங்கையில் சிறுவனாக இருந்த போது கேள்விப்பட்ட ஜேவி.பி யின் "சேகுவேரா புரட்சி" அது பிறந்த இடம் என இவ்வாறு அந்த மண் மீதான பற்றுதல் சிறுவயது முதல் இருந்தது.

வீதிகள் எங்கும் கழுவி போட்டது போல் சுத்தமாக இருக்கின்றது. பெண்கள் சுதந்திரமாக இரவிலும் நடமாடுகிறார்கள். மக்கள் பேசும் மொழி இனிப்பாக இருக்கிறது. நாம் சேகுவேரா என்று கேட்கும் போது அவர்கள் 'சேகவாரா' என திருத்துகிறார்கள். அது அழகாக அவர்களினால் உச்சரிக்கப் படுகின்றது. அது இனிமையாக இருக்கிறது. பெரும்பாலான ஆண்களும் பெண்களும் திடகாத்திரமாக இருக்கிறார்கள்.

கியூபாவில் மாடுகளை கொல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. கியூபா விவசாய நாடு அங்கு விளையும் பொருட்கள் இயற்கை பசளைகளைக் கொண்டே விளைவிக்க படுகிறது. அதற்காக மாடுகளின் தேவை கருதியும், பால் உற்பத்திக்காகவும் மாடுகளின் பெருக்கத்தை வேண்டியே இத்தடை விதிக்கபட்டுள்ளது. யாராவது மாட்டிறைச்சியுடன் கைது செய்யப்பட்டால் அவர்களுக்கு போதைப்பொருள் கடத்தலுக்கு இணையான தண்டனை வழங்கபடுவதாக அறிய முடிந்தது. இந்த விபரம் தெரியாமல் நாம் இரவு உணவுக்கு steak ஓடர் பண்ணிவிட்டு காத்திருந்த போது பன்றி இறைச்சி steak இனை பரிமாறினார்கள். அங்கு பன்றி இறைச்சியினையே steak என்கிறார்கள். இயற்கை பசளைகளுடனான விளைச்சல் என்பதால் மரக்கறிகள் மற்றும் உணவுவகைகள் சுவையாக இருந்தன.

பிரதான நகரங்களில் WiFi அவர்களது சதுக்கங்களில் பொருத்தி கொடுத்திருக்கிறார்கள் அங்கு இளவயதினர் செல்போன்களுடன் இன்ரநெற் தொடர்புகளை வெளி உலகுடன் ஏற்படுத்துகிறார்கள். அதற்கான கட்டணம் அவர்களது வருமானத்திற்கு அதிகமானதாக இருக்கிறது. வீடுகளில் இருந்து WiFi தொடர்பினை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

பலவருடங்களுக்கு முன் கியூபாவில் இருந்து வெளியேறி ஒஸ்ரியாவில் குடியுரிமையுடைய கியூப பெண் எங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் நீங்கள் கியூபாவின் துக்க நாட்களில் வந்திருக்கிறீர்கள். இது எம் வாழ்வில் சோகமான தருணம். கியூபா மகிழ்ச்சியான நாடு. மக்கள் எப்பவுமே கொண்டாட்டங்களில் திளைத்திருப்பார்கள் அதனை நீங்கள் காண கொடுத்து வைக்கவில்லை என சொன்னார். அவர் ஒரு கியூப மருத்துவ பட்டதாரி. தனது நாடு அழகானது மகிழ்ச்சியானது தான் தனது நாட்டிலேயே தங்கிவிட ஆசைபடுவதாக சொன்னார். இரண்டு வருடங்களின் முன் அவரால் திருமணம் செய்து ஒஸ்ரியாவில் குடியுரிமையை கொண்ட அந்த பெண்ணின் கியூப கணவன் மாற்றுக் கருத்தினை கொண்டிந்தார். இந்த 9 நாட்களில் பியர் குடிக்க முடியவில்லை கிளப்பிற்கு போக முடியவில்லை என அவரின் குறைகளிருந்து.

**· (கட்டுரையாளர் நந்தா கந்தசாமி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டவர். தற்போது கனடாவில் வசிக்கிறார். பிடல் கஸ்ரோ வின் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட பின் எழுதிய கட்டுரை இது)**





▶ இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்படும் 11 நபர் கொண்ட FA-கிண்ண உதைப்பந்தாட்ட தொடர் (11.12.2016)) புனித.ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. பெரியவிளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் சென்.ஹூட்ஸ் அணிகள் மோதின. ஆட்ட நேர முடிவில் 03:02 என்ற கோல்கள் அடிப்படையில் சென்.ஹூட்ஸ் அணி வெற்றி பெற்றது.

# இரக்க சுபாவம் கொண்டவர்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** பொதுவாகவே இரக்க சுபாவம் கொண்டவர். அதிலும் மாற்றுத் திறனாளிகள் என்றால் அவரது கருணை மனம் கங்கையாக பொங்கும். அதனால்தான், தான் வாழ்ந்த ராமாவரம் தோட்ட வீட்டில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான பள்ளி அமைக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். அவரது விருப்பப்படியே பள்ளி செயல்பட்டு வருகிறது.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் பார்வைத்திறன், செவித்திறன் இழந்தோர் பள்ளி ஒன்றின் விழாவில் கலந்துகொள்ள எம்.ஜி.ஆருக்கு அழைப்பு விடப்பட்டது. அதை ஏற்று அந்த விழாவில் எம்.ஜி.ஆர் கலந்து கொண்டார். இந்த விழாவில் 'கர்நாடக எம்.ஜி.ஆர்' என்று அழைக்கப்படும் பெருமை பெற்ற நடிகர் ராஜ்குமாரும் கலந்துகொண்டார்.

விழாவில் எம்.ஜி.ஆர் பேச ஆரம்பித்ததும் அவரது பொன்மனம் வார்த்தைகளாய் வெளிப்பட்டது. அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்குவதாக அறிவித்தார். விழி இழந்தவர்கள் பார்க்க முடியாவிட்டாலும் அவர் அறிவிப்பைக் கேட்டு கரவொலி எழுப்பினர். இதைப் பார்த்து காது கேளாதோரும் கைதட்டினர்.

உணர்ச்சிமயமான இந்தச் சூழலில் எம்.ஜி.ஆர் பேசியது மேலும் உள்ளத்தை நெகிழ வைத்தது. அந்த பள்ளிக்கு, தான் நிதி வழங்குவதற்கான காரணம் என்ன என்பதை எம்.ஜி.ஆர் தனது பேச்சில் குறிப்பிட்டார். 'நாடோடி மன்னன்' படத்தின் மாபெரும் வெற்றிக்கு பிறகு எம்.ஜி.ஆருக்கு கண் திருஷ்டி போல, சீர்காழியில் 'இன்பக் கனவு' என்ற நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த போது கால் முறிந்துபோனது.

நாடகத்தில் பெண்ணை ஒருவன் மானபங்கம் செய்வது போல ஒரு காட்சி. அந்தக் காட்சியில் நடித்தவர் நடிகர் குண்டுமணி. பெயருக்கேற்றபடி சிறு குன்று போலவே இருப்பார். பெண்ணைக் காப்பாற்ற குண்டுமணியுடன் எம்.ஜி.ஆர் சண்டையிடும் காட்சிதான் அவரது அறிமுகக் காட்சி.

மக்களின் ஆரவாரத்துக்கிடையே குண்டு மணியை எம்.ஜி.ஆர் தனது வலிமையான கரங்களால் 'அலாக்'காக தலைக்கு மேல் தூக்குவார். அன்று அந்தக் காட்சியில் நடிக்கும்போது சமநிலை தவறி எம்.ஜி.ஆருக்கு கால் முறிந்துவிட்டது. சென்னை திரும்பிய எம்.ஜி.ஆர் 6 மாதங்கள் சிகிச்சை காரணமாக ஓய்வில் இருக்க வேண்டிய நிலை.

சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்த எம்.ஜி.ஆரை சந்திக்க பார்வையற்றவர்கள் இரண்டு பேர் வந்தனர். அவர்களை உள்ளே அனுமதிக்கச் சொன்ன எம்.ஜி.ஆர் "எதற்காக இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்தீர்கள்?" என்று பரிவுடன் கேட்டார்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தோம்" என்று பதில் வந்தது.

"என்னைப் பார்க்கவா?" பரிதாபத்தோடும் வியப்போடும் எம்.ஜி.ஆர் கேட்டார்.

"ஆமாம். உங்களைப் பார்ப்பதற்குதான் வந்தோம். பார்வை இழந்த நாங்கள் எப்படி உங்களைப் பார்க்க முடியும் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? எல்லாரையும் போல உங்களை பார்ப்பதற்கு எங்களுக்கு புறக் கண்கள் இல்லையே தவிர, எங்கள் அகக் கண்களில் நீங்கள் ஆழமாக பதிந்திருக்கிறீர்கள். உங்களை எங்கள் கரங்களால் தொட்டு, ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தோம்" என்று அவர்கள் சொன்னபோது அவர்களது அன்பில் எம்.ஜி.ஆர் நெகிழ்ந்து போனார்.

இந்த சம்பவத்தை மேடையில் விவரித்து விட்டு தொடர்ந்து பேசும்போது எம்.ஜி.ஆர் கூறினார்... "இதுபோன்று என் மீது அன்பு செலுத்துவதற்கு லட்சக்கணக்கானோர் இருக்கிறார்கள் என்ற எண்ணமே எனக்கு அதிக தன்னம்பிக்கையை கொடுத்ததோடு, நான் விரைவில் குணமடையவும் உறுதுணையாக இருந்தது. கண்களை இழந்த அவர்கள் என் மீது காட்டிய அன்பு எனது வாழ்நாளில் மறக்க முடியாததாக அமைந்துவிட்டது. அவர்களுக்கெல்லாம் என் வாழ்நாளில் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இன்று சிறிய உதவி செய்யும் வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மகிழ்கிறேன்."

எம்.ஜி.ஆர் இதைசொன்னபோது உணர்ச்சி மேலிட கலங்கிய கண்களுடன் கூட்டத்தினர் எழுப்பிய கரவொலி பெங்களூர் முழுவதும் எதிரொலித்தது.

'நேற்று இன்று நாளை' படத்தில் 'பாடும் போது நான் தென்றல் காற்று...' என்ற சூப்பர் ஹிட் பாடல், படத்தில் இரண்டு முறை இடம்பெறும். படத்தின் ஆரம்பத்தில் வரும் பாடல் காட்சியில் மஞ்சள் வண்ண உடையில் கூலிங் கிளாஸ், தொப்பி அணிந்து எம்.ஜி.ஆர் மிகவும் இளமையாகவும் அழகாகவும் ஸ்டைலாகவும் இருப்பார்.

காட்சி படமாக்கப்பட்ட இடம் மைசூரில் உள்ள மலைப் பகுதி. ஒரு காட்சியில் மலையின் உச்சியில் எம்.ஜி.ஆர் நிற்பார். கமரா கோணம் கீழே இருந்து எடுக்கப்பட்டிருக்கும். அவருக்கு பின்னே வெண்மேகத்தை சுமந்தபடி விரிந்து பரந்த நீலவானம். ரம்மியமான காட்சி அது.


ஒரு இடத்தில் இடுப்பில் ஒரு கையை வைத்து மறுகையால் உலகம் எல்லையற்றது என்பது போல தலைக்குமேல் சுழற்றி அபிநயம் செய்வார். குறிப்பிட்ட வரிகளை பாடிவிட்டு இரண்டு கைகளையும் பக்க வாட்டில் உயர்த்தி 'T' வடிவில் விநாடி நேரம் நின்று, இடதுபுறம் அரை வட்டமாக எம்.ஜி.ஆர். திரும்பும் ஸ்டைலே தனி. அது அவருக்குத்தான் வரும். இந்தக் காட்சியில் எம்.ஜி.ஆர் பாடும் வரிகள்....

"எல்லைகள் இல்லா உலகம்... என் இதயமும் அதுபோல் நிலவும்...."

தொடரும்...

**மக்களின் ஆரவாரத்துக்கிடையே குண்டு மணியை எம்.ஜி.ஆர் தனது வலிமையான கரங்களால் 'அலாக்'காக தலைக்கு மேல் தூக்குவார். அன்று அந்தக் காட்சியில் நடிக்கும்போது சமநிலை தவறி எம்.ஜி.ஆருக்கு கால் முறிந்துவிட்டது.**

'உலகம் சுற்றும் வாலிபன்' படத்துக்கு பின் எம்.ஜி.ஆர் நடித்த 'நேற்று இன்று நாளை' படமும் அப்போதைய அரசியல் சூழலில் எதிர்ப்புகளை சந்தித்தது. படம் வரும் முன்பே 'நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று...' என்ற பாடல் ரசிகர்களிடம் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத் தியது. இந்தப் பாடல் காட்சியில் 'திண்டுக்கல் இடைத் தேர்தலில் அதிமுக வெற்றி' என்று ஓட்டு நிலவரத்துடன் பேனர் காட்டப்படும்போது தியேட்டர் அதகளப்படும். தடைகளை தாண்டி படம் வெளிவந்து 100 நாட்களைக் கடந்து ஓடி அமோக வெற்றி பெற்றது.


'நேற்று இன்று நாளை' படத்தில் எம்.ஜி.ஆர், மஞ்சுளா.

எம்.ஜி.ஆர் 100 நெடுந்தொடர் 34


எம்.ஜி.ஆருக்கு மாலை அணிவித்து வாழ்த்துகிறார் நடிகர் ராஜ்குமார்.


கால் முறிந்து எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்றபோது எடுத்த படம்.

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

உணவுப்பழக்கங்களைமட்டும்முறையாகப் புரிந்து கொண்டால், எந்த நோயைக் கண்டும் அஞ்சத் தேவையில்லை. எந்த மனிதர் தனது உடலுக்கும் உணவுக்குமான உறவை மதித்து நடக்கிறாரோ, அவரே ஒரு மருத்துவர்தான். நமது மரபுவழிப்பட்ட கொள்கைகளின் வெளிச்சத்தில் இருந்து அவ்வாறான உணவுப் பழக்கங்களை உங்களிடம் தெரிவிக்கின்றேன்.

ஐம்பூதக் கொள்கை (பஞ்சபூதக் கொள்கை) என்பதுதான் நம் முன்னோர் கடைப்பிடித்த அடிப்படைக் கோட்பாடு (Theory). கட்டடக்கலை, சிற்பக்கலை, வானியல், கப்பல் கட்டும் கலை, வேளாண்மை உள்ளிட்ட அனைத்து துறைகளுக்கும் அடிநாதம் ஐம்பூதக் கொள்கைதான். மருத்துவத்துக்கும் இதுவே அடித்தளம்.

'ஐம்பூதங்களால் ஆனதுதான் இவ்வுலகம்' என தொல்காப்பியர் பதிவு செய்தார். சங்க இலக்கியங்கள், திருமுறைகள், ஆழ்வார் பாசுரங்கள், சித்தர் பாடல்கள் யாவும் ஐம்பூதங்களைத்தான் அடிப்படை அறிவியல் காரணிகளாகக் கொண்டுள்ளன. இந்த ஐம்பூதங்களையும் வாதம், பித்தம், கபம் என மூன்றாகச் சுருக்கியது சித்த மருத்துவம்.

இந்த மூன்றும் உடலில் 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்றார் ஆசான் வள்ளுவர். உணவுப் பழக்கங்களின் வழியே இந்தச் சமநிலையைக் கடைப்பிடிக்கும் எளிய குறிப்புக்களை குறிப்பிடுகிறேன்.

நமது மரபு வழிப்பட்ட உணவுக் கொள்கையின் அடிப்படைகள் மூன்று:

1. பசிக்கும்போது மட்டும் உண்ண வேண்டும்.
2. எந்த நிலத்தில் வாழ்கின்றோமோ, அந்த நிலத்தில் இயற்கையாக விளைபவற்றை உண்ண வேண்டும்.
3. உணவின் தன்மைகள் அறிந்து உண்ண வேண்டும்.

**உணவு, எளிதில் செரிமானம் ஆகும் தன்மையில் இருக்க வேண்டும். வெப்பம், நீர் ஆகியவை மிகுதியாகவும் காற்று குறைவாகவும் உள்ள எந்தப் பொருளும் எளிதில் செரிக்கக் கூடியது. சமையல் முறைகளிலும் இந்த பக்குவத்தை நீங்கள் கடைப்பிடிக்கலாம்.**

பசியைப் பற்றி ஏற்கனவே விளக்கிவிட்டதால், அடுத்த நிலைகளுக்குச் செல்வோம். இயற்கையாக விளையும் எல்லாப் பொருட்களும் நமக்கான உணவுகள்தான். கரட், பீன்ஸ் போன்றவை கூட இயற்கை முறையில் விளைகின்றன. அவை நமக்கான உணவுகள்தான். உணவுப் பொருட்களை பொறுத்தவரை, எந்த விளைபொருளை நிலம் ஏற்றுக் கொண்டதோ, அதை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் மரபியல். பழமைவாதக் கருத்துக்களில் இருப்போர், இதை ஒப்புக் கொள்ளமாட்டார்கள். மரபு என்பது, கால மாற்றத்துக்குத் தேவையான கருத்துக்களை உள்வாங்கி வளர்வது. இயற்கை எதை ஏற்றுக் கொள்கிறதோ, அதை மனிதர்களும் ஏற்கத்தான் வேண்டும். இந்த அடிப்படையில் நமது பிரதேசத்தில் இயற்கையாக விளையும் அனைத்தும் நமக்கான உணவுகள்தான்.

அடுத்ததாக, உணவின் தன்மைகளை புரிந்து கொள்வோம். எல்லா விளைபொருட்களிலும் ஐம்பூதங்கள் உண்டு. ஆனால் ஒவ்வொரு விளைபொருளிலும் ஏதேனும் ஒரு பூதம் கூடுதலாக இருக்கும். 'இது வாயுப்பண்டம்', 'இது சூடு தரும் பொருள்' என்று எல்லாம் மூத்தோர் பேசுவதை கேட்டிருப்பீர்கள். ஒரு விளைபொருளைக் கண்டதும் அதில் எந்த பூதம் மிகுதியாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள சில எளிய வழிமுறைகள் உள்ளன.

காற்று மிகுதியாக உள்ள பொருட்களைப் பார்ப்போம். எல்லா வகையான பருப்புக்களும் பயறுகளும் காற்றுப் பொருட்கள்தான். துவரம் பருப்பு, பாசிப் பருப்பு, கடலைப் பருப்பு போன்றவற்றில் காற்று மிகுதியாக இருக்கும். துவரைச் செடிகளைப் பாருங்கள். அவற்றில் துவரைப் பிஞ்சுகள் முளைக்கும்போது, முதலில் வானத்தைப் பார்த்தவாறு செங்குத்தாக இருக்கும். அவை வளர வளர, படுக்கைவசத்தில் இருக்கும். துவரை எப்போது படுக்கைவசத்தை அடைகிறதோ, அப்போது அதில் காற்று மிகுந்துவிட்டதெனப் பொருள். படுக்கை நிலையிலுள்ள துவரை முற்றிக் காயத் தொடங்கியதும் அறுவடையாகும். இந்தப் பருப்புத்தான் நமக்கான உணவாகும்.

கொத்தவரங்காய் அல்லது சீனி அவரக் காய்ச் செடிகளும் இதே போலத்தான். அவற்றின் பிஞ்சுகள் முதலில் வானை நோக்கிச் செங்குத்தாக இருக்கும். வளரும் போது பக்கவாட்டில் காணப்படும். அந்த நிலையில்தான் அறுவடை செய்யப்படும். நவீன தாவரவியலில் இவற்றை 'இருவித்திலை தாவரங்கள்' என்பார்கள். இவை யாவும் காற்றிலிருந்து தழைச்சத்து உறிஞ்சும் திறன்மிக்கவை என்பதும் நவீன தாவரவியல் பாடம்தான். இதைத்தான் நமது மரபுவழிப்பட்ட புரிதலில் இருந்து உங்களிற்கு விளக்குகிறேன்.

தட்டைப் பயறு, காராமணி, கொண்டைக் கடலை, மொச்சை, அவரை போன்றவை காற்று மிகுதியாகவுள்ளப் பொருட்கள். உடலில் காற்றுத் தொல்லைகள் உடையோர், இந்த உணவுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. தேவைப்பட்டால், சில காலத்திற்கு முற்றிலும் தவிர்ப்பது சிறப்பு.

இதே பயறுகள் காய்ந்து போகாமல் நீர்த்தன்மையுடன் இருந்தால், அவற்றில் காற்றும் நீரும் கலந்திருக்கும். இந்த நிலையில் அவற்றைச் சமைத்து உண்பது நன்மை தரும். துவரைத் தோட்டங்களில் துவரைக் காய்களைப் பறித்து அவித்து உண்ணும் வழக்கம் நம்மிடம் இருந்தது. இதேபோல, தட்டை, காராமணி, மொச்சை ஆகியவற்றையும் உண்ணுதல் நமது கிராமங்களில் இருந்த அருமையான உணவுப்பழக்கம். பொங்கல் உணவில் மொச்சீசை பச்சையாக அவித்து, பிற காய்கறிகளுடன் சேர்த்து உண்ணும் வழக்கத்தை நினைத்துப் பாருங்கள்.

பயறுகளும் பருப்புக்களும் நீர்த் தன்மையுடன் இருக்கையில், மிகுந்த நன்மை தரவல்லவை. அவை காய்ந்து உலர்ந்து விட்டால், நீர் காற்று மிகுந்துவிடும். இவ்வாறு காற்று மட்டும் கூடுதலாக உள்ள எந்த உணவும் செரிமானத்துக்குச் சிக்கல் தரத்தக்கது.

நிலக்கடலைப் பிஞ்சுகள் முதலில் செங்குத்தாக நிலத்துக்குள் நுழையும். பின்னர், வளர்ச்சிப் போக்கில் படுக்கை வசமாக மேல் நோக்கி நிமிரும். அவை படுக்கை நிலை அடைந்தபின்னர் அறுவடை ஆகும். இவ்வாறு படுக்கைநிலையில் இருக்கும் நிலக்கடலையில் பால் அதிகமாக இருக்கும். 'பச்சைக் கடலை'என அழைப்போம். பச்சைக் கடலைகளை அவித்து உண்பது சிறந்த உணவுப் பழக்கம். பால் மாறாத கடலைகளைப் பொரியலாகச் சமைப்பதும் சிறந்த உணவு. நன்கு உலர்ந்த நிலக் கடலைகளில் காற்றின் குணம் மிகுந்துவிடும். இவற்றை வறுத்துண்டாலும் செரிமானம் சரியாக இருக்காது. இதனால்தான், வறுத்த நிலக் கடலையுடன் வெல்லம் சேர்த்துச் சாப்பிடும் முறையை நம் முன்னோர் கடைப்பிடித்தனர். ஏனெனில், இனிப்பு சுவை செரிமானத்தைத் தூண்டவல்லது.

கொத்தவரை, வெண்டை ஆகிய இரு காய்களைப் பாருங்கள். இவை இரண்டும் செங்குத்து நிலையில் இருக்கும் போது அறுவடை செய்தால்தான், அவை சமைப்பதற்கு ஏற்ற பிஞ்சுக்காய்கள். இவை படுக்கை வசத்துக்குச் சாயத் தொடங்கினால் முற்றிவிடுகின்றன. அதாவது, காற்று மிகுந்த காய்களாகிவிடுகின்றன.

பல காய்கள் முளைக்கும் போது, வானைப் பார்த்து செங்குத்தாகத்தான் இருக்கின்றன. இந்த நிலையில் அவற்றில் வெப்பத்தின் தன்மை கூடுதலாக இருக்கும். வானில் இருந்து இறங்கும் வெப்பத்தை உள்வாங்கி வளர வேண்டிய தேவை அவற்றுக்கு இருப்பதால், இவ்வாறு வான் பார்க்கின்றன. அவரைக் கொடியில் உள்ள பிஞ்சுகளும் இப்படிதானே முதலில் வானை நோக்கிச் செங்குத்தாக இருக்கின்றன!

வெப்பத்தை உள்வாங்கினால்தான் விரைவாக வளர முடியும். குறுகிய காலப் பயிர்கள் அனைத்தும் இவ்வாறுதான் நடந்து



தொடர்ச்சி அடுத்தபக்கம்...




தமிழ் சினிமாவின் மிக முக்கிய படங்களில் ஒன்று முகமது பின் துக்ளக்'. அமரர் சோ அவர்களால் நாடகமாக நடத்தப்பட்டு வந்த கதை திரைப்படமானது, அவரே இயக்கி நடித்தார். நீலு, பீலி சிவம், மனோரமா, உஷா நந்தினி, அம்பி ராஜகோபால், சுகுமாரி உள்பட பலர் நடித்திருந்தார்கள். எம்.எஸ். விஸ்வநாதன் இசை அமைத்திருந்தார். 1971ம் ஆண்டு வெளிவந்த இந்தப் படம் அக்கால அரசியலை கடுமையாக விமர்சித்தது. இதனால் கருணாநிதியும், எம்.ஜி.ஆரும் படத்திற்கு கடும் நெருக்கடி கொடுத்தனர். பல தடைகளை தாண்டித்தான் முகமது பின் துக்ளக் வெளிவந்தது.

படம் சந்தித்த பிரச்சினைகள் பற்றி சோ கூறியது எம்ஜிஆர் திமுகவில் இருந்த போது, அவருக்குக் கீழ் மானேஜராக இருந்துகொண்டே, திமுகவை கிண்டல் செய்கிற ஒரு படத்தை துணிந்து எடுக்க முனைந்தவர் நாராயணன். 'பரந்தாமன்' என்கிற பெயரில் துக்ளக்கில் நிறைய எழுதி இருக்கிறார் அவர். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனிடம் மேனேஜராக வேலை பார்த்தவர், அதற்குப் பிறகு தான் எம்ஜி ஆரிடம் வந்தார். என்னிடம் அவருக்கு நல்ல பழக்கமுண்டு. அவரும், முரசொலியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த மல்லிகார்ஜுனும் இணைந்து அப்போது நாடகமாக மிகவும் பிரபலமாக இருந்த 'முகமது பின் துக்ளக்'கை சினிமாவாக தயாரிக்க முடிவு செய்து இறங்கினார்கள். நான் தான் அந்தப்படத்தை இயக்கினேன்.

மிகவும் குறைந்த பட்ஜெட் படம். எங்களுடைய நாடகத்தில் நடித்தவர்களில் பலர் அதிலும் நடித்தார்கள். அதோடு மனோரமா போன்றவர்களும் அதில் நடித்தார்கள். திமுகவையும், காங்கிரசையும் விமர்சித்ததாக அதில் காட்சிகள் இருந்ததால், அந்த படத்தைத் துவக்கியதில் இருந்தே ஒரே பிரச்சினை தான். அதிலும், திமுகவுக்கு 'முகமது பின் துக்ளக்' படப்பிடிப்பு சென்னையில் நடப்பதைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எப்படியாவது படத்தைத் தடுக்க என்னென்ன செய்ய முடியுமோ, அனைத்தையும் செய்தார்கள்.

ஒவ்வொருநாள் படப்பிடிப்பு தொடங்கும்போதும் ஒரு பிரச்சினை காத்திருக்கும். எங்கிருந்தோ போன் அழைப்பு வரும். அந்த அழைப்பு வந்தவுடன் படத்தை ஒளிப்பதிவு செய்த கேமராமேன் காணாமல் போய் விடுவார். அப்புறம் அசிஸ்டெண்ட் கேமராமேனை வைத்து அன்றைய காட்சிகளை ஒருவழியாக எடுத்து முடிப்போம். இப்படி 26 முறைக்கு மேல், கேமராமேன்கள் மிரட்டப்பட்டு. பலர் மாற்றப்பட்டும் படப்பிடிப்பு தொடர்ந்து நடந்தது. அதில் நடித்த நடிகர், நடிகைகளுக்கு இதே மாதிரி மிரட்டல் போன்கள் வரும். குறிப்பிட்ட காட்சியில் நடித்துக் கொண்டிருந்தவர்கள் அதோடு நழுவி விடுவார்கள்.

நடிகை ஜி.சகுந்தலா நடித்துக்கொண்டிருந்தபோது அவருக்கும் போன் அழைப்பு வந்து விட்டது. தயாரிப்பாளரான நாராயணன் என்னிடம் வந்தார். "பாருங்க சார் போன் வந்தாச்சு. இனிமேல் அவங்களும் கிளம்பிடுவாங்க. எப்படியாவது இன்னைக்கு அவங்க வர்ற சீன்களை எடுத்து முடிச்சுடுங்க சார்". படப்பிடிப்பில் இருந்த சகுந்தலா போன் வந்ததும் உடனே என்னிடம் வந்து, "வீட்டில் அவசரமா வேலை இருக்கு சார். போகணும்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பப் பார்த்தார். நானும் பார்த்தேன். வேறு வழியில்லாமல், அவரை ஓரிடத்தில் வைத்து போனிலேயே பேசி நடிக்கிற மாதிரி குறிப்பிட்ட காட்சிகளை எடுத்து முடித்து, அவரை அனுப்பி விட்டேன். இப்படி பலருக்கும் நடந்தது.

கவிஞர் வாலி கூட அந்தப் படத்தில் பாடல் எழுதியதற்காக மிரட்டப்பட்டார். இசையமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதனை கூப்பிட்டு எம்ஜிஆர் மிரட்டிப் பார்த்தார். அவரும் மசியவில்லை. கெடுபிடிகளை எல்லாம் மீறி படத்திற்கு ஒத்துழைப்பு தந்தவர்களும் இருந்தார்கள். நாராயணன், படத்தில் நடித்த நாடக நடிகர்களுக்கு குறைவான சம்பளம் தான் பேசி இருந்தார். இருந்தாலும் படம் முடிந்தவுடன் அவர் எல்லாருக்கும் சின்சியராகக் கொடுத்தார்.

இப்படிப் பல தொந்தரவுகளை மீறி படம் முடிந்தாலும், சென்சாருக்கு படம் போனதும், அங்கும் படாதபாடு பட்டது. சென்சார் சர்டிபிகேட்டை அவ்வளவு லேசில் வாங்கிவிட முடியவில்லை. அப்போது 1971 தேர்தல் நேரம். அதற்குள் எப்படியாவது படத்தை ரிலீஸ் செய்துவிட வேண்டுமென்று நினைத்தோம். ஆனால் படத்தில் இருந்த அரசியல் வசனங்களால், சில காட்சிகளால் பல தடைகள். இந்திரா, கருணாநிதி இருவருடைய தலையீடும் அதில் இருந்தது. நானும் பொறுத்துப் பார்த்தேன். தடைகள் முடியாமல் நீண்டுகொண்டே போனது. சென்னையில் ஒரு பொதுக்கூட்டம் போட்டேன் பேசினேன். துக்ளக்கில் எழுதினேன். அப்போது பலரையும் சென்சார் கெடுபிடிகளைத் தளர்த்தச் சொல்லி தந்தி கொடுக்க கோரிக்கை விடுத்தேன். 10,000க்கும் மேற்பட்ட தந்திகள் கொடுக்கப்பட்டன. சென்சார் போர்டில் இருந்தவர்களுக்கே அதிர்ச்சி. அதற்கு மேலும் தடையை நீடிப்பது சரியாக இருக்காது என்று முடிவு பண்ணி படத்தில் 22 இடங்களில் 'கட்' கொடுத்தார்கள். நானும் பார்த்தேன். தொடர்ந்து படத்தில் 'கட்'



கூடாது என்று சண்டை போட்டுக்கொண்டே இருந்தால், படமே வெளிவராது. அதனால் கட்களை ஏற்றுக்கொண்டு விட்டேன்.

முகமது பின் துக்ளக் படம் தியேட்டர்களில் வெளியாகி விட்டது. நல்ல வெற்றி. தியேட்டர்களில் படம் நன்றாக ஓடிக்கொண்டிருந்தது திமுக தலைவர்களுக்கு பிடிக்கவில்லை. முஸ்லிம்களைத் தூண்டி விட்டு படம் ஓடும் தியேட்டர்களில் போய் 'முஸ்லிம் சமூகத்தை இழிவுபடுத்துவதாக இருக்கிறது' என்று கலாட்டா செய்யச் சொன்னார்கள். படத்தில் முதல் பாட்டே 'அல்லா அல்லாஞ் நீ இல்லாத இடமே இல்லை' என்று எம்.எஸ்.விஸ்வநாதன் பாடும் பாடலுடன் தான் ஆரம்பிக்கும். அந்த பாட்டை கேட்டதும், திமுக கலாட்டா பண்ண அனுப்பி வைத்த முஸ்லிம்கள் கைதட்டி ரசிக்க ஆரம்பித்து விட்டார்கள். இப்படி பல தடைகளை தாண்டித்தான் முகமது பின் துக்ளக் வெளிவந்தது. இவ்வாறு சோ கூறியுள்ளார்.

---

கொள்கின்றன. அவரைப் பிஞ்சுகளில் நீர் இருக்கும். அவை வளர வளர, நீர் குறைந்து போகும். நன்கு முற்றிய அவரைக் காய்களின் விதைகளைப் பாருங்கள். கடினமானவையாகிவிடுகின்றன. அந்த நிலையில் உள்ளவை நமக்கான உணவுகள் அல்ல.

நெற்பயிர்களும் முதலில் செங்குத்தாகத்தான் பிஞ்சுவிடுகின்றன. செங்குத்து நிலையில் அவற்றில் பால் இருக்கின்றது. இந்தப் பால் வற்றித்தான் அரிசி ஆகிறது. நெல்லை அறுவடை செய்யும்போது, அது காற்று மிகுந்த பொருள்தான். நீரில் ஊறவைத்து அவித்து அரைத்த பிறகுதான் அரிசியில் உள்ள காற்று குறைந்து நீர்த் தன்மை உருவாகிறது. அவிக்காமல் அரைக்கப்படும் 'பச்சரிசியில் வாயு அதிகம்' என, கிராம மக்கள் கூறுவதை இப்போதும் கவனிக்கலாம். ஏனெனில், நெல்லை ஊறவைக்காமல் அரைத்தால், அதில் நீர்த் தன்மை அதிகரிக்கும் வாய்ப்பே இல்லாமல் போகிறது அல்லவா! புழுக்கம் என்றால், வெப்பமும் ஈரமும் இணைந்திருப்பது எனப் பொருள். அதாவது காற்று குறைவாக உள்ள நிலையைத் தான் 'புழுக்கம்' எனக் கூறுவது நம் வழக்கம். புழுங்கல் அரிசி என்பது, காற்று குறைவாகவும் நீரும் வெப்பமும் சற்றே கூடுதலாகவும் உள்ள அரிசி.

ஒருவருக்கு உடலில் செரிமானச் சிக்கல்கள் இருப்பதை எப்படி எல்லாம் அறிந்து கொள்ளலாம் என்பதற்கு, சில குறிப்புக்களைத் தருகிறேன்.

பசி இன்மை, பசி மந்தம் ஆகியவை இரண்டும் முக்கியமான அறிகுறிகள். நேரம் பார்த்து சாப்பிடாமல் பசிக்கும் வரை காத்திருந்தால் தான், இந்த அறிகுறிகளைப் பரிந்து கொள்ள முடியும். ஒருவர் பசிக்கும் வரை காத்திருந்து உணவு உண்கிறார். அவருக்கு மீண்டும் பசிப்பதற்கு அதிகமான நேரம் ஆகிறது என்றால், இவருக்கு செரிமானத்தில் சீரற்ற நிலை உள்ளது எனப் பொருள். அதிகமான நேரம் என்பதை அவரவர் நடைமுறையில் கண்டு கொள்ளலாம். நீண்ட நேரம் ஆகியும் பசிக்கவில்லை என்பதற்காக கவலைப்படத் தேவையில்லை. எப்போது பசிக்கிறதோ, அப்போது மட்டும் சாப்பிடும் வழக்கத்தைக் கடைப்பிடித்த வந்தால்ஞ் சில நாட்களில் பசியின் அளவும் கால இடைவெளியும் சீரான நிலைக்கு வந்துவிடும்.

அதிகமான ஏப்பம், மலச்சிக்கல் ஆகிய இரண்டும் செரிமானச் சிக்கல்களின் அறிகுறிகள். இவற்றை நீங்களே உங்கள் அன்றாட அனுபவங்கள் வழியே அறிந்து கொள்ளலாம்.

செரிமானச் சிக்கல்கள் உள்ள அனைவரும் காற்று குறைவான நிலையில் உள்ள காய்கறிகள், தானியங்களை உட்கொண்டால், மிக விரைவாக உடல் தன்னைச் சீரமைத்துக் கொள்வதை உணரலாம். வழக்கமாக நான் கூறும் எளிய வழி இதுதான், 'உடல் சீராகும் வரை பருப்பு, பயறுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள் சீரான பின்னர் இவற்றை குறைந்த அளவில் பயன்னடுத்துங்கள்'.

ஐம்பூதக் கொள்கை வழியில் சென்று இயற்கையை பார்வையிட்டால் ஒவ்வொரு தாவரமும் நமக்கு நிறையப் பாடங்களை நடத்தக் காத்திருக்கின்றன. பசி என்பது வெப்பம் எனும் பூதத்தின் வெளிப்பாடு. ஆம், உங்களுக்கு பசிக்கின்றது என்றால், உங்கள் உடலில் வெப்பம் அதிகரித்துள்ளதென பொருள். இந்த வெப்பம்தான் உள்ளே வரும் உணவைச் செரிப்பதற்கான மூல ஆற்றல். வெப்பம் இல்லாத உடலுக்குள் திணிக்கப்படும் உணவு, வயிற்றுக்குள் செரிமானம் ஆகாமல் அழுகிப் போகும். 'தொப்பை' எனப்படும் பெரு வயிறு உருவாதற்கான காரணங்களில் ' இதுதான் முதன்மையானது. நீரில் நுண்ணுயிர்கள் பல்கிப் பெருகும், வெப்பம் உருவானால்தான், அந்த நுண்ணுயிர்கள் சிதைக்கப்படும். இதுதான் இயற்கை விதி. இந்த விதிதான் உடலுக்குள்ளும் செயலாற்றும்.

உணவு, எளிதில் செரிமானம் ஆகும் தன்மையில் இருக்க வேண்டும். வெப்பம், நீர் ஆகியவை மிகுதியாகவும் காற்று குறைவாகவும் உள்ள எந்தப் பொருளும் எளிதில் செரிக்கக் கூடியது. சமையல் முறைகளிலும் இந்த பக்குவத்தை நீங்கள் கடைப்பிடிக்கலாம். இட்லி, இடியப்பம் ஆகியவை வெப்பமும் நீரும் இணைந்த முறையில் சமைக்கப்படுபவை. இவற்றின் செரிமானத் தன்மை எவ்வளவு எளிதாக உள்ளது!

இயற்கையும் இவ்வாறுதான் நமக்காகச் சமைத்து வைத்துள்ளது. நாம் இயற்கையின் மொழியைப் புரிந்து கொண்டால் மட்டும் போதுமானது!

# பொருள் வரவைப் பெருக்கும் விநாயகர் விரதம்



திருக்கார்த்திகை நாளில் இருந்து 21 நாட்கள் தொடர்ந்து விரதம் இருந்து, விநாயகரை வழிபட்டு வரவேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஒரு நூல் திரி தனியாக எடுத்து வைக்கவேண்டும். 21 வது நாளில் சஷ்டியும், சதயமும் கூடும் நேரத்தில் ஆவல்களை நிறைவேற்றும் ஆனைமுகன் சன்னிதியில் ஐந்து வகைப் பொரி வைத்து, ஆவாரம் பூ அருகில் வைத்து, கருப்பட்டிப் பணியாரம் செய்து கணபதியை வழிபாடு செய்ய வேண்டும்.

நெல் பொரி, கம்புப் பொரி, சோளப்பொரி, அவல் பொரி, எள் பொரி என்பது ஐந்து பொரிகளாகும்.

விநாயகரை வழிபட வேண்டிய அந்த நாள், மார்கழி மாதம் 19ந் தேதி (3.1.2017) அன்று வருகிறது. அன்றைய தினம் விரதமிருந்த விநாயகரை வழிபட்டு வந்தால் வாழ்வில் துன்பங்களில் இருந்து விடுபடலாம்.

ஆண், பெண் யார் வேண்டுமானாலும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கலாம். திருமணம் தடைபடுபவர்கள் இந்த விரதத்தை அனுஷ்டித்தால் விரைவில் திருமணம் நடைபெறும் என்பது ஐதீகம்.

# வீடு
## சில வாஸ்து தகவல்கள்



மன்னர்கள் காலத்தில் தென்மேற்குப் பாக அறைகளில் ஆயுதங்கள் வைக்கப்பட்டது. பின்பு குறுநில மன்னர்கள், உடையார் காலத்தில் தென்மேற்குப் பகுதியில் உயர்ந்த மேடை, தென்மேற்கு அறையில் நெற்களஞ்சியம் போன்றவைகள் அமைக்கப்பட்டது. நவீன காலத்தில் தென்மேற்கு அறையை இதுபோன்ற பாகமாக அமைத்துக் கொண்டால் நன்மை தரும்.

கட்டடத்தில் பல்கனி அமைக்கும்போது கட்டடத்தின் அகலத்தில் தெற்கு, மேற்கு, கிழக்கு, வடக்கு நான்கு புறமும் அமைத்துக் கொள்ளலாம். தெற்கு, மேற்கு அமைக்கும்போது ரூப் தளத்தின் கீழ் இறங்காமல் அமைத்துக் கொள்வது நல்லது. வடக்கு, கிழக்கு ரூப் தளத்திலிருந்து 1 அடி 11/2 அடி கீழ இறக்கமாக அமைத்துக் கொள்ளலாம். ரூப் தளத்திலிருந்து பிரதான கட்டடத்தில் இருந்து தொடர்ச்சியாகவும் அமைத்துக் கொள்ளலாம். இப்பகுதிகளில் மட்டும் துண்டு பால்கனி அமைப்பது தவறு. உதாரணம் 6X3, 4X3 அடி அகலத்தில்.

ஆண்கள், பெண்கள் குப்புறப்படுத்து உறங்குவது உடலுக்குத் தீமை தரும். ஆண், பெண் இருபாலருக்கும் உடலின் வலது பாகம் மேல் பாகத்தில் இடது பாகம் கீழ் பாகத்தில் அமையும்படி உறங்க வேண்டும்.

பூஜை அறையில் கடவுள் வழிபாட்டிற்கு விளக்கேற்றி வைப்பது தொன்றுதொட்டு பழக்கமாக உள்ளது. விளக்கின் நுனி தெற்கு பார்த்த முகமாக இருத்தல் கூடாது. முடிந்தவரை கிழக்கு முகமாக இருத்தல் அவசியம். விளக்கு ஏற்றும் எண்ணெய் முதலில் நெய் விளக்கு, இரண்டாவது ஐந்து வகை எண்ணெய்கள், மூன்றாவது நல்லெண்ணெய். இதுபோன்ற எண்ணெய்கள் உபயோகித்தால் உடலுக்கு நன்மை தரும். விளக்கின் திரி பஞ்சாக இருக்க வேண்டும். வாயினால் விளக்கை ஊதி அணைக்கக் கூடாது. குறிப்பாக ஆண்கள் செய்தல் ஆகாது.

பூஜை அறையில் குடும்பத்தில் மறைந்தவர்களின் உருவப் படங்களை கடவுள்களின் திருவுருவப் படங்களின் தலைக்கு மேல் பகுதியில் வைத்து வழிபடக்கூடாது. எப்பொழுதும் மறைந்தவர்களின் படங்களை தரை மட்டத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் கடவுள்களின் படங்களுடன் மறைந்தவர்களின் படங்கள் ஒன்றோடொன்று சேர்ந்த நிலையில் இருப்பது தவறு.

கிழக்கு, வடக்கு திசை பார்த்த வீட்டின் பிரதான நுழைவாயிலில் கீழ்பகுதியில் சிலாப்பினால் அமைக்கப்பட்ட சொருகு படி அமைத்து படிகளின் அடிப்பகுதி காலி இடம் இருக்கும்படி அமைத்துக்கொள்ள வேண்டும். தெற்கு, மேற்கு திசை பார்த்த வீட்டின் பிரதான நுழைவாயில் தரைப்பகுதியில் கொங்கிரீட் செங்கற்களால் படிகட்டு அமைத்துக் கொள்ள வேண்டும். இது நன்மையைத் தரும்.

# தமிழ் எண் கணித பலன்கள்
## எண் 8

8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும் பெயர் கூட்டெண் எட்டாக உள்ளவர்களும் இந்த எண்ணின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளவர்கள் ஆவர்.

எண் எட்டுக்குரிய கோள் சனி ஆகும். கோள்களில் மிகவும் தாமதமாக சூரியனைச் சுற்றி வரும் கோள் சனி ஆகும். புதன் கோளுக்குரியவர்கள் சுறுசுறுப்பாக இயங்கும் போது சனி கோளுக்குரியவர்கள் மிக மெதுவாகத் தான் வேலை செய்வார்கள். இவர்களிடத்தில் எக்காரணத்தைக் கொண்டும் சுறுசுறுப்பை எதிர்பார்க்கக் கூடாது. அத்துடன் கோள்களிலேயே அடர்த்தி குறைந்த கோளும் இதுவே ஆகும். இது இவர்களிடத்தில் பொருள் வளம் குறைவாகவே இருக்கும் என்பதையும் மனதில் ஒளிவுமறைவு அதிகமாக இருப்பதையும் காட்டுகிறது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவர்.

வாழ்வில் எவருக்கும் இதுவரை விளங்காத, கண்ணுக்குத் தெரியாத மறைபொருள் ஒன்று இருக்கிறது. உயிரோடிருக்கும்வரை அதை உணரவும் முடியாது. இறந்தபின்னர் அதைப் பற்றிச் சொல்லவும் முடியாது. அது கடவுள் அல்ல. ஏனென்றால் கடவுளை உயிரோடிருக்கும் பொழுது உணர முடிகின்றது. உணர இயலாத அப்பொருள் தான் விதி அல்லது மரணம். விதியை ஒருவகையில் அறிவின் மயக்கம் என்றும் கூறலாம். ஏனென்றால், அறிவு மயங்கும்போது தான் விதி வேலை செய்வதை நாம் வாழ்வில் கண்டிருக்கிறோம். எனவே மயக்கத்தின் கோளான சனியே விதி அல்லது மரணத்திற்கும் காரணம் என்றும் கூறலாம். இதன் விரிவாக்கமாக, கருமை, இருள் போன்றவற்றிற்கும் சனியே காரணம் என்றாகிறது.

எண் எட்டுக்குரிய எழுத்துக்கள் ழ், த், ந் ஆகியன. இவ்வெழுத்துக்களின் தோற்றத்திற்கு "மூடுதல்" வினையே காரணம் என்று முன்னர் கண்டோம். இவ்வினையின் விரிவாக, மறைத்தல், பாதுகாத்தல், மயக்குதல், முடிதல், நிறைதல் முதலான பல வினைகளைச் சொல்லலாம். பொதுவாக இந்த எண்ணுக்குரியவர்கள் தந்திர அறிவு கொண்டவர்கள். கண்கட்டி வித்தை, மோடிவித்தை போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டிருப்பர். மனோவசியத்தில் கைதேர்ந்தவர்கள். தங்களது பொருளை பாதுகாத்து வைத்துக் கொள்வதில் கில்லாடிகள். ஒரு சிலர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாகவும் சட்ட (விதிமுறைகள்) வல்லுநர்களாகவும் இருப்பர். தந்திரமாக சிந்தித்து குற்றத்தைப் பற்றிய குறிப்புக்களை எடுத்துவைத்து வாதிடுதல் இவர்களுக்கு அருமையாக வரும். ஒருசிலர் பெரும்புள்ளிகளுக்கு மெய்க்காவலர்களாகவும் இருப்பர்.

கணக்கீடுகளின் அடிப்படையில் புதுப்புது குறியீடுகளை உருவாக்குதல், விளங்காத குறியீடுகளின் பொருளை அறிதல், பழங்காலமாக விளங்காத புதிர்களை விடுவித்தல், அகழ்வாராய்ச்சி செய்து உண்மைகளைக் கண்டறிதல், மறைபொருள் அறிதல் ஆகியவை சிலரது தொழிலாக இருக்கும்.

சனியின் நிலை கெட்டிருந்தால் ஏமாற்றுதல், திருடுதல், கொலை புரிதல் முதலான பாவச் செயல்களைச் செய்வர். பிறரைக் கெடுப்பதற்காக பில்லி சூன்யம் போன்ற ஆவி வழிபாட்டுச் செயல்களும் புரிவர். சட்ட நுணுக்கங்களைப் பயன்படுத்தி தீயவர்களுக்குத் துணை போகவும் செய்வர்.

பிறப்பிற்குப் பின் வாழ்வில் வளங்களே முதலிலும் வேகமாகவும் வரும். இறப்பு வாழ்வின் இறுதியில் தான் வரும். எனவே தான் வளத்தைக் குறிக்கும் புதன் கோள் வேகமாகவும், இறப்பைக் குறிக்கும் சனி கோள் தாமதமாகவும் சுற்றி வருகின்றது.

# தனக்குதானே சுட்ட பாப்பா!




இறுதியுத்தத்தில் புலிகளின் மிகப்பெரிய சறுக்கல், மக்களிடமிருந்து அன்னியப்பட ஆரம்பித்தது. கட்டாய ஆட்சேர்ப்பு, புலிகள் தொடர்பான அச்சத்தை மக்களிடம் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் என ஆரம்பித்தவை சடுதியான எதிர்விளைவைத்தான் ஏற்படுத்தின. இதுவும் புலிகளிற்கு பாதகத்தை ஏற்படுத்தியது. மக்களிற்குள் இருந்து புலிகளிற்கு வருபவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சியேற்பட்டது.

சமாதான உடன்படிக்கையின் பின்னர் "புலிகளின் நீதி" கணிசமாக குறைந்தது. புலிகளின் நீதியென்றது புலிகளின் பாணி நீதி வழங்கலை. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் நடைமுறையிலிருந்த நீதிபரிபாலன நடவடிக்கையை குறிப்பிடுவதல்ல இது. புலிகள் உருவாக்கிய காவல்துறை, நீதிமன்றங்கள் அங்கு ஒரு பாதுகாப்பான சிவில் வாழ்க்கையை கட்டியெழுப்பியிருந்தன. இவற்றிற்கு மேலதிகமாக "புலிகளின் பாணி" நீதி வழங்கல் முறையான மரணதண்டனையும் அமுலில் இருந்தது.

ஆயுத இயக்கங்கள் எல்லாமே ஆரம்பத்திலிருந்து கைக்கொண்ட நீதிவழங்கல் இது. சமூகத்திற்கு தீங்கான குற்றங்கள் சிலவற்றை இழைப்பவர்களிற்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. இதனை அனைத்து இயக்கங்களும் கைக்கொண்டன. ஆனால் புலிகள்தான் அதில் ஒரு முறையான வரையறையை கைக்கொண்டார்கள். எந்த குற்றங்களிற்கு மரணதண்டனை என்பதில் உறுதியாக இருந்தார்கள்.


எழிலன், பானு, சொர்ணம்


அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன்

கொலை, பாலியல் வல்லுறவு என்பவற்றிற்கு பெரும்பாலும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மின்கம்பங்களில் மரணதண்டனை வழங்கப்பட்டது. பின்னர் சந்திகளில் பொதுமக்களின் முன்னிலையில் மரணதண்டனை வழங்கப்பட்டது. புலிகளின் காவல்துறை, நீதிமன்றங்கள் வாயிலாக தீர்ப்புக்கள் வழங்கப்பட்டபோதும், அதிதீவிர குற்றங்கள் சிலவற்றை புரிந்தவர்கள் இந்த எல்லைக்கு வெளியிலிருப்பவர்களாலும் கையாளப்பட்டனர். புலனாய்வுதுறை விசாரணையின் பின் தண்டனை வழங்கப்பட்டவர்கள், நீதிமன்ற விசாரணையின் பின்னர் பகிரமரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் என பல்வேறு பிரிவுகள் உள்ளன.

ஆனால் ரணில்-பிரபா சமாதான உடன்படிக்கையின் பின்னர் மரணதண்டனையை புலிகள் கைவிட்டனர். பேச்சில் இணைந்திருந்த சர்வதேச சக்திகளிற்கு நிகரான மனிதஉரிமை நிலவரத்தை வன்னியில் பேணும் உத்தேசமே இதற்கு காரணம்.

எனினும், பேச்சில் சர்வதேச சக்திகள் நியாயமாக நடந்துகொள்ளவில்லையென உணர்ந்த புலிகள் பேச்சிலிருந்து வெளியேறினார்கள். 2006 இல் அரசு புலிகள் பேச்சில் முரண்பாடுகள் எழுந்து 2007இல் யுத்தம் உக்கிரமடையமடைய தொடங்கிய சமயம். 2007 இன் நடுப்பகுதிக்கு பின்னர் வன்னியில் மீண்டும் புலிகள் மரணதண்டனையை அமுல்படுத்தினார்கள். பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு உள்ளிட்ட சில குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட இருவருக்கு கிளிநொச்சி, விசுவமடு பகுதியில் மரணதண்டனை விதிக்கப்பட்டது. அதன் பின்னர் மே மாதம் வரை பல்வேறு காரணங்களிற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் இது மிகக்குறைந்த எண்ணிக்கை.

புலிகள் ஆரம்பத்தில் மரணதண்டனையை ஆரம்பித்தது, சமூக குற்றங்களை கட்டுக்குள் கொண்டுவர. ஆனால் சமாதான பேச்சின் பின்னர மரணதண்டனைய அமுல்படுத்தியது வேறொரு நோக்கத்திற்காக.

அந்த சமயத்தில் புலிகள கட்டாய ஆட்சேர்ப்பை ஆரம்பித்தார்கள். இதற்கெதிரான மக்கள் அதிருப்தி சில சமயங்களில் சிறுசிறு கொந்தளிப்புக்களாக மாறியது. எல்லைமீறி நடந்தால் புலிகள் கறாரான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்பதை புரியவைப்பதற்காகவே ஓரிரண்டு மரண் தண்டனையை நிறைவேற்றினார்கள்.



இதுதவிர போராளிகள், காவல்துறைக்குள் நடந்த மரணதண்டனையும் ஆளணியுடன் தொடர்புபட்டதே.

இராணுவம் புதுக்குடியிருப்பை அண்மித்து கொண்டிருந்த சமயம். புலிகளிற்கு பெரும் ஆளணி பற்றாக்குறை ஏற்பட்டது. போராளிகளின் மரணம் ஒரு பக்கம். புதிய போராளிகளின் வரவு மறுபக்கமென கடும் நெருக்கடி.

இதற்குள் புதுவகையான பிரச்சனையொன்றும் ஏற்பட்டது. சமாதானகாலத்தில் கணிசமான போராளிகள் திருமணம் முடித்துவிட்டார்கள். யுத்தம் இறுகிக்கொண்டு செல்ல அடிக்கடி இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. ஒவ்வொரு வாரமும் புதிய இடத்திற்கு நகர வேண்டும். புதிய இடத்தில் கூடாரம், கிணறு, மலசலகூடம், பதுங்குகுழி அமைக்க வேண்டும். இப்படியே தொடர் சங்கிலி நிகழ்வாக இவை தொடர்ந்து கொண்டிருந்தால், திருமணமான போராளிகள் பலர் குடும்பத்துடனேயே தங்கிவிட்டனர்.

தொடர் இடப்பெயர்வுகளால் சிலர் தமது நிர்வாகமையங்களுடனான தொடர்புகளையும் இழந்துவிட்டனர். இந்தவகையானவர்களையெல்லாம் மீண்டும் ஒன்றுசேர்க்க புலிகள் எடுத்த முயற்சிகள் பலிக்கவில்லை. கடைசி நடவடிக்கையாக அவர்கள் கையிலெடுத்த ஆயுதம்... மரணதண்டனை.

இயக்கம் இக்கட்டான நிலையில் இருக்கும் சமயத்தில் பொறுப்பில்லாமல் வீடுகளில் இருக்கும் உறுப்பினர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைப்பிற்குள் அறிவித்தல் விட்டார்கள். போராளிகளை கட்டுக்குள் கொண்டுவர இருவருக்கு மரணதண்டனையும் விதித்தார்கள். மணலாறு கட்டளை மையத்தை சேர்ந்த இருவரே மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டனர். மணலாறு கட்டளை மையம் தளபதி சொர்ணத்தின் கீழ் செயற்பட்டது. மணலாறு கட்டளை மையத்தின் முக்கியஸ்தராக இருந்த ஒருவரும், இன்னொரு போராளியும் நீண்டநாட்களாக தொடர்பில் இல்லாமலிருந்தார்கள் என கூறி கைது செய்யப்பட்டார்கள். முள்ளிவாய்க்கால் கடற்கரையில் குறிப்பிட்ட தொகையான போராளிகள் ஒன்றுதிரட்டப்பட்டு அவர்கள் இருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. அந்த இடத்தில் தளபதிகள் பொட்டம்மான், சொர்ணம், பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனி ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த சம்பவம் போராளிகளிற்குள் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. மணலாறு கட்டளைமையத்தில் முக்கியஸ்தர் அர்ப்பணிப்புமிக்க போராளியென்பதுடன், யுத்தத்தில் ஒரு கையையும் இழந்திருந்தார்.

இவையெல்லாவற்றையும்விட அரசியல் துறையை சேர்ந்த சிலரது நடவடிக்கை மக்களிற்கும் புலிகளிற்குமிடையிலான இடைவெளியை அதிகப்படுத்தும் விதமாக அமைந்தது. கட்டாய ஆட்சேர்ப்பு சமயத்தில் சில அரசியல்துறை பிரமுகர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் அமைப்பிற்குள்ளேயே அதிருப்தியை கிளப்பியது. அரசியல்துறையினரின் நடவடிக்கையை இராணுவபிரிவை சேர்ந்தவர்கள் பகிரங்கமாக விமர்சித்து, "சண்டைக்கு பயந்தவர்கள் தமது இருப்பை நிலைநிறுத்த எல்லைமீறி நடந்து கொள்கிறார்கள்" என்ற அபிப்பிராயத்தை கிளப்பினார்கள்.

ஆட்சேர்ப்பில் எல்லைமீறி நடந்ததாக பகிரங்கமாக விமர்சிக்கப்பட்டவர்களில் சிலர் விளையாட்டுத்துறை பொறுப்பாளராக இருந்த பாப்பா, நிதர்சன பொறுப்பாளராக இருந்த சேரலாதன், நுண்கலை பிரிவு பொறுப்பாளராக இருந்த கண்ணதாசன், எழிலன், முள்ளியவளை சிவராசன் போன்றவர்கள் இதில் அதிக விமர்சனத்தை சந்தித்தார்கள்.

மல்லாவி பகுதியில் ஆட்சேர்ப்பு பொறுப்பாளராக செயற்பட்ட சேரலாதன், அங்குள்ள வசதியான குடும்பங்களிடம் பணமும், பொருளும் பெற்றுக்கொண்டு அவர்களை கட்டாயமாக படைக்கிணைக்காமல் விட்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இறுதியில் இளம்பெண்ணான ஆசிரியை ஒருவரை படைக்கிணைக்காமல் விட, இப்படி இலஞ்சம் வாங்கியது அம்பலமாகி விசாரணையை எதிர்கொண்டார். அதன்பின்னர், அவர் ஆட்சேர்ப்பிலிருந்து களமுனைக்கு மாற்றப்பட்டார்.




ஆட்சேர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் களமுனைக்கு செல்ல பயந்தவர்கள் என போராளிகளிற்குள் எழுந்த அபிப்பிராயத்தை மெய்ப்பிப்பதைபோல ஒரு சம்பவம் நடந்தது. அது வவுனியா களமுனைக்குட்பட்ட பாலமோட்டை பகுதியில் நடந்தது.

கடுமையாக ஆட்சேர்ப்பில் ஈடுபட்ட பாப்பா அந்த களமுனைக்கு அனுப்பப்பட்டார். ஆனால் களமுனையில் நிற்க பாப்பா தயாரில்லை. களமுனையிலிருந்து பின்னால் செல்ல பல உபாயங்களை கடைப்பிடித்தார். ஒன்றும் பலனளிக்கவில்லை. இறுதியில், அவர் தனது காலில் தானே துப்பாக்கியால் சுட்டார்.

(களமுனையில் நிற்பதற்கு பயந்தவர்கள் நீண்டகாலமாகவே இந்த உத்தியை கையாள்வது வழக்கம். தமது காலில் பாதிப்பில்லாமல் சூட்டை நடத்துவார்கள். இப்படி செய்பவர்களை அமைப்பிற்குள் மதிப்பதில்லை)

வடபோர்முனையில் சிறப்பாக செயற்பட்ட லோரன்ஸ்தான் அப்போது பாலமோட்டை பகுதியில் கட்டளை தளபதியாக செயற்பட்டார். களமுனையில் தமக்கு தாமே சூடு நடத்துபவர்களை லோரன்ஸ் கடுமையாக அணுகினார். அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்புவதில்லை. காயத்திற்கு கட்டுப்போட்டு, குறிப்பிட்டளவான நேரம் களமுனையிலேயே வைத்திருப்பார். இப்படியான நடவடிக்கை மூலம்தமக்குதாமே சூட்டை நடத்துபவர்களை கட்டுப்படுத்தலாமென நினைத்தார்.


பாப்பா தனது காலில்தானே சுட்டதும், சாதாரண போராளிகளிற்கு என்ன நடவடிக்கையோ, அதையே கடைப்பிடித்தார். பாப்பாவின் கால் காயத்திற்கு முதலுதவி செய்துவிட்டு, அவரை களமுனையிலேயே வைத்திருந்தார் லோரன்ஸ். கிட்டத்தட்ட அரைநாளின் பின்னர்தான் பாப்பா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். (தொடரும்)


இது மிகவும் இலகுவான ஹெயாஸ்ரைல் தான். ஆனால் அழகான கட்டடை முடி கம்பி முடியுள்ள கட்டீஸ் போட்டு கொள்ளும் போது அவர்களின் அழகை மெருகூட்டி காட்டும். எந்தவொரு இடத்திற்கம் போட்டு கொள்ள கூடிய ஹெயாஸ்ரைல் இது.

பிறந்த நிமிடம் முதலே தாயின் வாசனையையும் தொடுதலையும் விரும்புகிறது குழந்தை. அம்மாவுடனே தூங்க விரும்புகிறது. அம்மா தன் அருகில் இல்லை என்பதை ஒரு சில அசைவில் கூட அது கண்டு கொண்டு விடுகிறது. அடுத்த கணம் அது அழுது தன் கண்டுபிடிப்பை அது உறுதி செய்து கொள்கிறது. அம்மாவின் குரலை கேட்ட பிறகே அது அழுகையை நிறுத்துகிறது.

# இரண்டாவது குழந்தை பிறந்தால் முதற் குழந்தையை தூங்க வைப்பது எப்படி?



சில குழந்தைகள் தாய்ப்பால் குடித்து வயிறு நிரம்பியதும் தூங்கி விடுவார்கள். ஆனால் அப்படி தூங்கிய ஐந்து நிமிடத்திற்கு எல்லாம் ஒரு விரலை எடுத்து வாயில் வைத்து சப்பிக் கொண்டு இருப்பார்கள். இது அனிச்சையாக நடந்தாலும் உண்மையில் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருப்பதாக அவர்கள் நம்பும் அந்த நம்பிக்கை தான் இப்படி விரலை சப்பச் செய்கிறது. இது அவர்களை தாயின் பாதுகாப்பு வளையத்துக்குள் நிம்மதியாக இருப்பதை உணர வைக்கின்றது. இதுவே அவர்களின் மன வளர்ச்சிக்கும் அறிவு விருத்திக்கும் ஏதுவாகின்றது.

சின்னக் குழந்தைகளை பெற்றோர் தங்கள் இருவருக்கும் இடையே படுக்க வைப்பது நல்லது. பல பெற்றோர்கள் இருவருமே வேலைக்கு போகின்றவர்களாக இருப்பார்கள். இவர்களின் பிள்ளைகள் பகலில் தாத்தா பாட்டியின் பராமரிப்பிலோ அல்லது வீட்டோடு இருக்கும் வேலைக்காரிகளின் நேரடிப் பார்வையிலோதான் இருப்பார்கள். அதேநேரம் இரவு முழுவதும் பெற்றோரின் அரவணைப்புக்குள் இருக்கும் வாய்ப்பு கிடைப்பதால் தங்கள் தனிமை ஈடு செய்யப் பட்டுவிட்டதாக திருப்திப்பட்டு கொள்வார்கள்.

சில பெற்றோர்கள் தங்கள் கூடவே குழந்தைகளை படுக்க வைக்கும் போது குழந்தைகள் படுக்கையை ஈரப்படுத்துவதை விரும்புவதில்லை. அதனால் தங்களுக்கு எட்டும் தூரத்தில் குழந்தைகளை தொட்டிலிலோ பெட்டியிலோ படுக்கப் போட்டு விடுவார்கள். இவ் மாதிரியான தள்ளி வைப்புக்குள்ளான குழந்தைகள் இரவில் பசித்து அழும் போது உடனடியாக தாயின் அனுசரணைக் குரல் (என்னடா செல்லம் இதோ வரேண்டா) கேட்டால் தனிமையை உணரமாட்டார்கள். 'குரல் கொடுத்ததுமே நம்மை கவனிக்க இங்கே நமக்கானவர்கள் இருக்கிறார்கள்' என்ற உணர்வு குழந்தைகள் மனதில் தங்கிப் போவதால் அவை அந்த குறைந்தபட்ச இடைவெளியை பொருட்படுத்துவதில்லை.

இதில் கூட பெற்றோருக்கு உணர்வு ரீதியான ஒரு நெருக்கடி இருக்கின்றது. குழந்தையை தங்கள் இருவருக்கும் இடையே படுக்க வைப்பவர்கள் தங்கள் 'இரவு நேர நெருக்கத்திற்கு' இடையூறாக இருக்கின்றது என கருதவும் இடமுண்டு. அந்த நேரத்தில் குழந்தை அழுது அவர்கள் தனிமையின் இனிமையை தகர்த்து விடுவதும் உண்டு. இதுபோக நடு நடுவே விழித்து அழும் குழந்தையால் அலுவலகம் போக வேண்டிய கணவரின் நிம்மதியான உறக்கம் தடைப்படுவதாக கவலைப்படும் சில தாய்மார்கள் குழந்தையை சற்று தள்ளி படுக்க வைக்கும் எண்ணத்துக்குள் வந்துவிடுவார்கள்.

இரண்டாவது குழந்தை பிறந்ததும் முதல் குழந்தையை எங்கே படுக்க வைப்பது என்பதில் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதுவே கிராமங்களாக இருந்தால் விஸ்தாரமான வீட்டில் தாத்தாபாட்டி வசம் முதல் குழந்தை ஒப்படைக்கப்படுகின்றது. அதனால் முதல் குழந்தை தனிமை, இருட்டு, இட நெருக்கடி போன்ற சூழலுக்கும் தப்பிவிடுகின்றது.

அதே சமயம் ஒண்டுக்குடித்தன நகர வீடுகளில் முதல் குழந்தையின் நிலை சொல்லிக் கொள்ளும்படியாக இல்லை. இந்த மாதிரியான நெருக்கடிக்கு உள்ளாகும் முதல் குழந்தைகள் பெற்றோரின் இரண்டாவது குழந்தையை எதிரியாக பார்க்கத் தொடங்கி விடுகின்றன.

இத்தகைய மனக்கசப்பு மூத்த குழந்தைகளுக்கு ஏற்பட்டுவிடாதபடி பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும். முதல் குழந்தை தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாக எண்ணாத அளவுக்கு அந்தக் குழந்தையையும் தங்கள் அன்பால் ஈர்த்துக் கொள்ள வேண்டும். தாய் அருகே ஒரு குழந்தை படுத்துக் கொண்டால் அடுத்த குழந்தை தந்தை அருகே படுக்க வைக்கப்பட வேண்டும். இப்படிச் செய்யும போது தாயிடம் காட்டும் பாசத்துக்கு இணையாக தந்தையிடமும் குழந்தைகள் ஒட்டிக் கொள்ளும்.



# ஞானப் பற்கள் முளைப்பதில் பிரச்சினையா?

ஒருவருக்கு கடைசியாகப் முளைக்கும் நான்கு கடைவாய்ப் பற்கள் தான் ஞானப் பற்கள். இந்தப் பற்கள் சில சமயங்களில் ஈறுளைக் கிழித்துக் கொண்டு வளர முடியாமல் போய்விடும். மற்றப் பற்களினால் ஏற்பட்ட இட நெருக்கடியாலும் இப் பற்கள் வெளிவர முடியாத நிலை ஏற்படலாம். சில சமயங்களில் இந்தப் பற்கள் நேராக முளைக்காமல் திசை மாறி முளைக்கவும் கூடும். அறிகுறிகள் என்ன? இவ்வாறு ஞானப் பற்களால் பிரச்சினை ஏற்படும் போது, ஈறுகளில் வலி மற்றும் வீக்கம், விறைப்புத் தன்மை, தாடைகளில் வீக்கம், தாடைகளில் வலி, வாய்ப் பகுதியில் துர்நாற்றம், தலைவலி ஏதாவது சாப்பிடும் போது வீக்கமான பகுதியில் விரும்பத்தகா சுவை ஏற்படுதல் ஆகியவை அறிகுறிகளாகும். விளைவு என்ன? பொதுவாக இத்தகைய பிரச்சினைகள் எதுவும் இன்றி ஞானப் பற்கள் வளர வேண்டும். ஆனால் இந்தப் பிரச்சினைகள் இருக்குமானால் தொற்று அதிகமாகி, முகம் வீங்கி வாய் திறக்க முடியாமல் போய் சிரமப்பட வேண்டியிருக்கும். இதற்கு அறுவை சிகிச்சை தேவை.

சிகிச்சை என்ன? ஞானப்பல் முளைக்கும் பகுதியில் மட்டும் மயக்க மருந்து செலுத்தி பற்களை அகற்றி விடுவது நல்லது. சில நேரங்களில் தாடைகளில் ஈறுப் பகுதியைக் கீறிவிட்டு, அந்தப் பற்கள் வெளிவருவதற்கு வழி ஏற்படுத்தலாம். பல் பிடுங்கப்பட்ட பகுதியில் இரத்தம் வெளியேறலாம். அதனால் வாயை நன்கு கொப்பளித்துத் துப்ப வேண்டும். கைகளால் அந்தப் பகுதியை தொடக் கூடாது. டாக்டர் கொடுக்கும் மருந்துகளை தவறாமல் சாப்பிட வேண்டும். வலி, இரத்தம் வெளியேறுதல் அதிகமாக இருந்தால் ஐஸ் கட்டியை அந்த இடத்தில் வைக்க நிவாரணம் கிடைக்கும்.



# தொப்புள் கொடியை துண்டிக்கும் போது கவனிக்கவேண்டியவை

குழந்தையானது தாயின் வயிற்றில் வளரும் போது, அதற்கும் தாய்க்கும் உள்ள ஒரே இணைப்பு தொப்புள் கொடிதான். குழந்தை பிறந்ததும்,அந்த கொடியைதுண்டித்து,குழந்தையைபிரித் தெடுப்பார்கள்.

மருத்துவமனையில் பிரசவம் நிகழும் போது மருத்துவர்கள் பாதுகாப்பான முறையில் அந்ததொப்புள் கொடியை துண்டிப்பார்கள். மருத்துவமனை அல்லாத இடங்களில் பிரசவம் நிகழும் பொழுது, எல்லாரும் குழந்தையைத் தான் எதிர்பார்ப்பார்களே தவிர,தொப்புள் கொடியை எதைக் கொண்டு துண்டிப்பது என்பதில் கவனம் செலுத்தமாட்டார்கள்.

குழந்தைபிறந்ததும் அவசரம் அவசர மாககையில் கிடைத்த அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்னடுத்தி தொப்புள் கொடியை துண்டிக்கநேர லாம்.இவ்வாறு செய்வதுதவறான அணுகு முறை. இப்படி, தூய்மையற்ற அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களால் தொப்புள் கொடியைதுண்டித்தால் ரணஜன்னி, வில்வாதவலிப்பு நோயினைஉண் டாக்கக் கூடியடெட்டனஸ் பாக்டீரியா கிருமிகள் தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் நிறையஉள்ளன.

இதைதவிர்க்க, கடைகளில் கிடைக்கும் புதிய பிளேடைக் கொண்டுதொப்புள் கொடியைதுண்டிக்கலாம். அவ்வாறு துண்டிக்கும் முன் குழந்தையின் தொப்புள் பகுதியில் இருந்து இரண்டு அங்குலம் (சுமார் 5சென்டி மீட்டர் வரை) இடைவெளிவிட்டுதொப்புள் கொடியில் தூய்மையான நூல் கொண்டு ஒருமுடிச்சும்,அதில் இருந்து ஒருவிரல் இடைவெளி விட்டுமற்றொரு முடிச்சும் போட்டு, இடைப்பட்டபகுதியில் அமைந்த தொப்புள் கொடியை புதிய பிளேடால் துண்டித்து ரத்த கசிவு ஏற்படாமல்பார்த்துக் கொள்ளவேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள். ●

# கருவளையம் மறைய சிறந்த வழி

ஊட்டச்சத்து குறைபாடு தூக்கமின்மை போன்ற பல்வேறு காரணங்களால் கண்களைச் சுற்றி கருவளையங்கள் ஏற்படுகின்றன. ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஏற்படும் கருவளையத்திற்கு நிச்சயம் மருத்துவர் ஆலோசனை பெற வேண்டும். மற்ற காரணங்களால் ஏற்படும் கருவளையத்தை போக்க எளிய வழிகள் உள்ளன.


தேங்காய் எண்ணெயை சிறிது சூடாக்கி அதில் மஞ்சளை குழைத்து கண்களை சுற்றி பூச வேண்டும். சிறிது நேரம் கழித்து கடலை மாவால் கண்களைக் சுற்றி கழுவ கருவளையம் மறையும்.

வெள்ளரிக்காய் சாற்றை கண்களை சுற்றி தடவி சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். வாரம் ஒரு முறை இவ்வாறு செய்ய கருவளையம் நீங்கும். வெள்ளரி சாற்றிற்கு பதிலாக வெள்ளரிக்காயை நறுக்கி கண்களின் மேல் சிறிது நேரம் வைத்திருந்தாலும் கருவளையம் மறையும். பச்சை உருளைக்கிழங்கை வெட்டி அதை கண்களை சுற்றி தடவி வர கருவளையம் மறையும்.


தயிர் மற்றும் நைசாக அரைத்த வெள்ளரி விதை தூள் ஆகியவற்றை தலா ஒரு ஸ்பூன் எடுத்து அதில் அரை ஸ்பூன் எலுமிச்சை சாறு கலந்து கருவளையம் உள்ள இடத்தில் தடவி வர நாளடைவில் குணம் தெரியும்.

வெள்ளரி சாற்றுடன் பன்னீர் கலந்து ஒரு நளைக்கு இரு முறை செய்தால் விரைவில் கருவளையம் மறையும்.

பால் பவுடரை தண்ணீர் அல்லது பன்னீரில் கரைத்து அதில் ஒரு துணியை நனைத்து கண்களை சுற்றி பூசலாம். அதே போல் பாலாடையுடன் வெள்ளரிக்காய் சாறு கலந்தும் தடவலாம். இவை நன்கு காயும் வரை வைத்திருக்காமல் சிறிது ஈரமாக இருக்கும் போதே கழுவ வேண்டும். ●



# வல்லாரை சலட்



**தேவையான பொருட்கள்:** வல்லாரைக் கீரை 100 கிராம், சின்ன வெங்காயம் 50 கிராம், பச்சை மிளகாய் 1, தக்காளி 1, எலுமிச்சை சாறு 1 ஸ்பூன், தேங்காய் துருவல் 2 ஸ்பூன், உப்பு தேவைக்கு

**செய்முறை :** வல்லாரைக்கீரையை நன்றாக சுத்தம் செய்து பொடியாக நறுக்கி கொள்ளவும். தக்காளி, வெங்காயம், ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும்.ஒரு பாத்திரத்தில் பொடியாக நறுக்கிய வல்லாரைக்கீரை, தக்காளி, வெங்காயம், ப.மிளகாய், போட்டு நன்றாக கலக்கவும்.

அடுத்து தேங்காய் துருவல், எலுமிச்சைச் சாறு, உப்பு சேர்த்துப் பிசிறி பத்து நிமிடம் கழித்து சாப்பிடவும். அருமையாக இருக்கும்.

சுவையான சத்தான வல்லாரைக் கீரை சலட் ரெடி. மூளைக்கு புத்துணர்ச்சி கிடைக்கும் இந்த சலட்.

# ஏசி அறையில் தூங்கினால் ஆபத்தா

இன்று பலரும் 10க்கு 10 அடி அளவு கொண்ட அறையில் கதவு ஜன்னல் எல்லாவற்றையும் அடைத்துவிட்டு ஏசி போட்டு தூங்குகிறார்கள். இப்படி தூங்கினால் ஆரோக்கிய குறைவு ஏற்படும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். பூட்டிய அறைக்குள் ஒருவர் மட்டும் 4 மணி நேரம் தூங்கினாலே அந்த அறையிலுள்ள ஒக்சிசன் அளவு குறைந்து விடும்.

பொதுவாக காற்றில் 21 சதவீதம் ஒக்சிசன் உள்ளது. இந்த அளவு பூட்டிய அறைக்குள் ஒருவர் நான்கு மணி நேரம் தொடர்ந்து உறங்கும்போது 10 சதவீதத்திற்கும் கீழே குறைகிறது. அப்போது நுரையீரலால் ரத்தத்தில் ஒக்சிசன் அளவை சரியாக வைக்க முடியாத போது உடலில் உயிர் காப்பாற்றப்பட ஒக்சிசன் தேவை அதிகரிக்க அதிகரிக்க சிறுநீரகம் அந்த அத்தியாவசியமான வேலையை செய்ய முற்படுகிறது.



அது நம் உடலிலுள்ள தண்ணீரில் உள்ள ஒக்சிசனை எடுத்து உடலுக்கு கொடுக்கும் வேலையை செய்கிறது. தண்ணீரில் இரு மடங்கு ஒக்சிசனும் ஒரு பங்கு நைட்ரஜனும் இருக்கிறது. இந்த நீரில் இருந்து உடலுக்கு தேவையான ஒக்சிசனை சிறுநீரகம் பிரித்துக் கொடுக்கிறது. அதனால்தான் சிறுநீரகத்தை இரண்டாவது நுரையீரல் என்று அழைக்கிறார்கள்.

சிறுநீரகம் இந்த வேலையை செய்யத்தொடங்கியவுடன் அதுவரை அது செய்து கொண்டிருந்த வேலையான ரத்தத்தை வடிகட்டி சுத்தப்படுத்தும் வேலை நிறுத்தப்படுகிறது. நமது உடலில் உள்ள தண்ணீரில் ஒக்சிசன் அளவு குறைந்தவுடன் அந்த கழிவுநீர் வெளியேற நமக்கு சிறுநீர் கழிக்கும் உணர்வு ஏற்படுகிறது. மீண்டும் புதிய ஒக்சிசன் நிறைந்த தண்ணீர் தேவைப்படுவதால் தண்ணீர் தாகமும் தூண்டப்படுகிறது. இதனால் சிறுநீரகம் அதிக வேலைப்பளுவுடன் தள்ளாடுகிறது.

இதனால் சிறுநீரகத்தில் அழுக்கு சேர்வதுடன் ரத்தத்தில் யூரிக் அமிலம் முதலான அசுத்தங்கள் அதிகரிக்கின்றன. மூட்டுகளில் யூரிக் அமிலம் படிவங்களாக படிகிறது. சிறுநீரகத்திலும் இது படிகிறது. ரத்தத்திலும் இந்த அமிலப் படிவங்களால் தடிமன் அதிகரித்து ரத்த அழுத்தம் ஏற்படுகிறது. மூட்டு வலி தோன்றுகிறது.

ஏசி அறையில் இயற்கை காற்றோட்டம் இல்லாமல் தூங்கும் போது இத்தனை உடல்நலக் கோளாறுகள் ஏற்படுகின்றன. இதனை நமது பழந்தமிழர் மருத்துவத்தில் 'காற்றுத் தீட்டு' என்று அழைத்தார்கள். காற்றுக்காக ஜன்னல் கதவை திறந்து வைக்கும்போது கொசுத்தொல்லை இருக்கும். அதற்கு ஜன்னல்களில் கொசுவலை அடிக்கலாம். ஆகஇ காற்றுத்தீட்டு இல்லாத காற்றோட்டமான அறையில் தூங்குவோம். ஆரோக்கியத்தை பேணுவோம். ●

## நான்

எனது பெயர் ஜோகராசா தர்மிகா. நான் வ/முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் தரம் 3இல் கல்வி கற்கிறேன். அப்பாவின் பெயர் ஜோகராசா, அம்மாவின் பெயர் தர்சினி. எனக்கு ஒரு அண்ணா உள்ளார். எனக்கு பிடித்த உணவு பிட்டு, எனக்கு நண்பர்களுடன் கிட்டிப்புள் விளையாட விருப்பம். எனது செல்லப் பிராணி நாய் (டொமி) ஆகும். எதிர்காலத்தில் நான் நன்றாகப் படித்து வைத்தியராக வந்து சேவை செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.

ஜோ.தர்மிகா
தரம்3B
வ/முருகனூர் சாரதா
வித்தியாலயம்.

## மஜிக்



தேவையான பொருட்கள்: ஒரு மீற்றர் அளவுள்ள ரிபன் ஒன்று, இரண்டு பிளாஸ்டிக் வளையல்கள்.

செய்முறை: சபையில் ஒருவரைக் கூப்பிட்டு ரிபனை எடுத்து, உங்கள் இரண்டு கைகளையும் இரண்டு முனையால் படத்தில் உள்ளபடி கட்டச் சொல்லவும். பிறகு, மேசை மீது உள்ள ஒரு வளையலை உங்கள் இடது கையால் எடுத்து எல்லாரிடமும் காட்டுங்கள். பிறகு மஜிக் மந்திரம் சொல்லி இரண்டு நொடி பின்னால் திரும்பி முன் திரும்பவும்.

இப்போது, நீங்கள் கையில் எடுத்த வளையல் திடீரென்று உங்கள் கையில் உள்ள ரிபனில் நுழைந்து தொங்கும். இது எப்படி என்று வியந்து போவர். இது தான் மஜிக் என்று சொல்லி ரிபனை அவிழ்த்து விடவும்.

இந்த மஜிக் செய்யும் ரகசியம்: இந்த மஜிக் செய்ய நீங்கள் கோட் அணிந்திருக்க வேண்டும். ஒரு வளையலை முன்னரே உங்கள் வலக்கையில் மாட்டி வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

இது யாருக்கும் தெரியக் கூடாது. நீங்கள் மேசை மீதுள்ள வளையலை உங்கள் இடது கையில் எடுத்து சில நொடி திரும்பும் போது, உங்கள் இடது கையில் உள்ள வளையலை உங்கள் கோட் பையில் போட்டுவிட்டு, உங்கள் வலது கையில் மாட்டியுள்ள வளையலைத் தளர்த்தி கை வழியாக ரிபனில் கொண்டு வர வேண்டும். இப்படிச் செய்து திரும்பி கைகளை உயர்த்திக் காட்டி எல்லாரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தலாம்.




# தாயார் ஊக்குவித்த விஞ்ஞானி

இளம் வயதிலேயே சிறந்த அறிவாளியாக விளங்கினார். இருந்தாலும், அவர் எந்த வேலையையும் ஒருமைப்பாட்டுடன் செய்ய வில்லை என்பதால் அவரது தாயார் மிகவும் வருந்தினார்.

ஒருநாள் அவரை அழைத்து பூதக் கண்ணாடியையும் சில காகிதங்களையும் கொண்டு வரச் சொல்லிக் காகிதங்களை கீழே போட்டுக் கண்ணாடியை வெய்யிலில் காட்டி னார்.

பூதக்கண்ணாடியைப் பிடித்த தாயின் கைகள் இங்கும் அங்குமாய் அசைந்து கொண்டிருந்தது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு தனது கைகளைப் பூதக்கண்ணாடியின் ஒளிக்குவியல் காகிதத்தின் மேல் படுமாறு நீட்டினார். ஒளியின் ஒரு முனையில் தீ காகிதத்தை எரித்தது. இதைக் கவனத்துடன் பார்த்த அவர் ஆச்சரியப்பட்டார்.




உடனே அவரது தாயார், ஒருமுகப்படுத்திய ஒளிக்கதிர்கள் நெருப்பாகிக் காகிதத்தை எரிக்கும். ஆனால் ஒருமுகப்படுத்தாத கதிரின் ஒளியில் நெருப்பு உண்டாகாது.

அதுபோல் நீயும் உள்ளத்தை ஒருமுகப்படுத் தினால் எந்த வேளையிலும் வெற்றி அடையலாம் என்று அவருக்கு அறிவுரை கூறினார்.

அன்று முதல் தாயின் அறிவுரையை மனதிற் கொண்டு மன ஒருமைப்பாட்டுடன் தனது செயல்களைச் செய்ய தொடங்கியவர் தான் இராமன், பிற்காலத்தில் உலகமே போற்றும் சி.வி இராமன் என்று ஆனார்.

சந்திரசேகர வெங்கட ராமன் நவம்பர் 7 1888 நவம்பர் 21 1970 பெரும் புகழ் நாட்டிய இந்திய அறிவியல் அறிஞர் ஆவார். இவர் 1930ல் இயற்பியல் துறைக்கான நோபல் பரிசைப் பெற்றார். ஒளி ஒரு பொருளின் ஊடே செல்லும் பொழுது சிதறும் ஒளியலைகளில் ஏற்படும் அலைநீள மாற்றத்தை இவர் கண்டுபிடித்தார். இப்படிச் சிதறும் ஒளியின் அலைநீள மாற்றத்திற்கு இராமன் விளைவு என்று பெயர். இக்கண்டுபிடிப்புக்குத் தான் இவருக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு இன்று பொருள்களின் பல விதமான பண்புகளைக் கண்டறிய மிகவும் பயனுடையதும் உலகில் புகழ் பெற்றதும் ஆகும்.

சி.வி.இராமன் நவம்பர் 7 ஆம் நாள் 1888ஆம் ஆண்டில் இந்தியாவில் தமிழ்நாட்டிலே உள்ள திருச்சிராபள்ளிக்கு அருகில் அமைந்த திருவானைக்காவல் எனும் ஊரில் பிறந்தார். இராமன் அவர்கள் சென்னையிலே உள்ள பிரெசிடென்சிக் கல்லூரியில் 1902ஆம் ஆண்டு நுழைந்து 1904ல் கலை இளநிலை (பி.ஏ) பட்டம் பெற்றார்.



அண்ணா நீங்கள் சொன்னீர்கள் செடிகளுக்கு உயிர் உண்டென்று நாம வாயினால் உணவு சாப்பிட்டு சக்தி பெறகின்றோம்.

தங்கா. அதனை கண்டுபிடிக்க ஒரு சிறிய வழி

ஒரு வெற்று போத்தலை எடுத்து கொள்ளவும்

அதில் தண்ணீரை நிரப்பவும்

அதில் சில சொட்டுக்கள் மை சேர்க்கவும்



செடியொன்றை பிடிங்கி வேர் நன்றாக தண்ணீரின் அடியில் படும்படி போத்தலில் வைக்கவும்.

ஒரு பிளாஸ்ரிக் துண்டினால் வாயை இறுக்கி மூட வேண்டும். ஏன் வாயை மூட வேண்டுமெனில் தண்ணீர் ஆவியாகாமல் இருப்பதற்கு

அட இலைகள் எல்லாம் சிவப்பா மாறிவிட்டதே. போத்தலில் ஓட்டை இல்லை. ஆனால் தண்ணீரின் அளவ குறைந்துள்ளதே. இது என்ன மாயம்.

நாம் உண்ணும் உணவில் இருந்து சக்தி பெறுகின்றோம். அதே போல் தான் செடிகளும் . வேர்கள் தான் செடிகளின் வாய். தண்ணீர் மட்டும் போதுமா செடிகளுக்கு? எப்படி கனிமம் மற்றும் உரத்தை நீரில் இருந்த உறிஞ்சி கொள்கின்றதோ அதே போல் தான் நிறத்தையும் உறிஞ்சிவிட்டது.

சரியாக சொன்னாய் அண்ணா. இப்ப தான் எனக்கு தெளிவாக விளங்கியிருக்கு. நன்றி அண்ணா.

# கொஞ்சம் சிரியுங்கள்

ஆங்கிலேயர் ஒருவர் கனடாவிலிருந்து லண்டனுக்குக் கப்பல் பயணம் மேற்கொண்டார்.

பகலுணவு வேளையின் போது மேசைக்குப் போய்த் தமக்கு ஒதுக்கப்பட்டிருந்த 27 ஆம் எண் நாற்காலியில் அமர்ந்தார். எதிர் இருக்கைக்காரர் இவரை நோக்கி 'போனப்பேத்தி' என்றார்.

இவர் அவரிடம் 'வில்லியம் நார்ட்டன்' என்ற தம் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண் டார். ஒருவர் சொன்னது மற்றவருக்குப் புரியாததால் அதற்கு மேல் உரையாடல் தொடரவில்லை.

இரவு உணவு சமயத்திலும் அவர் 'போனப்பேத்தி' என்றபோது 'மதியம்தான் அறிமுகம் ஆகிவிட்டதே மீண்டுமா?' என்றெண்ணிய ஆங்கிலேயர் 'வில்லியம் நார்ட்டன்' எனச் சிறிது எரிச்சலுடன் பதிலளித்தார்.

மறுநாள் காலையிலும் இந்த நிகழ்ச்சி தொடர்ந்தமையால் உண்டு முடித்தகையோடு கப்பல் தலைவரைப் போய்ப் பார்த்த ஆங்கிலேயர் வேறு இருக்கையை ஒதுக்கிக் கொடுக்கக் கோரினார்.



'ஏன்? என்ன சிக்கல்?'

'எனக்கு எதிரே அமர்கிற பைத்தியக்காரர் ஒவ்வொரு தடவையும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு வெறுப்பேற்றுகிறார்.'

'அப்படியிருக்காதே! என்ன பெயர் சொல்கிறார்?'

'போனப்பேத்தி'

தலைவருக்கு விவரம் விளங்கிற்று.

அவர் புன்னகையுடன் 'அது அறிமுகமல்ல. அவர் பிரெஞ்சுக்காரர் என்று தெரிகிறது. சாப்பிடும் முன்பு போனப்பேத்தி என்று சொல்வது அவர்கள் வழக்கம். அதற்கு நல்ல பசி என்று பொருள். உங்களுக்கு நல்ல பசி உண்டாகட்டும். நிறைய சாப்பிடுங்கள் என அவர் வாழ்த்துகிறார்'

'அப்படியா? மன்னிக்க வேண்டும். நான் தவறாகப் புரிந்து கொண்டேன்'

பகலுணவு மணியடித்ததும் 'இப்போது நான் முந்திக் கொள்ள வேண்டும்' என்று முடிவு செய்த ஆங்கிலேயர் விரைந்து போய் உட்கார்ந்து காத்திருந்தார். பிரெஞ்சுக்காரர் வந்ததும் 'போனப்பேத்தி' என மலர்ந்த முகத்துடன் வாழ்த்தினார்.

அவரும் புன்னகைத்து சொன்னார் 'வில்லியம் நார்ட்டன்'

## காதறுத்த ஊசி

ஊசி ஒன்று தன் ஒரு முனை கூர்மையாக இருப்பதில் பெருமையடைந்தது. ஆனால் தன் மறுமுனை ஓட்டையாக இருப்பதால் அதை அவமானமாகவும் நினைத்தது. ஒரு நாள் அதன் மறுமுனை உடைந்து போனது.


காதறந்த நிலையில் அந்த ஊசியைப் பயன்படுத்தியவர் தூக்கியெறிந்தார். அப்போது தான் அந்த ஊசிக்குத் தான் அவமானமாக நினைத்த மறுமுனையின் முக்கியத்துவம் தெரிந்தது. ஒருவர் கூர்மையான புத்தியுள்ளவராக இருந்தால் மட்டும் எதையும் சாதித்து விட முடியாது. கூர்மையான ஊசி தன்னுள் நூலை நுழைத்துக் கொள்ள காது இருப்பதால் தான் அது பயன்படுத்துவதற்கு உதவியாக இருக்கிறது. காதறந்த ஊசி பயன் இல்லை. அது போல் பிறரைத் தன்னுள் ஏற்றுக் கொள்ளும் அன்பு இருந்தால் மட்டுமே சிறந்தவனாகத் திகழ முடியும்.

## மேடைப் பேச்சு வராத ரைட்சகோதரர்கள்

விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களுக்கு மேடைப்பேச்சு வராது. அவர்கள் கண்டுபிடித்த விமானத்தைப் பற்றி விளக்க ஒரு கூட்டம் நடைபெற்றது. விஞ் ஞானிகளும் அறிஞர்களும் கூடியிருந்தார்கள். முதலில் பேச வந்த ஆல்பர் 'தம்பி வில்பர் இது குறித்து விளக்கமாகப் பேசுவார்.' என்று கூறிவிட்டு அமர்ந்து விட்டார். அடுத்து வில்பர் பேசுவார் என்று அறிவிக்கப்பட்டது. வில்பர் 'நான் பேச வேண்டியதை அண்ணன் ஆல்பர் பேசி விட்டார். எனவே விடை பெறுகிறேன்' என்றபடி அமர்ந்து விட்டார்.

**ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி. அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.**

நிலவன்




**1.**
"பிரியமான தோழி" திரைப்படத்தை தயாரித்த நிறுவனம் எது? ஏ.வி.எம் எனின் 5க்கும், பிரமிட் எனின் 19க்கும், மெட்ராஸ் டாக்கீஸ் எனின் 12க்கும் வாருங்கள்.

**2.**
உங்கள் விடை தவறு. சரியான பதில் 10இல்.

**3.**
தவறு. இதுவும் தேவயானியின் வெற்றிப் படங்களில் ஒன்று தான். சரியான பதில் 16இல்.

**4.**
ம்..தப்பான பதில் சரியான பதில் 10இல்.

**5.**
ம். சரியான பதில் தான் அடுத்த கேள்வி 15 இல் ரெடி.

**6.**
ம்.. தெய்வ மகன் தான். சரியான பதில். வாழ்த்துக்கள். அடுத்த வாரம் சந்திப்போம்.

**7.**
37,000க்கும் மேற்பட்ட பாடல்களை பாடி கின்னஸில் இடம் பிடித்த தமிழ் பாடகியார்? ஜானகி எனின் 11க்கும், சுப்புலட்சுமி எனின் 18க்கும், சுசீலா எனின் 20க்கும் ஓடுங்கள்.

**8.**
அமரன் படத்தில் தேவயானி நடிக்கவே இல்லையே. சரியான விடை16 இல்.

**9.**
தேவயானி அறிமுகமான தமிழ் படம் எது? சூரிய வம்சம் எனின் 3க்கும், தொட்டாச் சிணுங்கி எனின் 16க்கும், அமரன் எனின் 8க்கு செல்லலாமே.

**10.**
கரெக்ட். சகாப்தம் தான் சரியான பதில் அடுத்த கேள்வியை 7இல் எதிர்பாருங்கள்.

**11.**
தவறு. விடை அறிய 20க்கு வாருங்கள்.

**12.**
தவறான பதில் ஆச்சே... சரியான பதில் ஏ.வி.எம் தான். அடுத்த கேள்வி 15இல்

**13.**
ஆஸ்கார் வரைக்கும் சென்ற முதல் தமிழ் திரைப் படம் எது? தெய்வ மகன் எனின் 6க்கும், நாயகன் எனின் 14க்கும், குணா எனின் 17க்கும் செல்லுங்கள்.

**14.**
நாயகன் ஆஸ்காருக்குச் சென்றிருந்தாலும் முதல் படம் அதுவல்ல. சரியான பதிலை 6இல் அறிந்து கொள்ளுங்கள்.

**15.**
விஜயாந்தின் மகனான சண்முகபாண்டியனின் முதல் படம் எது? "அடிடா மேளம்" என்றால் 2க்கும், "சகாப்தம்" என்பவர்கள் 10க்கும், "வீராதி வீரன்" என்பவர்கள் 4க்கும் செல்லுங்கள்.

**16.**
வாவ், சரியான பதில் தான் அடுத்த கேள்வி 13இல் தான்.

**17.**
குணா இல்லை. தெய்வ மகன் தான் சரியான பதில். காத்திருங்கள் அடுத்த வாரம் சந்திப்போம்.

**18.**
ம்ஹூம்... அந்தப் பெருமை சுசீலாவைத் தான் சாரும். இப்போது 9இல் உள்ள அடுத்த கேள்விக்குச் செல்லுங்கள் பார்க்கலாம்.

**19.**
தவறான பதில். சரியான பதில் 5இல்.

**20.**
சுசீலா தான் சரியான தெரிவு. அடுத்த கேள்வி 9இல்.





# இருபாலை இலங்கை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். அதே போல் பாடசாலைகளிற்கும் நமது சமூகத்தில் முக்கியத்துவம் உள்ளது. பாடசாலை இல்லா ஊரில் குடியிருக்காதது நமது சமூகம். ஆனால் இன்று பல பாடசாலைகள் கேட்பார் அற்றதை போன்று மாணவர்கள் வருவார்களா என்று ஆசிரியர்கள் தவம் கடக்கும் நிலையில் உள்ளன. குறிப்பாக கிராமப்புற பாடசாலைகள்.

இருபாலை கிழக்கு இலங்கை கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையும் இதே நிலையில்தான் உள்ளது. 110 வருடம் பழமை வாய்ந்த இந்த பாடசாலையில் தற்பொழுது 30 வரையான மாணவர்கள்தான் கல்வி கற்கிறார்கள். ஆசிரியர்கள் ஐந்துபேர் கடமையாற்றுகிறார்கள்.

ஆரம்பத்தில் ஒரு கொட்டிலாக அமைந்திருந்த இந்த பாடசாலையை 1942ம் ஆண்டு உகந்தா விசுவலிங்கம், சண்முகலிங்கன் என்பவர்கள் கொடுத்த நன்கொடையினால் "டா" வடிவிலாக கட்டிடம் ஒன்று எழுந்தது. அதன் பின்னர் கல்வித்திணைக்களத்தின் உதவியுடன் இன்னுமொரு கட்டிடம் கட்டப்பட்டது. அத்தோடு GTZ நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடமும் திருவப்பட்டது.

"கற்க கசடற" என்ற மகுடவாசகத்தை கொண்டுள்ள இப்பாடசாலையில் கசடற கற்பிக்கும் ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் மாணவர்களும் பௌதீகவளங்களும் இல்லாமையே மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

இந்த பாடசாலையை சுற்றியுள்ள ஊர் மக்கள் பெரும்பாலும் நகரப்புற பாடசாலைகளிற்கே தமது பிள்ளைகளை அனுப்புகின்றனர். அதனால் இந்த பாடசாலை கவனிப்பார் அற்று கிடக்கிறது. இதற்கு பௌதீக வளங்களும் காரணமாகலாம். கல்வி கற்பதற்கான வசதியின்மை உள்ளதால்தான் தமது பிள்ளைகளை வெளியூர் பாடசாலைகளில் சேர்ப்பதாக சிலர் கூறுகின்றனர். சிலர் சிறந்த கல்வி இல்லை என்கின்றனர். ஆனால் கல்வியில் சிறந்த முறையில் இப்பாடசாலை உள்ளதாக வலயக்கல்வி அலுவலகத்தில் பதிவுகள் கூறுகின்றன.

வலிகாமம்வடக்குவலயத்தில்உள்ள ஆரம்ப பாடசாலைகளின் கல்விநடைமுறையில் முதல் பத்து இடத்தில் இந்த பாடசாலையும் உள்ளது. இந்த பாடசாலையிலிருந்து தொடர்ந்து மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைகிறார்கள். ஆனால் பிள்ளைகளை இங்கு அனுமதிக்க பெற்றோர் அதிகம் தயங்கும் விசித்திரமும் நீடிக்கிறது.

இங்கு வரும் மாணவர்கள் நடுத்தர குடும்பங்களை சேர்ந்தவர்கள். பிள்ளைகளிற்கு கல்வி கற்பிக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்களின் பெற்றோரிடம் உள்ளது. பிள்ளைகளுக்கான சின்ன சின்ன தேவைகளை சில நிறுவனங்கள் நிறைவு செய்துள்ளன. அரசாங்க உணவுத்திட்டதின்படி மதிய உணவு வழங்கப்படுகின்றது.

கல்விகற்பிப்பதற்காகதரமான ஆசிரியர்கள் உள்ளனர். அப்படியிருக்கையில் இந்த பாடசாலையின் பிரச்சினைதான் என்ன? மாணவர்கள் பற்றாக்குறையும் பௌதீகவள பற்றாக்குறையும்தான் இப்பாடசாலையின் குறையாகவுள்ளது.

ஒவ்வொரு ஊரிலும் உள்ள பாடசாலைகள் அந்த ஊர் மக்களுக்கு சொந்தமானவை. அப் பாடசாலைகளின் வளர்ச்சியில் ஊர் மக்களுக்கே அதிக உரிமையுள்ளது. எனவே உங்கள் பிள்ளைகளை உங்களுடைய ஊர் பாடசாலையில் சேர்த்து அதற்கான பௌதீக வளங்களை கேட்டு பெற்று ஊருக்கொரு சிறந்த பாடசாலையை உருவாக்குவது ஒவ்வொருவரின் கடமையும் ஆகும்.

நகர்ப்புற,பிரபல பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் படையெடுப்பதை தடுப்பதற்காக, வீடுகளிற்கு அருகிலுள்ள பாடசாலைகளிலேயே தரம் ஒன்றில் மாணவர்களை அனுமதிக்கும்நடைமுறையைகல்வித்திணைக்களம் ஆரம்பித்துள்ளது. ஆனால்,கிராமப்புற பாடசாலைகள் மூடும் நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றன. கல்வித்திணைக்களத்தின் முயற்சிகளிற்கு போதிய பலன் கிட்டாததற்கு முக்கிய காரணம் வளப்பங்கீடு.

நகர்ப்புற பிரபல பாடசாலைகளிற்கு வளங்கள் அதிகமாக வழங்கப்படுகிறது. கிராமப்புற பாடசாலைகளிற்கு வளங்கள் ஒதுக்கப்படுவதில்லை. இந்தகுறையை சரிசெய்தால் கிராமப்புற பாடசாலைகள் புதுப்பொலிவு பெறும்.


இப் பாடசாலையில் தற்பொழுது 100 மாணவர்கள் வரையில் கல்வி கற்க கூடிய வசதியுள்ளது. ஆனால் இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை முப்பது. காரணம் ஊரில் உள்ள மக்கள் தமது பிள்ளைகளை வெளியூர் பாடசாலைகளில் இணைக்கிறார்கள். ஆனால் இந்த பாடசாலைக்கு சிறந்த மாணவர்களை உருவாக்கும் சக்தி உள்ளது. அதற்கான ஒத்துழைப்பு இல்லாமையே பிரச்சனையாக உள்ளது. பாடசாலைக்கு பௌதீகவளங்கள் அவசரமான தேவையாக உள்ளன. முயற்சி செய்து அதை பெறலாம். ஆனால் மாணவர் பற்றாக்குறை பெரிய பிரச்சனை. இந்த ஊர் மக்களும் சமூக ஆர்வலர்களும்தான் இதை சரி செய்யலாம். ஊர் பெரியவர்களும் மக்களும் ஆதரவு கொடுத்தால் சிறந்த பாடசாலையாக இதை நிமிர்த்த முடியும். கல்வி கற்கும் மாணவர்கள் திறமையுடையவர்களாகவே உள்ளனர். தரமான ஆசிரியர்களும் உள்ளனர்.

இருபாலை இலங்கை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கும் தேவையான வளங்கள் கிடைத்தால் புதுப்பொலிவு பெறுமென்பது நிச்சயம்.

# தனியொருவன் என்கிறார் மத்யூஸ்

டிசம்பர் 26ம் திகதி தென்னாபிரிக்காவுடன் நடக்கும் முதலாவது டெஸ்ட் போட்டியை நம்பிக்கையுடன் காத்திருப்பதாக கூறியுள்ளார் இலங்கை அணிக்கு திரும்பியுள்ள அணித்தலைவர் அஞ்சலோ மத்யூஸ். அண்மைக்காலமாக உபாதைகளால் பாதிக்கப்பட்டு, அணியிலிருந்து விலகியிருந்த மத்யூஸ், தென்னாபிரிக்காவில் அதிகளவு பந்துவீச்சிலும் ஈடுபடுவேன் என்றுள்ளார்.

தனது உடற்தகுதி குறித்து முழுமையான திருப்தி வெளியிட்டுள்ள மத்யூஸ், "தென்னாபிரிக்காவில் அதிகளவு பந்துவீச முடியுமென்றால், கடந்த சில ஆண்டுகளை போல அணிக்கு நிறைய பங்களிப்பு வழங்க முடியும்" என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.




மெதுவாக விக்கெட் விழும் ஆசிய ஆடுகளில்என்றால் அதிகமாக பந்துவீசியிருக்க மாட்டேன். ஆனால் வேகப்பந்திற்கு உகந்த தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற இடங்களில் அணிக்கு விரைவான விக்கெட்டுக்கள் அவசியம். அதற்கு என்னாலான பங்களிப்பை செய்ய வேண்டும்.

கடந்த யூன் மாதம் இங்கிலாந்துடன் நடந்த ஒருநாள் தொடரின் முதல்போட்டியில் மத்யூஸ் பந்துவீசினார். ஆறு ஓவர்கள் வீசியதன் பின்னர் அவரது இடதுதொடையில் ஏற்பட்ட உபாதையை (விறைப்பு ஏற்பட்டது) அடுத்து பந்துவீசவில்லை. அந்த தொடரின் எஞ்சிய போட்டிகளில் விளையாடினாலும் அவர் பந்துவீசவில்லை.


கடந்த ஓகஸ்ட்டில் அவுஸ்திரேலியாவுடனான ஒருநாள் போட்டியில் தசையில் ஏற்பட்ட கிழிவையடுத்து போட்டிகளில் இருந்து ஒதுங்க வேண்டியதாகிவிட்டது. அண்மையில் நடந்த சிம்பாவே டெஸ்ட், முத்தரப்பு ஒருநாள் தொடர்களையும் இழந்துள்ளார். இதிலிருந்து மீண்டு வந்துள்ள மத்யூஸ் "காயங்கள் என்னை ஒன்றும் செய்யாது. நான் முன்னரைபோல கடுமையாக உழைப்பேன். கடந்த நான்கு வருடங்களில் எல்லா அணிவீரர்களையும் விட நான்தான் அதிகளவில் சகலதுறைகளிலும் உழைத்தவன்" என்றும் கூறியுள்ளார்.

# பதறிய இந்தியர்கள்

விராட் கோலி சிறந்த டெஸ்ட் வீரர் அல்ல என்றுள்ளார் இங்கிலாந்தின் முன்னணி வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன். பவுன்ஸ், ஸ்விங் இல்லாத இந்திய ஆடுகளங்களில் கோலியின் போதாமைகள் தெரிவதில்லை என்றும் கூறியுள்ளார். அவரது கூற்று இந்தியர்களை வெறுப்பேற்றியுள்ளது.

மும்பை டெஸ்டில் கோலி இரட்டை சதமடித்ததன் பின்னர் அண்டர்சன் செய்தியாளர்களை சந்தித்தார். "கோலியின் துடுப்பாட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதாக நான் கருதவில்லை. அவரது ஆட்டத்தில் உள்ள கோளாறுகள் இந்தப்பிட்சில் தெரிவதில்லை. அவரது உத்திகளிலுள்ள போதாமைகளை இந்த பிட்சுகள் எளிதாக மறைத்து விடுகின்றன. மட்டையின் விளிம்பை பிடிக்கும் பிட்சுகள் இங்கு இல்லை. இங்கிலாந்தில் கோலியை அப்படித்தான் வீழ்த்தினோம். ஆனால் இந்தியாவிலுள்ள கோலிக்கு சாதக பிட்சுகள்" என்றுள்ளார்.

அண்டர்சன் இப்படி கூறியதையடுத்து, அந்த டெஸ்டின் இறுதிநாளன்று அஸ்வின் அண்டர்சனுடன் ரகளையில் ஈடுபட்டார். இந்தியாவின் முன்னாள் வீரர்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.






# பரம்பரை பெருமையை காப்பாற்றுவாரா?

அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் தொடர் பாகிஸ்தானிற்கு உண்மையிலேயே மிகச்சவாலாக இருக்கப்போகிறது. நியூசிலாந்தின் வேகப் பந்து வீச்சு கூட்டணியை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் அண்மையில் மண் கவ்வியது. ஆனால் தற்போதைய பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சு கூட்டணி அவுஸ்திரேலியாவிற்கு நிறைய சவால் விட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த பரபரப்பிற்குள் அதிகம் கவனிக்கப்படாமல் இருக்கிறார் யசீர் ஷா. தற்போதைய சுழல்பந்தாளர்களில் விரைவு விக்கெட் வேட்டைக்காரராக சாதித்தவர். வேகப்பந்துவீச்சுக்கு பெருமளவு கைகொடுக்கும் அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் முற்றிலும் ஒருதலைப்பட்சமானவையல்ல. சுழலுக்கும் கைகொடுக்கும். இதனால் யசீரின் விக்கெட் கணக்கில் அதிகமான வரவிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானிய சுக்ளி பந்துவீச்சாளர்களை அவுஸ்திரேலியா மரியாதையாகத்தான் எதிர்கொண்டு வந்தது என்ற வரலாறு, லெக்பிரேக் கூக்ளி வீச்சாளரான யசீர் ஷாவை நம்பிக்கை கொள்ள வைக்கும். அப்துல் காதிர், முஸ்தாக் அஹமட், டினேஸ் கனேரியா போன்ற மூத்த லெக்பிரேக், கூக்ளி வீச்சாளர்கள், ஏனைய சுழல்வீச்சாளர்களை விட சிறப்பான பெறுபேற்றை அவுஸ்திரேலியாவில் பெற்றுள்ளனர். எனினும், இவர்கள் அனைவரையும் விட மேம்பட்டவராக தெரியும் யசீர் நிச்சயம் அவுஸ்திரேலியர்களிற்கு தலையிடியானவராக இருப்பார்.

பாகிஸ்தானிய லெக்பிரேக் பாரம்பரியத்தின் வாரிசாக தோன்றாமல் யசீர் வேறுவிதமாக தோன்றுகிறார். பந்தை விடுவிக்கும் சமயத்தில் விக்கெட் முனை நோக்கிய அவரது உந்துதல் ஒரு வேகப் பந்துவீச்சாளருக்குரியது. கையிலிருந்து விடுபட்டதும் ஏனைய சுழல்பந்தாளர்களின் வீச்சுக்களை விட விரைவாக துடுப்பாட்ட முனையை எட்டிவிடுகிறது. அதனால் சிறிய திருப்பத்தை காட்டினாலோ, அல்லது காட்டாவிட்டாலோகூட ஆபத்தான வீச்சாக அமைந்துவிடுகிறது.

அவரது முதல் வருட பெறுபேறே ஏனைய பாகிஸ்தானிய லெக்பிரேக் வீச்சாளர்களை விட தனித்துவமானவர் என்பதற்கு ஆதாரம். அவரது விக்கெட்டுக்களில் 45% விக்கெட்டுக்கள் எல்.பி அல்லது போல்ட் முறையானவை. முதல் இருபது டெஸ்டில் கனேரியாவிற்கு 25%, காதிருக்கு 36% ஆகவும் இது இருந்தது. முஸ்தாக் மட்டும் சற்று நெருங்கி 40% ஆக உள்ளார். யசீருக்கு ஆர்டிஎஸ் முறை சாதகமாக இருக்கிறதென்ற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டாலும், அது மட்டுமே அவரை முன்னிலை பெற வைத்திருக்காது.

இப்பொழுது தொடர் ஆரம்பித்துவிட்டது. யசீர் என்ன செய்கிறார் என்பதை காண, மூன்று போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிவரை காத்திருப்போம்.



## Kamal Gnani

படித்து சிரித்தது...

பாராளுமன்றத்தின் முன்புறம் ஒரு சிறுவன் சைக்கிளை நிறுத்தி விட்டு, பக்கத்தில் எங்கோ நடந்து செல்வதை பார்த்து, அருகில் நின்ற போலீஸ்காரர் அழைத்தார்.
" தம்பி...இந்த ரோடு எதுன்னு தெரியாதா ? நீ பாட்டுக்கு சைக்கிளை நிறுத்தி விட்டு செல்கிறாய் ? இந்த வழியே எம்பிக்கள்,சமயங்களில் முதலமைச்சர்கள், கேபினெட் அமைச்சர்கள்,ஏன்...குடியரசு தலைவர்,அரசியல் தலைவர்கள் எல்லோரும் இந்த வழியாகத்தான் போவார்கள்.."

சிறுவன் இயல்பாக சொன்னான் : " பயப்பட வேண்டாம் சார்...நான் சைக்கிளை லாக் பண்ணிட்டுத்தான் போறேன்.."



தமிழன் என்கிற திமிரு எனக்கும் உண்டு






## Yaaru Yapadio Nanga Ipadi Tha





## Daksan Dx

மனைவி : இன்னைக்கு சமைக்கல, ஹோட்டலில் பார்சல் வாங்கிட்டு வந்துடுங்க

கணவர் : ஏன், என்ன ஆச்சு ?

மனைவி : (கோபமும், சோகமுமாக) எனக்கு உடம்பு சரியில்ல.

கணவர் : காலையில நல்லாதானே இருந்த, என்ன திடீர்னு ?

மனைவி : உடம்புக்கு முடியலன்னா, முடியல, அவ்வளவுதான். நீங்க டின்னர் வாங்கிட்டு வாங்க.(சற்று சத்தமாகவே)

கணவர் : ஓகே ஓகே, கோவபடாத, நீ ரெடியா இரு, நாம அப்பல்லோ போய் டாக்டர் பார்த்திட்டு, அப்படியே டின்னருக்கு போயிடலாம்.

மனைவி : (நிதானமாக)ஒன்னும் வேணாம், நான் சமைக்கிறேன், நீங்க வீட்டுக்கு வாங்க. (பாவிபய, டின்னர் கேட்டதுக்கே, சாவடிக்க பார்க்குறானே)




தெரியாது சொல்ல மாட்டன்






100% சிரிப்பு இலவசம்





## Samanthy Rasamanoharan

ஓர் உறவு நம்மையே சுற்றி வருகிறது என்றால் போவதற்கு வேறு இடம் இல்லாமல் இல்லை நம்மை இழக்க மனம் இல்லாமல் தான்..!!



## Sisitharan Thankeswaran

25,000/= தண்டப்பண விவகாரம்,,, அவயளுக்கு நல்ல கலக்சனை குடுக்கும்,
25,000/= கோட்டில கட்டப்போறியா? இல்ல
5000/= எனக்கு வெட்டப்போறியா ?



## Araathu R

ஜெயா டிவி அம்மா அம்மானு கூட இவ்ளோ விளம்பரப்படுத்திகிட்டது இல்லை. சின்னம்மா சின்னம்மான்னு நாள் முழுக்க கதறிக்கொண்டே இருக்கிறது. நள்ளிரவு போலி டாக்டர்களின் நிகழ்ச்சி தோற்றது போங்கள்.



## Unmaya Sonnen

ஒவ்வொரு இண்டர்வியூலயும் "Tell me about yourself ?" கேட்க்கும்பொழுது,'போதும்டா வீரா முடியலடா', பருத்திவீரன் முத்தழகு பிரியாமணி நினைவுக்கு வருகிறார்:)



## Suhir Sathya

Call பண்ணும்போது நண்பன், 5 நிமிஷத்தில் வந்துடுவேன் மச்சான் என்று சொன்னால், இடைப்பட்ட நேரத்தில் உங்களுக்கு செவ்வாய் கிரகத்துக்கும் போயிட்டு வருவதற்கு நேரம் இருக்கிறது என அறிக.



## Mynthan Shiva

'Bastille Day' என்றொரு படம்.
சமூக வலைத்தளங்களில் கேஷ்டேக்'ஐ பாவிப்பதன் மூலம் எப்படியாக ஒரு நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தலாமென்று அனுமானித்து,அதன்மூலம் தங்களின் ரகசிய திட்டங்களை செயல்படுத்த முனையும் ஆதிக்க சக்தியினரை பற்றியது.சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க,போலீசார் போன்று வேடமணிந்த கபடதாரிகள் அப்பாவிகளை தாக்குவதாக வீடியோ தயாரித்து அதனை சமூகவலைத் தளங்களில் பரப்பி,அதனைப் பார்த்து பொங்கி எழுபவர்களை ஒரே கேஷ்டேக்கில் ஒன்றிணைத்து திசைதிருப்பிவிட்டு, தங்கள் காரியங்களை செய்வனே மறுபக்கம் நடாத்திச் செல்வது அதில் ஒரு சிறிய காட்சி.
அப்பலோ முதல் பொதுபலசேனா வரை அத்தனையிலும், அல்லது பெரும்பாலானவற்றின் பின்னணியில் இத்தகைய மிகப்பெரும் அரசியல்/பொருளாதார நலன் ஒளிந்திருக்கும்.
அது ஆள்பவர்களுக்கும்,ஆள்பவர்களை தங்கள் கைப்பிடியில் ஆட்டிவிப்பவர்களுக்கும் நன்மையையும்,தலையிடியற்ற executionற்கும் உதவியாயிருக்கும்.
இடையில் பேஸ்புக்/ட்டுவிட்டர் ட்ரெண்டிங்'ஐ பார்க்கும்போது,நம்மளை லூசுப்....புண்ணாக்குகள் என்று சிரித்துக் கடப்பார்கள்.




| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No. 72, Grand Bazaar, Jaffna. Tel : 021 222 4743 Fax : 021 222 7645 | No. 80/24, Kasthuriyar Road, Jaffna. Tel : 021 222 4643 | No. 195, Power House Road, Jaffna. Tel : 021 222 4933 021 221 9933 |

E-mail : topazagn@gmail.com

















இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 18.12.2016 அன்று வெளியிடப்பட்டது.